# பெரியார் தொலைநிலைக்கல்வி நிறுவனம்

**(PRIDE)**

## பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் – 636 011

**இளங்கலை தமிழ் இலக்கியம்**

**இரண்டாமாண்டு**

**தாள் – 7 :** தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

(சேனாவரையர் உரை)

பாட ஆக்கம்
**முனைவர் கு. மகுடீஸ்வரன்**
தமிழ்த்துறைத் தலைவர்
கோபி கலை அறிவியல் கல்லூரி
கோபி **638 453.**

# 1. கிளவியாக்கம்

இயல் - 1

1.0 கிளவியாக்கம் - விளக்கம்:

சொல், கிளவி, மொழி, பதம் போன்ற சொற்கள் ஒரே பொருளைத் தருவன. எழுத்துக்கள் பற்றி எழுத்ததிகாரத்தில் விரிவாகத் தொல்காப்பியர் குறித்துள்ளார். சொற்கள் தனித்தும் தொடர்ந்தும் பொருள் உணர்த்துவதைச் சொல்லதிகார – கிளவியாக்கம் விளக்குகிறது.

திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் என்னும் அடிப்படையில் கிளவியாக்கம் சொற்களையும் தொடர்களையும் உணர்த்துகிறது. இவ்வியலின் நூற்பாக்கள் 'அறுபத்தொன்று' எனச் சேனாவரையர் குறிப்பிடுகிறார்.

1.1. திணை:-

திணை, உயர்திணை, அ∴றிணை என இருவகைப்படும்.

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே;

அ∴றிணையென்மனார் அவரல பிறவே;

ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே;

(-தொல், சேனாவரையம், நூற்பா – 1)

திணை என்னும் சொல்லுக்கு ஒழுக்கம் என்பது பொருளாகும். நல்லறிவின் பயனாக விளைவது ஒழுக்கம். இவ்வொழுக்கம் மக்களிடயே அமைந்து மேன்மேலும் வளர்வதால் மற்ற உயிர்களை விட மக்கட்குலம் உயர்வானதெனச் சிறப்பிக்கப்படுகிறது. நல்லது எது? தீயது எது? எனப் பகுத்துணர்ந்து அறிய இயலாத மற்றைய உயிர்களையும், உயிரல்லாத பொருள்களையும் ஒழுக்க உணர்வில்லாத அ∴றிணையெனச் சிறப்பில்லாத தொகுதியாக நம் முன்னோர்கள் பகுத்துள்ளனர்.

இவ்வாறு உலகப் பொருட்கள் யாவற்றையும் உயர்திணை, அ∴றிணை என இரண்டாக அடக்கி, அவற்றை ஆண்பால், பெண்பால், பலர்பால் ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து பால்களாகப் பகுத்து அறிந்து கொள்ளும் முறை நம் தமிழ் மொழியில் மட்டுமே அமைந்திருக்கின்றது. சொற்களின் வாயிலாகத் திணை, பால்களை அறிவிக்கும் முறை தமிழ்மொழியில் அன்றி வேறு எம்மொழியிலும் காணப்படாத சிறப்பியல்பாகும்.

1.2. பால் :-

உயர்திணை, அ∴றிணை என்னும் இருதிணைகளிலும் ஐம்பால்களை அடக்கியுள்ளனர். ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றும் உயர்திணையில் வரும். அ∴றிணையில் ஒன்றன்பாலும், பலவின்பாலும் இடம்பெறும்.

'ஆடூஉ அறிசொல்'- ஆண்பாலை உணர்த்துவது

'மகடூஉ அறிசொல்' – பெண்பாலை உணர்த்துவது

'பல்லோர் அறிசொல்' – ஆண், பெண் (பலர்பால்) என இருபாலையும் உணர்த்துவது.

'ஒன்றறி சொல்'- ஒன்றன்பாலை உணர்த்துவது

'பலவறி சொல்'- பலவின் பாலை உணர்த்துவது

என உயிர்திணையில் மூன்று பால்களும், அ∴றிணையில் இரண்டு பால்களும் அமையும்.

1.2.1. பேடி முதலிய சொற்கள்:-

உயர்திணையில் ஆண்மை திரிந்து பெண் தன்மை மிக்க பேடி என்ற சொல்லும், தெய்வத்தைக் குறிக்கும் பெயர்ச் சொற்களும் பால்களை அறிந்து கொள்ள இயலாதவை. உயர்திணை போன்றே ஆண், பெண் பலர் என்ற முப்பால்களாகப் பிரிந்து வழங்கும்.

'பேடி வந்தாள்' எனப் பெண்பாலையும்

'தேவன் வந்தான்' என ஆண்பாலையும்

தேவர் வந்தார் எனப் பலர் பாலையும் சுட்டி நிற்கின்றன.

## ஐம்பால் ஈறுகள்

1.2.2. ஆண்பால் ஈறு:-

ஆண்பாலைக் குறிக்கும் சொற்களில் உள்ள ஈற்றெழுத்து னகர ஒற்றாகும். இவ்வொற்று ஆண்பால் ஒருமையைக் குறிக்கும். (எ.கா) உண்டனன், உண்டான், உண்ணா நின்றனன் உண்ணா நின்றான், உண்பன், உண்பான், கரியன், கரியான் முதலியவை.

1.2.3. பெண்பால் ஈறு:-

பெண்பாலைக் குறிக்கும் சொற்களில் உள்ள ஈற்றெழுத்து ளகர ஒற்றாகும். இவ்வொற்று பெண்பால் ஒருமையைக் குறிக்கும்.

(எ.கா) சென்றனள், சென்றாள், செல்லா நின்றனள், செல்லா நின்றாள், செல்வள், செல்வாள், கரியள், கரியாள் முதலியவை.

1.2.4. பலர்பால் ஈறு:-

ரகரமாகிய மெய்யீறும், பகரமாகிய உயிர்மெய்யீறும் 'மார்' என்னும் இடைச்சொல் ஈறும் பலர் பாலைக் குறிக்கும் சொற்களின் ஈற்றிலே இடம் பெறும்.

(எ.கா) படித்தனர், படித்தார், படியா நின்றார், படிப்பர், படிப்பார், கரியர், கரியார் எனவும் கூறுப, வருப எனவும் கொண்மார், சென்மார் எனவும் வரும்.

1.2.5. ஒன்றன்பால் ஈறு:-

ஒன்றன்பாலைக் குறிக்கும் சொற்களில் இறுதியாக த, ட, ற என்னும் மெய்யெழுத்தின் மேல் ஏறி வருகின்ற குற்றியலுகரத்தை உடையதாகும்.

(எ.கா) வந்தது, வாரா நின்றது, வருவது, கரிது எனவும் கூயிற்று, கோடின்று எனவும், கொடுந்தாட்டு, குறுந்தாட்டு எனவும் நிற்கும்.

1.2.5. பலவின்பால் ஈறு:-

அ, அ, வ என்னும் மூன்று ஈறுகளும் பலவின்பாலை அறிவிக்கும் சொற்களாகும்.

(எ.கா) ஓடின, ஓடா நின்றன, ஓடுவன, கரியன எனவும் நில்லா, செல்லா எனவும் உண்குவ, தின்குவ எனவும் அமையும்.

1.2.7. ஈறுகள் வினையொடு வருதல்:-

உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டு திணைகளிலும் ஆண், பெண், பலர் ஒன்று, பல என்னும் ஐந்து பால்களைக் குறிக்க ன, ள, ர. ப. மார், து, று. டு, அ, ஆ, வ ஆகிய பதினொரு எழுத்துக்களும் வினைச் சொற்களோடு வரும்.

1.2.8. பெயரும் வினையும் ஒத்த பாலில் வருதல்:-

ன, ள, ர, ப, மார், து, று, டு, அ, ஆ, வ என்னும் பதினொரு ஈறுகள் பெயரிலும் வினையிலும் மயங்கி வருதல் கூடாது.

(எ.கா) அவன் வந்தான்

அரசி பயின்றாள்

அவர் ஓடினார்

அது சென்றது

அவை நின்றன

என்பன போன்று மயக்கம் கொள்ளாமல் வர வேண்டும்.

1.2.9. வழு:-

அவன் பாடினாள் எனபது போன்று மயங்குதல் கூடாது. திணை வழு, பால் வழு, மரபு வழு, செப்பு வழு, வினா வழு, இடவழு, கால வழு என வழு ஏழு வகைப்படும்.

அவன் வந்தான் - பால் வழு

அவன் வந்தது - திணை வழு

யான் வந்தாய் - இட வழு

நாளை (வந்தாய்) சென்றாய் - கால வழு

யானை இடையன்

ஆட்டுப் பாகன் } - மரபு வழு

1.2.10.வினாவும் விடையும் அமையும் வகை:-

சொல்லுதலையும், வினாக் கேட்டலையும் பிழையின்றில் பாதுகாத்தல் வேண்டும் என்பதைத் தொல்காப்பியர்,

‘செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்’

(- சொல் - 13) என்பார்.

வினாவே விடையாகவும் வரலாம். பதில் கூறும் போது உண்டாயா?

நான் உண்ணேனோ? உண்டேன் என்பதே பொருளாய் அமையும்.

கேள்விக்கு நேரடியான விடை வராத போதும் அல்லது சிறிது வழுவாக அமைந்தாலும் அதை நீக்குவது இல்லை. உண்டாயா? என்ற கேள்விக்குப் பதிலாக ‘வயிறு நொந்தது’ எனச் சொல்வர். இது மறைமுகவிடை எனக் கொள்ளலாம்.

சொல்லும் போதும், கேள்வி கேட்கும் போதும் சினைப் பொருள், முதற்பொருள் போன்ற பொருள்கள் பொருந்த வருதல் வேண்டும்.

(எ.கா) உம் அரசனைவிட எம் அரசன்

நல்லவன் எனவும்

எம் அரசனை விட உம் அரசன்

நல்லவனோ எனவும் வருதல் வேண்டும்.

‘எம் அரசனை விட உம் சிப்பாய் நல்லவனோ’ எனக் கேட்டல் கூடாது.

1.2.11. இருவகை வழக்கு:-

வழக்கு இருவகைப்படும். அவை,

1) இயல்பு வழக்கு

2) தகுதி வழக்கு

இயல்பான சொற்களால் ஒரு பொருளை வழங்குவதை இயல்பு வழக்கு எனலாம்.

மண், நீர், காற்று ஆகியவை இயல்பான சொற்களாகும்.

தகுதி என்பது ஒரு பொருளை
அப்பொருட்குரிய சொல்லால் சொல்லுவது
சிறப்பாகாது என்று அதை விடுத்து
தக்கதோர் சொல்லால் வழங்குவது
தகுதி வழக்காகும். அது,

செத்தாரைத் துஞ்சினார் என்றலும்
சுடுகாட்டை நன்காடு என்றலும்
ஓலையைத் திருமுகம் என்றலும்

என்பது போல் வருவன என்பர் சேனாவரையர்.

1.2.12. இனச்சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்:-

''இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை
வழக்காறு அல்ல செய்யுளாறே''

(- தொல், சொல் 18)

அடைமொழியாக வருகின்ற செஞ்ஞாயிறு கருஞாயிறு வெண்ஞாயிறு போன்ற சொற்கள் உலக வழக்கில் அமைவது இல்லை. செய்யுளில் மட்டுமே இவ்வாறான அடைமொழிச் சொற்கள் காணப்படும்.

1.2.13. இயற்கைப் பொருளைச் சொல்லும் முறை:-

''இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்''

(- தொல் - சொல் - 19)

இயற்கைப் பொருளைக் கூறுகின்ற பொழுது, இப்பொருள் இத்தன்மையையுடையது எனக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

(எ.கா) நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்யது, உயிர் உணரும் என்பன போன்று கூறுவதே முறையாகும்.

1.2.14. செயற்கைப் பொருளைச் சொல்லும் முறை:-

தன் இயல்பு திரிந்த செயற்கைப் பொருட்களைச் சொல்லும் போது ஆக்கச் சொல்லைச் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

''செயற்கைப் பொருளை ஆக்கமோடு கூறல்''

(- தொல், சொல் : 20)

(எ.கா) உரம் வைத்துப் பயிர் செழிக்கலாயிற்று.

செயற்கைப் பொருள்களைப் ஆக்கமொடு கூறுகின்றவிடத்தில் காரணத்தை முதலில் கூறிய பின்னரே ஆக்கத்தைக் கூற வேண்டும்.

(எ.கா) தீச் சார்தலால் நீர் வெய்தாயிற்று

1.2.15. காரணமின்றியும் ஆக்கச் சொல் வரும்:-

காரணத்தை முதலிலே கொண்டு வருகின்ற ஆக்கச்சொல் காரணமின்றியும் வரும். அது உலக வழக்கில் குற்றமில்லை என ஏற்றுக் கொள்ளப்படும்.

(எ.கா) பயிர் நல்லவாயின
முகம் பொலிவானது

1.2.16. பால் ஐயமுள்ளன அமையும் முறை:-

சேய்மையில் நிற்பவர் ஆணா, பெண்ணா எனப் பால் அறிய இயலாத நிலையில் அவ்வத்திணையின் பன்மையால் கூறல் வேண்டும் என்பர்.

(எ.கா) அங்கே செல்பவர் யார்?

ஒன்றோ பலவோ வயலில் இறங்கின.

1.2.17. திணை பால்களில் ஐயம் துணிதல்:-

உயர்திணையா? அஃறிணையா என ஐயம் தோன்றும் பொழுது 'உரு' என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். அஃறிணைப் பால் ஐயம் வரும் போது பன்மையில் கூறலாம்.

(எ.கா) அங்கே நான் காண்கிற உரு எது?

ஒன்றா அல்லது பலவா?

ஐயத்தைப் போக்கித் துணிவு கொண்டபின் 'அங்கே நான் பார்ப்பது ஆண் அல்லன் பெண் எனச் சொல்லுதல்' வேண்டும்.

1.2.17. வண்ணச் சினைச் சொல்:-

அடை, சினை, முதல் என மூன்றும் அடுத்தடுத்து மயங்காது வருவதே வண்ணச்சினைச்சொல் ஆகும்.

செங்கால் நாரை

செம்மை + கால் + நாரை

1. செம்மை - வண்ணம்
2. கால் - சினை
3. நாரை - முதல்

இவ்வாறு அடையடுத்துச் சினை, சினை அடுத்து முதல் எனத் தம்முள் முறை மாறாது பொருந்தி வருதல் வேண்டும்.

1.2.18. பால் வழுவமைதி:-

ஒருவனையும் ஒருத்தியையும் சொல்லும் பன்மைச் சொல்லும், ஒன்றினைச் சொல்லும் பன்மைச் சொல்லும் வழக்கின்கண் காணப்படும் சொல்லாகும். இவை இலக்கண வழக்குப்படி அமைந்தவை அல்ல.

(எ.கா) யாம் வந்தேம், நீயிர் வந்தீர்,

இவர் வந்தார்.

சொற்றொடர்களில் வினா விடைகள், சினை முதல் பெயர்கள், அடைமொழி அமைப்பு, இயற்கை செயற்கை பற்றிய சொல்லமைப்பு ஐயப்பாடுற்ற சமயத்தில் சொல் முறை, அடை சினை முதல் பெயர்கள் நிற்கும் முறை என அனைத்தும் இடம் பெறுகின்றன.

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றினைக் கூறும் பன்மைக் கிளவியும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப".

(தொல், சொல் - 27)

1.3. இடம்:-

1.3.0. இடம் உணர்த்துவன:-

செலவு, வரவு, தரவு, கொடை என்னும் நான்கு சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்று இடங்களுக்கும் உரியனவாய் வழங்கும் என்பர்.

1.3.1. தன்மை முன்னிலைக்குரிய சொற்கள்:-

செலவு, வரவு, தரவு, கொடை என்னும் நான்கு சொற்களுள் வரவு, தரவு என்னும் இரண்டும் தன்மை முன்னிலையாகிய இரண்டிடத்திற்கும் உரியது என்பர்.

(எ.கா) எனக்குத் தந்தான்

நினக்குத் தந்தான்

என்னுழை வந்தான்

நின்னுழை வந்தான் - எனவும்

ஈங்கு வந்தான் எனவும் வரும்.

1.3.2. படர்க்கைக்குரிய சொற்கள்:-

செலவு, கொடை என்னும் இரண்டு சொற்களும் படர்க்கை இடத்தில் வருபவை ஆகும்.

(எ.கா) அவன்கட் சென்றான்

ஆங்குச் சென்றான்

அவற்குக் கொடுத்தான்

என வரும்.

1.3.3. யாது எவன்:-

அறியாத பொருளை வினவித் தெரிந்து கொள்வதற்கு யாது, எவன் என்னும் இரண்டு சொற்களும் பயன்படும்.

(எ.கா) உன் பெயர் யாது?

இச்சொற்குப் பொருள் எவன்?

யாது, எவன் என்றும் சொற்களைப் போன்றே யாவர், யாவை, யாங்கு, என், என்ன? என்பன போன்ற சொற்களையும் கொள்ளலாம் என்று கூறுவர்.

1.3.4. யாது என்னும் சொல்:-

யாது என்னும் வினாச்சொல் அறியாத பொருளை வினவி அறிந்து கொள்வதற்கு மட்டுமின்றி அறிந்த பொருளை ஐயம் தீர்த்துத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கும் பயன்படும்.

(எ.கா) இம்மரங்களுள் கருங்காலி யாது?

1.3.5. சினை முதற் சொல் அமையும் வகை:-

உறுப்புக்களைக் குறிக்கக்கூடிய சினைப் பெயர்கள் முதற் பெயர்களுடன் சேர்ந்து வருகின்ற பொழுது ‘உம்’ என்ற அசைச்சொல்லைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(எ.கா) “பன்னிரு கையும் பாற்பட வியற்றி....”

(- திருமுருகாற்றுப்படை – 118)

“முரசு முழங்குதானை மூவருங் கூடி”

(-பொருநராற்றுப் படை – 54)

கையும், மூவரும் என ‘உம்’ என்னும் அசைச் சொல்லைப் பெற்று வந்துள்ளதைக் காணலாம்.

1.3.6. நிலையாமைச் சொல் அமையும் வகை:-

நிலையாமையை உணர்த்துகின்ற சொற்களைக் கூறுகின்ற பொழுது ஐயம், காலம் பொருள் சேர்த்து ‘உம்மை’ கொடுத்துக் கூற வேண்டும்.

(எ.கா) “குருடு காண்டல் பகலுமில்லை”

1.3.7. இல்லாப் பொருளைக் கூறும் முறைமை:-

இல்லாப் பொருளைக் கூறுகின்ற பொழுது ‘அதுவல்லது வேறில்லை’ என்பன போன்று சொல்லுதல் வேண்டும்.

“பயிறு உளதோ வணிகரே! என்று வினவியபோது உளுந்து அல்லது இல்லை” என்றும் கூறுவர்.

1.3.8. பொருட் பெயரும் சுட்டுப் பெயரும்:-

ஒரு பொருளின் தன்மையை முழுவதுமாக உணர்த்த வேண்டுமாயின் அக்குறிப்பிட்ட பொருளையே முதலில் சொல்லி பின்பு சுட்டிச் சொல்ல வேண்டும். பொருளை முதலில் சொல்லாமல் சுட்டுச் சொல்லைச் சேர்த்துச் சொன்னாலும் தவறாகாது என்பர்.

(எ.கா) இது குதிரை

1.3.9. இயற் பெயரும் சுட்டுப் பெயரும்:-

இயற்பெயரும் சுட்டுப் பெயரும் ஒரே நேரத்தில் நிகழ்வதாகத் தோன்றின் சுட்டுப்பெயர் இயற்பெயரைத் தொடர்ந்து வரும். சுட்டுப்பெயரை முதலில் சொல்வது உலக வழக்கிலில்லை.

(எ.கா) சாத்தன் வந்தான்

“முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே”

(தொல் - சொல் - 39)

சுட்டுப்பெயரை முன்னே சொல்லுவது செய்யுளுக்கு மட்டும் உரித்தான வழக்காகும். உலக வழக்கில் சுட்டுப்பெயரை முன்னரே சொல்லுவது இல்லை.

(எ.கா) “அவனணங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன்”

1.3.10. சிறப்புப் பெயரும் இயற்பெயரும்:-

ஒருவர் தன் கீர்த்தியால் பெற்ற சிறப்புப் பெயரை இயல்பாய் அமைந்திருக்கின்ற பெயருக்கு முன்பாகக் கூற வேண்டும்.

(எ.கா) தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதய்யர்

கொடை வள்ளல் பாரி

ஒரு பொருளைக் குறித்து வருகின்ற பல பெயர்கள் வேறு வேறு தொழிலைக் கொண்டு நிற்குமெனில் அது பலரையும் குறிப்பதாகத்தான் இருக்கும்.

(எ.கா) “டாக்டர் நாவலர் பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் அவர்கள்…….”

டாக்டர் வந்தார்

நாவலர் தலைமை வகித்தார்

பேராசிரியர் வாழ்த்தினார்

பாரதியார் பரிசு வழங்கினார்.

என்பன போன்று பலரையும் குறித்து வருவதாக அமையும். மேற்சொன்ன கூற்றுக்கள் ஒருவரை மட்டுமே குறித்து வராமல் நால்வரைக் குறிப்பதாக அமையும். எனவே ஒருவரைக் குறித்த பல பெயர்த் தொடரில்

தனித்தனி வினை சாராமல் ஒரே தொடர் வினையாகக் கூற வேண்டும் என்பார் தொல்காப்பியர்.

1.3.11. விரவி வருதல்:- (இடவழுவமைதி)

உயர்திணைத் தன்மைப் பன்மைச்சொல்லும், அஃறிணைச் சொல்லும் கலந்து வருவதை நீக்குவதில்லை. தன்மை இடத்துப் பெயரும் அஃறிணைப் பெயரும் சேர்ந்து வினை கொள்ளலாம்.

(எ.கா) யானும் என் பசுவும் வந்தோம்.

1.4. எண்:-

1.4.0. எண் ஒருமைக்குரிய சொற்கள்:-

ஒருமையைக் குறிக்கும் சொற்களும் ஒருவன், ஒருத்தி என்னும் சொற்களும் ஒருமையிடத்தைத் தவிர இருவன், இருத்தி எனும் சொற்கள் பன்மையிடத்தில் வராது.

1.4.1. வியங்கோள் அமைதல்:-

வியங்கோள், வினையில் எண்ணுப் பெயராய் வராது. வியங்கோள் வினைச் சொற்கள் எண்ணிக்கையில் அதிகமாய் வரும். திணை விரவுதலை நீக்கார்.

(எ.கா) நாமும் நம் நாடும் உயர்க!

யானையும் பாகனும் செய்க!

1.4.2. இரட்டைக் கிளவி:-

இரட்டித்து நின்று பொருளை உணர்த்துகின்ற சொற்கள் பிரிந்து நிற்காது; பொருளும் தராது.

''இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந் திசையா''

(-தொல் - சொல் - 48)

சுருசுருத்தது, மொடுமொடுத்தது என இசையைப் பற்றியும், கொறுகொறுத்தார், மொறு மொறுத்தார் எனக்குறிப்புப் பற்றியும், குறுகுறுத்தது, கறுகறுத்தது எனப் பண்பு பற்றியும் இரட்டித்து வரும். பிரிந்து நிற்காது.

1.4.3. பன்மைக்குரிய வழக்குகள்:-

உயர்திணையிலும் அஃறிணையிலும் பல பொருள் தருகின்ற ஒரு பெயர்ச்சொல்லை வேறொரு வகையாகச் சொல்வதென்பது தலைமை பற்றியும் பன்மை பற்றியதுமாகவே அமையும்.

(எ.கா) பார்ப்பனச்சேரி ⟹ உயர்திணை – தலைமை பற்றியது

அயனர் நாடு ⟹ உயர்திணை – பன்மை பற்றியது

கமுகந்தோட்டம் ⟹ அஃறிணை – தலைமை பற்றியது

நடுவங்காடு ⟹ அஃறிணை - பன்மை பற்றியது

1.4.4. பெயரும் தொழிலும் மயங்காமை:-

உயர்திணை, அஃறிணையில் பெயரினாலும் பினையினாலும் பொதுவனின்றும் விலகிச் சிறப்பாக ஆண்மைக்கும் பெண்மைக்கும் உரியனவாய் வருவனவெல்லாம் குற்றமாகாது. வழக்கில் வழங்கி வருகிறது.

''பெயரினும் தொழிலினும் பிரிவை யெல்லாம்

மயங்கல் கூடா வழக்கு வழிப்பட்டன''.

(- தொல் - சொல் - 50)

(எ.கா) மக்கள் ஆயிரவர் போரிட்டார்.

(ஆண்களைக் குறித்தது)

இவர் வாழ்க்கைப் பட்டார்.

(பெண்ணைக் குறித்தது)

1.4.5. அ.ஃறிணைச் சொல் கொண்டு முடிதல்:-

உயர்திணை, அ.ஃறிணை என இருவகைக்கும் பொருந்தி வருகின்ற பெயர்ச் சொல்லானது அ.ஃறிணைச் சொல்லைக் கொண்டே நிறைவு பெறும்.

“பலவயினானும் எண்ணுத்திணை விரவுப் பெயர்

அ.ஃறிணை முடிபின் செய்யு ளுள்ளே”

(எ.கா) வடுக ரருவாளர் வான் கரு நாடர்

சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்

குறுகா ரறிவுடை யார்”

1.4.6. பலபொருள் ஒரு சொல் அமைதல்:-

“வினை வேறு பருவம் பலபொரு ளொரு சொல்

வினை வேறு படாஅப் பலபொரு ளொரு சொலென்று

ஆயிரு வகைய பலபொரு ளொரு சொல்”

(தொல், சொல் 52)

பலபொருள் ஒரு சொல்லானது, வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்லும் வினை வேறுபடாப் பலபொருள் ஒரு சொல்லும் என இரண்டு வகைப்படும்.

(எ.கா) மா பூத்தது - மரம்

மா இடித்தார் - மாவு

மா அளவு கொடு - 1 முதல் 20 ஒரு சொல் வினை

மா பாய்ந்தது - குதிரை வேறுபட்டுப் பல

மா ஆடிற்று - வண்டு பொருளைத் தந்தது

மா விழுந்தது - நஞ்சுக்கொடி

1.4.7. வினை வேறுபடுவன:-

மா என்பது ஒரு விலங்கிற்கும் ஒரு மரத்திற்கும் வண்டிற்கும் பிற பொருட்கும் பொது. குருகு என்பது ஒரு பறவைக்கும் உலைமூக்கிற்கும் வளைக்கும் பிறவற்றிற்கும் பொது. நாகம் என்பது மலைக்கும் ஒரு வகை மரத்திற்கும், யானைக்கும் பாம்பிற்கும் பிறவற்றிறக்கும் பொது. சே என்பது பெற்றத்திற்கும் ஒரு மரத்திற்கும் பிறவற்றிற்கும் பொது.

(எ.கா) மாப் பூத்தது

மாவு மருதும் ஓங்கின

‘மாப் பூத்தது’ – பூத்தது என்ற வினை மாமரம் என்ற பொருளைச் சுட்டுகிறது.

‘மாவும் மருதும் ஓங்கின’ - இதில் மருது என்ற இனம் மரம் என்ற பொருளைச் சுட்டுகிறது.

1.4.8. வினை வேறுபடாதன:-

வேறுபடாத வினை தொடரின், வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் கிளந்து சொல்லப்படும்.

(எ.கா) மாமரம் வீழ்ந்தது

விலங்குமா வீழ்ந்தது

காரணம், வீழ்ந்தது என்ற வினைச்சொல் மரம், விலங்கு இரண்டிற்கும் பொதுவாகும்.

1.5. புறனடை:-

1.5.0. திணைக்குப் புறனடை:-

''குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொரு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லாம
உயர்திணை மருங்கின் நிலையினை ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்''

(தொல், சொல் - 56)

குடிமை முதலாக விறற்சொல் ஈறாகச் சொல்லப்பட்ட இப்பதினெட்டும், இவை போன்று குறிப்பால் உணரும் பிற சொற்களெல்லாம் உயர்திணையைக் குறித்து வருபவையாக இருந்தாலும் அஃறிணை போலச் சொல்லப்படும்.

(எ.கா.) குடிமை நன்று, குடிமை தீது

ஆண்மை நன்று, ஆண்மை தீது....

1.5.1. பாலுக்குப் புறனடை:-

''காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவியின் வரூஉங் கிளவி யெல்லாம் ....
பால்பிரிந் திசையா உயர்திணை மேன''

(தொல், சொல் - 57)

காலம் முதலாக சொல் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தும், அத்தன்மையுடைய பிறவும் அப்பகுதிக்கண் வரும் சொற்களெல்லாம் உயர்திணைச் சொற்கள் ஆயினும் உயர்திணைக்காண் பால்பிரிந்து இசைக்காது. அஃறிணைப் பாலாய் இசைக்கும்.

(எ.கா.) இவற்குக் காலமாயிற்று, உலகம் பசித்தது

உயிர் போயிற்று, உடம்பு நுணகிற்று

தெய்வம் செய்தது, வினை விளைந்தது

பூதம் படைத்தது, ஞாயிறு பட்டது,

திங்கள் எழுந்தது, சொல் நன்று என வரும்.

பிறவும் வரும் என்றதனால் பொழுது நன்று, யாக்கை தீது, விதி வலிது, மதி நிறைந்தது, வெள்ளி எழுந்தது என வரும்.

காலம் என்பது காலக்கடவுளைக் குறிக்கும்

உலகம் என்று சொன்னது மக்கள்

தொகுதியையே எனச் சேனாவரையர்

சுட்டுவார்.

1.5.2. இடத்துக்குப் புறனடை:-

காலம் உலகம் போன்றவை ஈறுதிரியாது அவ்வாறே உயர்திணையாய் நின்று வழங்குவதில்லை

"நின்றாங்கு இசைத்தல் இவண்இயல பினறே"

(தொல், சொல் - 58)

(எ.கா.) காலன் கொண்டான்

உலகம் பசித்தார்

இனமாகிய பல பொருள்களில் ஒன்றினை விளக்கி கூறுகின்றபோது அச்சொல், தன் பொருளுக்கு இனமாகிய பிற பொருளினைக் குறிப்பாக உணர்த்துதலும் உண்டு என்பர்.

1.5.3. எண்ணுக்குப் புறனடை:-

கண் முதலாகிய சொற்களும் பிற சொற்களும் பன்மைப் பொருளை உணர்த்தும் சினைச்சொற்களாகும். அவை பன்மையினாலேயே உணர்த்தப்பட வேண்டுமென்ற வரையறை இல்லை. முதல் ஒருமையாயின் ஒருமையாலும் பலவாயின் பன்மையாலும் உணர்த்தப்படலாம்.

(எ.கா) கண்ணல்லள், தோணல்லர்,

முலைநல்லள் எனவும்

கண்ணல்லர், தோணல்லர்

முலைநல்லர் எனவும் வரும்.

சிறு வினாக்கள்

1. திணையின் இலக்கணம் கூறி அதன் வகைகளை எழுதுக.
2. இரட்டைக் கிளவி என்றால் என்ன?
3. வினாவும் விடையும் அமையும் வகை யாது?
4. வண்ணச் சினைச் சொல் என்றால் என்ன?
5. வினை வேறுபடுவனவற்றை எழுதுக.

பெரு வினாக்கள்

6. ஐம்பால் ஈறுகளைச் சான்றுகளுடன் விளக்குக.

திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் அடிப்படையில் கிளவியாக்கம் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

## குறிப்பு

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

## 2. வேற்றுமையியல்

### இயல் : 2

1.0 வேற்றுமையியல் - விளக்கம்:

வேற்றுமையியல் சொல்லதிகாரத்தின் இரண்டாவது இயலாகும். பெயர்கள் உருபு ஏற்று, பொருளை வேறுபடுத்துவதை உணர்த்தும் பகுதி. இவ்வியலில் முதல் ஏழு வேற்றுமைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

வேற்றுமை, உருபு ஏற்பதால் பொருளசை நிலையிலும், வாய்பாடுகளைத் தருவதால் தொடரமைப்பு நிலையிலும் வேற்றுமை ஆராயப்பட்டுள்ளது.

இவ்வியலில் உள்ள நூற்பாக்கள் இருபத்தியிரண்டு என்பார் சேனாவரையர்.

1.1 வேற்றுமையின் வகை:-

வேற்றுமையாவன ஏழென்று தொல்லாசிரியர் கூறுவர்.

"வேற்றுமை தாமே ஏழென மொழிப"

(தொல், சொல், வேற்றுமையியல் - 62)

செயப்படுபொருள் முதலாகப் பெயர், பொருளை வேறுபடுத்தி உணர்த்துகின்ற காரணத்தால் வேற்றுமை ஆயிற்று என்பர்.

தொல்காப்பியர் வேற்றுமையை எண் வகைப்படும் என்பார். விளி கொள்ளுகின்ற இடத்தில் விளி வேற்றுமையோடு வேற்றுமை 'எட்டு வகைப்படும்' என்பார்.

"விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே"

- (சொல், வேற்றுமையியல் - 63)

1.1.1. வேற்றுமையின் பெயர் முறை:-

எட்டு வேற்றுமைகளாவன, பெயர், ஐ, ஒடு, கு. இன், அது, கண், விளி வேற்றுமை என்பனவாகும்.

"அவை தாம்

பெயர் ஐ ஒடு கு

இன் அது கண்விளி யென்னும் ஈற்ற"

- (சொல், வேற்றுமையியல் - 64)

1.2. முதல் வேற்றுமை:-

முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை எனவும் அழைக்கப்படும். இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை. இது பெயர் தோன்றிய அளவில் நிற்கும்.

"அவற்றுள்

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே"

- (சொல், வேற்றமையியல் - 65)

செயப்படுபொருள் முதலியவற்றின் பொருளை வேறுபடுத்தி உணர்த்துவதால் எழுவாயும் வேற்றுமையாயிற்று என்பர் சேனாவரையர்.

(எ.கா) ஆ, அவன் என வரும்

1.2.1. எழுவாய் ஏற்கும் பயனிலைகள்:-

பொருளின் உண்மைத் தன்மையைச் சொல்லுதல், ஏவற் பொருளை ஏற்றுக் கொள்ள வருதல், வினையில நிலையை உணர்த்துதல், வினாப்

பொருளோடு தொடர்தல், பண்புடைச் சொல்லைக் கொள்ளுதல், பெயரினைக் கொண்டு முடிதல் ஆகிய ஆறு முடிவுகளும் பெயர் வேற்றுமைப் பயனிலைகளாகும்.

“பொருண்மை சுட்டல் வியங் கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்று
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே”

- (சொல், வேற்றுமையியல் - 66)

1.2.2. தொகைப் பெயரும் பயனிலை கொள்ளல்:-

பெயரும் பெயரும் சேர்ந்த தொகையும் எழுவாய் வேற்றுமைப் பயனிலை கொள்ளுதற்கு உரியனவாகும்.

“பெயரின் ஆகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய அப்பா லான”

(எ.கா) யானைக் கோடு கிடந்தது;
மதிமுகம் வியர்த்தது;
கொல்யானை நின்றது;
கருங்குதிரை ஓடிற்று;
உவாப் பதினான்கு கழிந்தன;
பொற்கொடி வந்தாள்

என்பது போன்று அமைந்து வரும்.

1.2.3. எழுவாயும் தோன்றா எழுவாயும்:-

மூவிடத்துப் பெயரும் வெளிப் படையாகத் தோன்றி நின்று பயனிலையை ஏற்பது சிறப்பு என்பர் ஆசிரியர்.

(எ.கா) கருவூர்க்கும் செல்லாயோ சாத்தா? செல்வில்
யான் யாது செய்வல் - இது செய்
இவன் யார்? – படைத் தலைவன்

இவற்றில் யான், நீ, இவன் ஆகிய மூவிடப் பெயரும் வெளிப்படாமல் பயனிலை கொண்டன. எழுவாய் வெளிப்பட்டும் வெளிப்படாதுமிருக்கலாம். ஆயினும் பயனிலை வெளிப்பட்டே நிற்கும்.

1.2.4. பெயரில் உருவு ஏற்கும் இடம்:-

வேற்றுமைகளான பெயர், ஐ,ஒரு, கு, இன், அது, கண் என்ற உருபுகள் தம்முடைய தன்மை மாறுபடாது பெயருக்கு இறுதியாகும் தன்மையை உடையன என்று சொல்லுவர்.

“கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப”

(சொல், வேற்றுமையியல் - 69)

(எ.கா) சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு,
சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண்
என அமையும்.

1.2.5. பெயரின் இயல்பு:-

பெயர்சொல் காலம் காட்டாது, தொழிற்பெயர் காலம் காட்டும்.

"பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா

தொழில்நிலை யொட்டும் ஒன்றாங் கடையே"

(சொல், வேற்றுமையியல் - 70)

(எ.கா.) சாத்தான், கொற்றன், உண்டல், தின்னல், எனப் பெயர்ச்சொல் காலம் காட்டாது நிற்பதையும் உண்டான், தின்றான் என்னும் தொழில் நிலையைக் குறித்து வரும் சொற்கள் காலத்தைக் காட்டி நிற்பதையும் காணலாம்.

1.3. இரண்டாம் வேற்றுமை:-

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' என்னும் பெயரினையுடைய வேற்றுமைச் சொல்லாகும். அவ்வேற்றுமை உருபு எவ்விடத்து வருமாயினும் வினையும் வினைக்குறிப்பும் பொருளாக வரும்.

"இரண்டாகுவதே

ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

யெவ்வழி வரினும் வினையே வினைக் குறிப்பு

அவ்விரு முதலில் தோன்றும் அதுவே"

(சொல், வேற்றுமையியல் - 71)

(எ.கா.) குடத்தை வனைந்தான்

குழையை உடையான்

சேனாவரையர் செயப்படுபொருள் மூன்றாகும் என்கிறார்.

1. இயற்றப்படுவது ⟹ முன் இல்லாததை உண்டாக்கல்

(எயிலை இழைத்தான்)

2. வேறுபடுத்தப்படுவது ⟹ முன் உள்ளதைத் திரித்தல்

(பிரித்தல், காத்தல், இசைத்தல்)

3. எய்தப்படுவது ⟹ தொழில் பயனுறுத் தன்மையால் நிற்றல்.

(மற்றவையெல்லாம்)

இவையெல்லாம் வாய்பாடுகளாகக் கொண்டு இது போல் பல தொடர்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே தொல்காப்பியர் கருத்து. சேனாவரையர் மேலும் சில தொடர்களைத் தருகிறார்.

பகைவரைப் பணித்தான்

சோற்றை யட்டான்

குழையை யுடையான்

பொருளை இலன்

போன்றன. இன்று பேச்சு வழக்கில் இது போன்று வேறு பல தொடர்களைக் கூறுகிறோம்.

அவனை அடித்தான்

புத்தகத்தைக் கிழித்தான்

பேனாவைப் பிடுங்கினான்

கண்ணைக் குத்தினான்.

இக்குறிப்பிட்ட வினைச் சொற்களைத் தொல்காப்பியர் சுட்டவில்லை எனினும் அவர் கூறியுள்ள வாய்பாடுகளில் இச்சொற்களை அடக்கி விடலாம்.

1.3.1. அப்பொருளின் பாகுபாடுகள்:-

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்றா
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்றா
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள்
என்ன கிளவியும் அதன் பால என்மனார்''

- (சொல், வேற்றுமையியல் - 72)

செயப்படுபொருள் மூன்றனையும் பற்றி வரும் வாய்பாடுகளை இங்கு விவரிக்கிறார். செயப்படுபொருள் மூன்றாவன.

இயற்றப்படுவது ⟹ கோயிலைக் கட்டினான்
வேறுபடுத்தப்படுவது ⟹ கட்டிடத்தை இடித்தான்
எய்தப்படுவது ⟹ ஊரை அடைந்தான்
என்பவையாகும்.

காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப் பொருட்களும், அவை போன்ற மற்றையவும் அந்தச் செயப்படு பொருள்மேல வருகின்ற எல்லாச் சொல்லும் இரண்டாம் வேற்றுமையில் அடங்கும் என்பர் அறிஞர்.

1.4. மூன்றாம் வேற்றுமை:-

மூன்றாம் வேற்றுமை உருபாவது 'ஒடு' என்னும் பெயரினையுடைய வேற்றுமைச் சொல்லாகும். அது வினை முதல், கருவி ஆகிய பொருள்களை உடையது.

''மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினை முதல் கருவி அனை முதற் றதுவே''

- (சொல், வேற்றுமையியல் - 73)

(எ.கா) கொடியொரு துவக்குண்டான்,
அகத்தியனால் தமிழுரைக்கப்பட்டது.
வேலால் எறிந்தான் எனவும் வரும்.

1.4.1. மூன்றாம் வேற்றுமையின் பாகுபாடுகள்:-

''அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி

அதனோடு இயைந்த வேறுவினைக் கிளவி

அதனோடு இயைந்த ஒப்பல் ஒப்புரை

இன்ஆன் ஏது ஈங்கென வரூஉம்

அன்ன பிறவும் அதன்பால என்பனார்''.

- (சொல், வேற்றுமையியல் - 74)

(எ.கா) அதனின் இயறல் - மண்ணானிறை குடம்

இவ்வாறே பிறவும் உருமென்பர்.

1.5. நான்காம் வேற்றுமை:-

'கு' என்னும் பெயரினையுடைய வேற்றுமைச்சொல் நான்காம் வேற்றுமை உருபாகும். அது எந்தவொரு பொருளாக இருப்பினும் அதனை ஏற்று நிற்கும்.

''நான்கா குவதே

கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

எப்பொரு ளாயிறும் கொள்ளும் அதுவே''

- (சொல், வேற்றமையியல் - 75)

(எ.கா) அந்தணர்க்குப் பசுவைக் கொடுத்தான்.

1.5.1. நான்காம் வேற்றுமையின் பாகுபாடுகள்:-

நான்காம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகள் பத்தாகும். இவை இவ்வேற்றுமையுள் அடங்கும்.

1.6. ஐந்தாம் வேற்றுமை:-

'இன்' என்னும் பெயரினையுடைய வேற்றுமைச் சொல் ஐந்தாம் வேற்றுமை உருபாகும். இரு பொருள்களை ஒப்புமைப்படுத்தி ஒன்றைச் சிறப்பிப்பதாகும்.

''ஐந்தா குவதே

இன்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

இதனின் இற்று இது என்னும் அதுவே''

- (சொல், வேற்றுமையியல் - 77)

(எ.கா) சென்னையின் வடக்குத் திருவொற்றியூர்.

1.6.1. ஐந்தாம் வேற்றுமையின் பாகுபாடுகள்:-

வண்ணம் முதல் பற்று விடுதல் ஈறாக இருபத்தேழு பாகுபாடுகளைத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

(எ.கா) காக்கையிற் கரிது களம்பழம்

காமத்திற் பற்று விட்டான்

என்பன போன்று அமையும்,

1.7. ஆறாம் வேற்றுமை:-

'அது' என்னும் பெயரினையுடைய வேற்றுமைச் சொல் ஆறாம் வேற்றுமை உருபாகும். இது தன்னினாலும், பிறிதொன்றினாலும் இதனது இது என்னும்படி உண்டாகும். தற்கிழமை பிறிதின்கிழமை எனும் பொருளை யுடையதாகும்.

''ஆறா குவதே

அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

தன்னிலும் பிறிதினும் இதனது இது எனும்
அன்ன கிளவிக் கிழமைத்து அதுவே''

- (சொல், வேற்றுமையியல் - 79)

(எ.கா) முருகனது இயற்கை
முருகனது தோட்டம் என வரும்.

1.7.1. ஆறாம் வேற்றுமையின் பாகுபாடுகள்:-

இயற்கை முதலாக வாழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்ட பதினாறு பொருள்களும் ஆறாம் வேற்றுமையின் பாகுபாடுகளாகும்.

1.8. ஏழாம் வேற்றுமை:-

'கண்' எனும் பெயரினையுடைய வேற்றுமைச் சொல் ஏழாம் வேற்றுமை உருபாகும். அது செயல் செய்கின்ற இடத்தும், நிலமாகிய இடத்தும், காலமாகிய இடத்தும், குறிப்பினிடத்தும் தோன்றும்.

''ஏழா குவதே
கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினை செய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பில் தோன்றும் அதுவே''

- (சொல், வேற்றுமையியல் - 81)

(எ.கா) விளையாடற்கண் வந்தான்
திண்ணையின்கண் படுத்தான்
வேனிலின்கண் சென்றான்
என அமையும்

1.8.1. ஏழாம் வேற்றுமையின் பாகுபாடுகள்:-

கண் முதலாக இடம் ஈறாகச் சொல்லப்படுகின்ற பத்தொன்பது பொருள்களும் அவை போல்வன பிறவும் ஏழாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகளாகும்.

1.8.2. வேற்றுமையின் தொகை விரி இயல்பு:-

''வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்று நின்று இயலும் தொகைவயின் பிரிந்து
பல்லா றாகப் பொருள்புணர்ந்து இசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப''

- (சொல், வேற்றுமையியல் - 83)

வேற்றுமைத் தொகையைப் பொருள் விரித்துப் பார்ப்பது போல் அன்மொழித் தொகையை விரித்துப் பார்ப்பர். அங்குப் பொருள் விளங்கச் சேர்க்கப்படும் பொருள்கள் இங்கும் சேர்க்கப்படும் என்பர் அறிஞர்.

சிறு வினாக்கள்

1. எழுவாய் ஏற்கும் பயனிலைகள் யாவை?
2. பெயரின் இயல்பு யாது?
3. வேற்றுமை உருபுகள் பெயரில் உருவு ஏற்கும் இடங்களை எழுதுக.
4. இரண்டாம் வேற்றுமை உருபைச் சான்றுடன் தருக.
5. மூன்றாம் வேற்றுமையின் பாகுபாடுகள் யாவை?

பெருவினாக்கள்

1. வேற்றுமையியல் - விளக்கம் கூறி வகைகளை எழுதுக.
2. எட்டு வேற்றுமைகளையும், அதன் உருபுகளையும் சான்றுடன் விவரி.

## குறிப்பு

# 3. வேற்றுமை மயங்கியல்

## இயல்: 3

1.0. வேற்றுமை மயங்கியல்:- விளக்கம்

வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கிப் பொருள் வேறுபாடு கொள்வதை விரித்துரைப்பதே வேற்றுமை மயங்கியலாகும். வேற்றுமை மயக்கம் இருவகைப்படும். அவை,

1. பொருள் மயக்கம்
2. உருபு மயக்கம்

ஒரு வேற்றுமைக்குரிய பொருள் மற்றொரு வேற்றுமையிற் சென்று மயங்குவது பொருள் மயக்கமாகும்.

ஒரு வேற்றுமைக்குரிய உருபு மற்றொரு வேற்றுமையோடு மயங்குவது உருபு மயக்கமாகும்.

வேற்றுமையொரு தொடர்புடைய விதிகள் சில கூறப்படுவதாலும், உருபு மயக்கத்தை உணர்த்தி பின் பொருள் மயக்கமுணர்த்தியதாலும் இது வேற்றுமை மயங்கியலாயிற்று என்பார் சேனாவரையர்.

இவ்வியலின் நூற்பாக்கள் முப்பத்து நான்கு எனச்சேனாவரையர் குறிப்பிடுகிறார்.

1.1. வேற்றுமை உருபுகள் மயங்குதல்:-

சார்பு இருவகைப்படும். ஆவை

1. கருமச் சார்பு

கருமமல்லாச் சார்பு ஆகியவையாகும்.

கருமமல்லாச் சார்பு என்னும் பொருளுக்கு ஏழாம் வேற்றுமை உருபு வருகின்ற உரிமை உடையது.

“கருமம் அல்லாச் சார்ப என கிளவிக்கு

உரிமையும் உடைத்தேன கண்என் வேற்றுமை”

- (சொல் - வெ.மயங்கியல் - 84)

(எ.கா) அரசர் கண் சார்ந்தான்

1.2. சினைப் பெயரில்:-

சினச் சொல்லிற்கு, வினை நிகழுமிடத்து இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் ஒத்து வரும் என்பர் சான்றோர்.

“சினை நிலைக் கிளவிக்கு ஐயம் கண்ணும்

வினை நிலை ஒக்கும் என்மனார் புலவர்”

- (சொல். வே.மயங்கியல் - 85)

(எ.கா) கிளையை வெட்டினான்

கிளையின் கண் வெட்டினான

1.3. முதற்பெயர் சினைப் பெயர்களில்:-

முதற் சொல்லோடு தொடர்ந்த சினைச் சொல்லிற்கு ஆறாம் வேற்றுமை முதற் கண் வருமாயின் சினைச் சொல்லின் கண் இரண்டாம் வேற்றுமையே வரும்.

“முதற் சினைக் கிளவிக்கு அதுவென் வேற்றுமை

முதற் கண் வரினே சினைக்கை வருமே''

- (சொல், வே. மயங்கியல் - 87)

(எ.கா) யானையது கோட்டைக் குறைத்தான்

முதற்சினைச் சொற்களில் முதலில் ஐகார வேற்றுமை உருபு வருமாயின், சினைச் சொல்லின் முன் 'கண்' என்னும் வேற்றுமை உருபு வரும்.

யானையைக் கோட்டின் கண் குறைத்தான்

கோட்டது நுனியைக் குறைத்தான்

கோட்டை நுனிக் கண் குறைத்தான்

கோட்டை நுனியைக் குறைத்தான்

எனத் தம்முள் மயங்கி வரும்

1.4. பிண்டப் பெயரில்:-

பிண்டத்தை உணர்த்தும் பெயரும் முதல் சினைப் பெயர்கள் போன்றே அமைந்துள்ளது. அவ்வாறு அவற்றைப் பண்டைய காலந்தொட்டு வழங்கி வருதல் பொருந்திய இலக்கணமாக அமைந்துள்ளது.

''பண்டப் பெயரும் ஆயியல் திரியா

பண்பியல் மருங்கின் மரீஇய மரபே''

- (சொல், வே. மயங்கியல் - 90)

(எ.கா) குப்பையது தலையைச் சிதறினான்

குப்பையைத் தலைக்கண் சிதறினான்

குப்பையைத் தலையைச் சிதறினான்

என வரும்

1.5. உயர்புப் பொருளில்:-

''ஒருவனை ஒடுச் சொல் உயர்பின் வழித்தே

- (சொல், வே. முயங்கியல் - 93)

ஒருவினை ஒருச் சொல் உயர் பொருளை உணர்த்தும் பெயரிடத்துத் தோன்றும்.

(எ.கா) அரசனோடு இளையர் வந்தார்

ஆசிரியரோடு மாணாக்கர் வந்தார்

ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவியை அடுத்ததாக வைத்துக் கூறுகின்றார்.

மூன்றாம் வேற்றுமைக் கண்ணும் ஐந்தாம் வேற்றுமைக் கண்ணும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கத்தோடு பொருந்திய காரணச் சொல் ஒரு தன்மை உடையது என்பர் புலவர்.

(எ.கா) வாணிகத்தானாயினான்

வாணிகத்தினாயினான் என அமையும்

வாணிகத்தன், வாணிகத்தின் என உருபொடு தொடர்ந்து நின்ற சொல்லை ஏதுக்கிளவி என்றார்.

1.8. நோக்கப் பொருளில்:-

இரண்டாம் வேற்றுமைக் குரிய நோக்கம் மூன்று ஐந்து எனும் இரண்டிற்கும் உரிய ஏதுப்பொருளிலும் வரும்.

(எ.கா) வானோக்கி வாழும் உயிரெல்லாம் மன்னவன்

கோனோக்கி வாழுங் குடி.

வானை நோக்கி வாழும் - என வருதலன்றி

வானான் நோக்கி வாழும் - என மூன்றிலும்

வானின் நோக்கி வாழும் - என ஐந்திலும் வரும்

1.7. உடைமைப் பொருளில்:- (6, 4-ஆம் மயக்கம்)

"அதுவென் வேற்றுமை உயர்திணைத்

தொகைவயின்

அதுவென் உருபுகெடக் குகரம் வருமே"

- (சொல், வே. மயங்கியல் - 94)

ஆறாம் வேற்றுமைப் பொருள் மேல் வரும் உயர்திணை தொகைவயின் உருபு விவரிக்கும் போது 'அது' என்ற உருபு கெட, அதன் பொருளில் நான்காம் உருபு வரும்.

(எ.கா) நம்பி மகன்

நம்பிக்கு மகன்

1.8. தடுமாறு பொருளில் : - ( 2, 3-ஆம் மயக்கம்)

"தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டு மூன்றுங்

கடிநிலை யிலவே பொருள் வயி னான"

- (சொல், வே. மயங்கியல் - 95)

இருபொருள் தருமாறு அமையும் தொழிற்பெயரின் பொருளை விளக்கும் போது இரண்டன் உருபும் மூன்றன் உருபும் வருவதை விலக்குவதற்கில்லை.

(எ.கா) புலிகொல் யானை – என இரண்டாவதிலும்

புலியால் கொல்லப்பட்ட யானை – என மூன்றாவதிலும்

விரிக்கலாம்.

1.9. பாதுகாத்தற் பொருளில் (ஓம்படைப் பொருள்):- (2, 3-ஆம் மயக்கம்)

"ஓம் படைக் கிளவிக் கையும் ஆனும்

தாம் பிரிவிலவே தொகை வரு காலை"

ஓம்படுத்தல் - பாதுகாத்தல் ஆகும். தொகையாக வரும் போது ஐ உருபும் ஆன் உருபும் ஒத்த உரிமையுடையன ஆகும்.

(எ.கா) புலி போற்றி வா –

புலியைப் போற்றி வா

புலியால் போற்றி வா

1.10. வாழ்த்துப் பொருளில் : - (6, 7-ஆம் மயக்கம்)

"ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு

ஏழும் ஆகம் உறைநிலத் தான்"

ஆறாம் வேற்றுமைக்காண் ஓதிய வாழ்ச்சிக் கிழமைக்கு வாழ்கின்ற நிலத்திடத்து ஏழாம் வேற்றுமையும் மயங்கி வரும்.

(எ.கா) காட்டு மாடு என்பது

காட்டது மாடு

காட்டின் கண் மாடு – எனவும் வரும்

1.11. கொடைப் பொருளில்:- (6, 4-ஆம் மயக்கம்)

'கு' என்னம் வேற்றுமை உருபு தொகுகின்ற நான்காம் வேற்றுமைக் கொடைப்பொருள் 'அது' என்னும் உருபினையுடைய ஆறாம் வேற்றுமைக்கும் உரிமை உடைத்தாகும்.

''குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி

அப்பொருள் ஆறற்கு உரித்தும் ஆகும்''

- (சொல், வே. மயங்கியல் - 99)

(எ.கா) நாகர் பலி என்பது நாகர்க்குப் பலி என்று விரிவது மட்டுமின்றி நாகரது பலி எனவும் விரியும்.

1.12. அச்சப் பொருளில் : - (5, 2ம் மயக்கம்)

அச்சப் பொருண்மைக்கு ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் ஒத்த உரிமையை உடையன.

''அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்

எச்ச மிலவே பொருள் வயி னான''

- (சொல், வே. மயங்கியல் - 100)

(எ.கா) கள்ளரை அஞ்சும்

கள்ளரின் அஞ்சும்

2.0. உருபுகளின் இயல்புகள்:-

2.1. உருபு தொடர்ந்து அடுக்கி வருதல்:-

பல உருபும் தம்முள் சேர்ந்து அடுக்கி வந்த வேற்றுமைச் சொற்களெல்லாம் பொருள் முடிவு தரும். முடிக்குஞ் சொல் ஒன்றினால் முற்றுப் பெற்றும் நடக்கும்.

''உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி

ஒருசொன் னடைய பொருள் சென் மருங்கே''

- (சொல், வே. மயங்கியல் - 102)

(எ.கா) 'என்னொடும் நின்னொடும் சூழாது'

என்ற தொடரில் ஒடு இருமறை வந்து 'சூழாது' என்பதுடன் முடிந்தது.

2.2. உருபு விரிந்து நிற்கும் இடம்:-

வேற்றுமைத் தொடரின் இறுதியிடத்தும் அதன் இடை நிலத்தும் ஆறு உருபும் தத்தமக்கு உரிய பொருளில் நிற்றலை நீக்கார்.

''இறுதியும் இடையும் எல்லா உருபும்

நெறிபடு பொருள் வயின் நிலவுதல் வரையார்''

என்பார் தொல்காப்பியர்.

(எ.கா) கடந்தான் நிலத்தை

வந்தான் சாத்தனொடு

கொடுத்தான் சாத்தற்கு

இருந்தான் குன்றத்துக் கண்

சாத்தற்குக் கொடுத்தான்

சாத்தனின் வலியன்

எனவும் வரும்

2.3. வேற்றுமை சார்தல் :-

ஒரு தொடர் ஏதேனும் ஓர் வேற்றுமை உருபு கொடுத்துச் சொல்லப்பட்டதாயினும் அவ்வுருபு தன் பொருளான் அத்தொடர்ப் பொருள் செல்லாதவழிப் பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமையைச் சாரும்.

“யாத னுருபிற் கூறிற் றாயினும்

பொருள் செயன் மருங்கின் வேற்றுமை சாரும்”

- (சொல், வே.மயங்கியல் - 106)

(எ.கா) நாணற் கிழங்கு மணற் கீன்ற முளை

நான்காம் வேற்றுமையுருபு ஏழாவது வேற்றுமை உருபின் பொருட்டு வந்தது.

2.4. உருபுகளின் திரிபு :-

‘கு’, ‘ஐ’, ‘ஆ’ என வரும் மூன்று உருபுகளும் தொடர் இறுதியில் நிற்கும் பொழுது அகரத்தோடு பொருந்தி நிற்றலும் உண்டு.

“கு ஐ ஆடினன வரூஉ மிறுத

அவ்வொரு சிவணுஞ் செய்யு ளுள்ளே”

(எ.கா) கடிநிலை யின்றே யாசிரியற்கே

காவலோனக் களிறஞ்சும்மே

புரைதீர் கேள்விப் புலவரான

என அமைந்து விடும

2.5. உருபுகள் பல பொருள்களில் மயங்குதல்:-

‘இப்பொருளினது இந்தப் பகுதி இத்தன்மைத்து’ என்னும் ஆறாம் வேற்றுமைப் பொருளும், ‘ஒன்றனை ஒன்று ஏற்றுக்கொள்ளும்’ என்னும் இரண்டாம் வேற்றுமைப் பொருண்மையும், ‘ஒன்றனால் ஒன்று தொழில் நிகழ்வதற்கு ஒப்புமை உடைத்து’ எனும் மூன்றாம் வேற்றுமைப் பொருளும் முறைப் பொருண்மையைக் கொண்டு நின்ற ஆறாம் வேற்றுமைப் பொருளும், நிலத்தை வரையறுத்துக் கூறும் பொருண்மையும் பண்டில் தோன்றும் ஐந்தாம் வேற்றுமைப் பொருண்மையும் நான்காம் வேற்றுமை உருபில் தோன்றுதல் பழமையான மரபாகும்.

(எ.கா.) ‘யானைக்கும் கோடு கூரிது’

ஆ விற்குக் கன்று

கருவூர்க்குக் கிழக்கு

காலைக்கு வரும்

என மற்றையவும் அமைந்து பொருளை உணர்த்தும்.

2.6. வேற்றுமை தோன்றுவதற்கு ஏது:-

வினை, வினைமுதல், செயப்படுபொருள், நிலம், காலம், கருவி ஆகிய ஆறுடன் ‘இன்னதற்கு இது பயனாக” என்னும் இரண்டையும் சேர்த்தால் தொழிலின் காரணங்கள் எட்டு என்பர் அறிஞர்.

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற் கிதுபயனாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே"

(சொல், வே.மயங்கியல் - 112)

'வனைந்தான்' என்பதில் வனைதல் தொழிலும், வனைந்த கருத்தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கிடமாகிய நிலமும், அத்தொழில் நிகழும் காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்ததனானாய பயனுமாகிய எட்டும் பற்றித் தொழில் நிகழும்.

1.3.0. ஆகுபெயர்:-

ஆகுபெயரின் இயல்பு

முதற்சொல் வாய்பாட்டாற் கூறப்படும் சினயைறிய கிளவியும், சினைச் சொல் வாய்பாட்டாற் கூறப்படும் முதலறி கிளவியும் பொருளின் பெயர் அது தோன்றிய நிலத்தின்மேல் கூறும் சொல்லும், பண்புப் பெயர் பண்புடைய பொருளை உணர்த்தும் சொல்லும், காரணப் பெயரால் காரியத்தைச் சொல்லுதலும், அன்மொழிப் பொருளிடத்து நின்ற இருபெயரொட்டும், செய்யப்பட்ட பொருள்மேல் செய்தான் பெயரைக் கூறலும் என அமையும் இலக்கணத்தையுடையன ஆகுபெயர் என்பர்.

| | |
|---|---|
| (எ.கா) 1. முதற்பெயர் சினைக்கு வருதல் | கடுத்தின்றான் |
| 2. சினைப் பெயர் முதலுக்கு வருதல் | பூ நட்டு வாழும் |
| 3. நிலப்பெயர் அந்நிலத்துப் பொருட்டு வருதல் | குழிப்பாடி நேரிது |
| 4. பண்பு அப்பண்புடைய பொருளுக்கு வருதல் | இம்மணி நீலம் |
| 5. காரணம் அதனானியன்ற காரியத்துக்கு வருதல் | இக்குடம் பொன் |
| 6. இருபெயரொட்டு அன்மொழிப் பொருள் மேல் வருதல் | பொற்றொடி வந்தாள் |
| 7. செய்தான் பெயர் செயப்பட்டதுக்கு வருதல் | இவ்வாடை கோலிகன் |

அளவுப் பெயரையும் நிறைப் பெயரையும் ஆகுபெயராகக் கொள்ளும் இடமும் உடைத்து என்பர் அறிஞர்.

"அளவும் நிறையும் அவற்றொரு கொள்வழி
உளவென மொழிய உணர்நதிசி னோரே"

(சொல் வே.மயங்கியல் - 116)

மேற்சொல்லப்பட்டனவே யன்றி வேறு ஆகுபெயர்கள் இருக்குமானால், அவற்றையெல்லாம் மேற்கூறிய இலக்கண இயல்பால் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பர்.

“கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்

கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே”

- என்பது புறனடை நூற்பாவாகும்.

யாழ், குழல் எனும் கருவிப் பெயர் யாழ் கேட்டான், குழல் கேட்டான் என அதன் ஓசை மேலும் ஆகுபெயரால் நின்றன. பிறவும் அவ்வாறே வரும் எனக் கூறுவர் சேனாவரையர்.

சிறுவினாக்கள்

1. சார்பின் வகைகளை எழுதுக.
2. சினைப் பெயரில் வேற்றுமை உருபு எவ்வாறு மயங்கும்?
3. கொடைப் பொருளில் உருபு மயக்கம் எவ்வாறு அமையும்?
4. உருபு விரிந்து நிற்கும் இடம் யாது?
5. உருபுகளின் திரிபினைக் கூறுக.

பெருவினாக்கள்

6. வேற்றுமை உருபுகள் மயங்கி வருதலை விளக்குக.

ஆகு பெயரின் இயல்பினை விவரி.

## குறிப்பு

## 4. விளிமரபு

## இயல் - 4

1.0. விளிமரபு:- விளக்கம்

'விளித்தல் என்பது அழைத்தல் ஆகும்'. "படர்க்கையோரைத் தன் முகமாகத் தான் அழைப்பதுவே" என்பார் பவணந்தியார். அழைத்தலை விளித்தல் என்றே இன்னும் மலையாளத்தில் வழங்குவர். ஒருவரை விளிக்குங்கால் அவர் பெயர் அடையும் மாறுதல்களை எல்லாம் இவ்வியலில் தொல்காப்பியர் உணர்த்துகின்றார். தொல்காப்பியர் காலம் வரை இது வேற்றுமைக் குழுவில் சேர்க்கப்படாது தனியாகவே இருந்து வந்தது. தொல்காப்பியரே இதன் சிறப்புக் கருதி எட்டாம் வேற்றுமையாகக் கொண்டதோடு 'விளி மரபு' எனத் தனி ஓர் இயலும் அமைத்துள்ளார்.

ஈறு திரிதல், ஈற்றயல் நீடல், பிறிது வந்தமைதல், இயல்பாதல் என்பன விளிவேற்றுமையின் உருபுகளாகக் கொள்ளத்தக்கன. விளி கொள்ளாப் பெயர்கள் இவை எனவும் ஆசிரியர் இவ்வியலில் உணர்த்துகின்றார்.

1.1. விளியின் இயல்பு:-

விளி எனப்படுவது தம்மை ஏற்கும் பெயரோடு தோன்றும் தன்மை உடையது என்பர்.

"விளிஎனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப"
- (சொல், விளிமரபு – 118)

விளிகொள்ளும் பெயரும் விளிகொள்ளாப் பெயரும் இவ்வியலில் பொருள் தோன்றுமாறு தெளிவாகச் சொல்லப்படுகிறது.

2.0. உயர்திணைப் பெயர் விளியேற்றல்:-

'இ' 'உ' 'ஐ' 'ஓ' என்னும் இறுதியையுடைய பெயர்கள் உயர்திணையில் விளி ஏற்கும்.

"அவைதாம்
இ உ ஐ ஓ வென்னு மிறுதி
அப்பால் நான்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளி கொள்பெயரே"
(சொல், விளிமரபு – 120)

(எ.கா.) சுடர்த்தொடீ கேளாய் (கலி-51)
சாத்தீ எனவும் உயர்திணைப் பெயராய்
விளியேற்றவாறு வந்துள்ளன.

மேற்கூறிய நான்கின் ஈற்றினுள் இகரம் ஈகாராமகவும் ஐகாரம் ஆயாயும் திரிந்து விளியேற்கும்.

"அவற்றுள்
இ ஈ யாகும் ஐ ஆய் ஆகும்"
(சொல், விளிமரபு – 121)

(எ.கா) நம்பி – நம்பீ ⟹ இகரம் ஈகாரமாயிற்று
நங்கை - நங்காய் ⟶ ஐகாரம் ஆய் எனத்திரிந்தது

ஔகார இறுதியும், உகர இறுதியும் ஏயொடு பொருந்தி விளியேற்கும் என்பர்.

"ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்"

- (சொல், விளிமரபு – 122)

(எ.கா) கோ ⟹ கோவே / வேந்து ⟹ வேந்தே எனவும் அமைந்து நிற்கும்.

மேற் கூறப்பட்ட உகரம் குற்றியலுகரமாகும். முன்பு கூறிய நான்கு உயிரீறுகள் அல்லாத உயிரீறுகள் விளியேற்காது என்பர் அறிஞர்.

2.1. அளபெடைப் பெயர்:-

இகர இறுதி அளபெடைப் பெயர், தன் அளவை விட மிகுந்து ஒலிக்கும் பொழுது இகரம் ஈகாரமாகத் திரியாது இயல்பாய் நின்றே விளியேற்கும்.

"அளபெடை மிகூஉம். இகர இறுபெயர்

இயற்கைய ஆகும் செயற்கைய என்ப"

-(சொல், விளிமரபு – 125)

(எ.கா) தோழீஇஇ / தோழீ இஇஇ எனவும் வரும்.

2.2. முறைப் பெயர்:

முறைப்பெயரில் 'ஐ' யென்னும் இறுதி ஆயாகாது ஆவொடு பொருந்தி வருவதும் உண்டு.

"முறைப் பெயர் மருங்கின் ஐயென் இறுதி

ஆவொடு வருதற் குரியவு முளவே"

- (சொல், விளிமரபு – 126)

(எ.கா) அன்னை ⟹ அன்னா

அத்தை ⟹ அத்தா எனவும் வரும்.

மேற்கூறப்பட்ட நான்கு ஈற்றுச் சொல்லும் அண்மையிடத்தில் இயற்கையாய் விளியேற்கும்.

"அண்மைச் சொல்லே இயற்கை ஆகும்"

- (சொல், விளிமரபு – 127)

(எ.கா) நம்பி வாழி, வேந்து வாழி

நங்கை வாழி

உயரீற்று உயர்திணைப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்திய பின் மெய்யீற்று உயர்திணைப் பெயர் விளி ஏற்பதைக் கூறுகிறார்.

2.2.1. அவற்றுள் 'ன' கர ஈறு:-

'அன் என் இறுதி ஆவா கும்மே"

- (சொல், விளிமரபு – 130)

'ன' கரத்தை இறுதியாக உடைய 'அன்' என்னும் னகர இறுதி, ஆவாய்த திரிந்து, பின் விளி ஏற்படும்.

(எ.கா) சோழன் ⟹ துறைவ

ஊரன் ⟹ ஊர

'ஆன்' எனும் னகர இறுதி இயல்பாய் விளியேற்கும்.

(எ.கா) சேரமான், மலையமான் என வரும்.

2.3. வினையாலணையும் பெயர்:-

தொழிலால் ஒரு பொருளைச் சொல்லும் ‘ஆன்’ ஈற்றுப் பெயர் விளியில் ‘ஆயாகும்’.

(எ.கா) வந்தான் ⟹ வந்தாய்

2.4. பண்புப் பெயர்:-

ஆன் ஈற்றுப் பண்பு கொள் பெயரும் அவ்வீற்றின் தொழிற் பெயர் போல ‘ஆயாய்’ விளியேற்கும்.

(எ.கா) கரியான் ⟹ கரியாய்

செய்யான் ⟹ செய்யாய்

2.5. அளபெடைப் பெயர்:-

ஆன் ஈற்று அளபெடைப் பெயர் இகர ஈற்று அளபெடைப் பெயரைப் போல மூன்று கூன்று மாத்திரையில் இயல்பாய் விளியேற்கும்.

(எ.கா) உழாஅஅன்

கிழா அஅஅன்

2.6. முறைப் பெயர்:-

‘ன’கார ஈற்று முறைப் பெயர் ‘ஏ’ காரம் பெற்று விளியேற்கும்.

(எ.கா) மகன் ⟹ மகனே / மருமகன் ⟹ மருமகனே

2.6.1. ‘ன’கர ஈற்று விளி ஏலதாவை:-

தான் என்னும் பெயரும் அவன், இவன் உவன் என்னும் பெயரும் சுட்டு முதற் பெயரும் யான் என்னும் பெயரும், யான் என்னும் வினாப் பெயருமாகிய அவ்வனைத்தும் ‘ன’கர ஈறேயாயினும் விளி கொள்ளா.

2.6.2. ஏகார ஈறு:-

ஏகார ஈற்றுள் ஆர், அர், என நின்ற இரண்டும் ஈறாய் விளியேற்கும்.

(எ.கா) பார்ப்பார் ⟹ பார்ப்பீர்

கூத்தர் ⟹ கூத்தீர்

2.7. வினையாலணையும் பெயர்:-

“தொழிற் பெய ராயின் ஏகாரம் வருதலும்

வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே”

- (சொல், விளிமரபு – 139)

இரண்டு ஈற்றுத் தொழிற்பெயருக்கும் ஈரோடு ஏகாரம் வருதல் குற்றமன்று.

(எ.கா) வந்தார் ⟹ வந்தீரே

சென்றார் ⟹ சென்றீரே என வரும்

2.8. அளபெடைப் பெயர்:-

ரகர இறுதி அளபெடைப் பெயர்.

‘ன’கர இறுதி அளபெடைப் பெயர் போலவே தன் மாத்திரையில் மிகுந்து ஒலிக்கின்ற பொழுது திரியாது இயல்பாய் நின்றே விளி ஏற்கும்.

(எ.கா) சிறாஅஅர்

மகாஅஅர் என்று அமையும்

2.8.1. ரகர ஈற்றுள் விளி ஏலாதவை:-

அவர், இவர், உவர் எனும் ஈகாரவீற்றுச் சுட்டு முதற் பெயர், னகார வீற்றுக் சுட்டு முதற் பெயரே போல விளி ஏலாது.

2.8.2. ல, ளகர ஈறு:-

லகரம் ளகரம் என்னும் இரண்டு மெய்யையும் இறுதியாக உடைய பெயர் ஈற்றின் அயல் எழுத்து நீண்டு விளி கொள்ளும்.

(எ.கா) குரிசல் ⟹ குரிசீல்

மக்கள் ⟹ மக்காள்

3.0. விரவுப் பெயர் விளியேற்றல்:-

உயர்திணைப் பெயரும், உயர்திணை விரவுப் பெயரும் விளி கொள்ளுமாறு உணர்த்தி, அஃறிணை விரவுப் பெயர் விளி ஏற்குமாறு உணர்த்துகின்றனர்.

'கிளந்த இறுதி அஃறிணை வரவுப் பெயர்

விளம்பிய நெறிய விளிக்குங் காலை'

- (சொல் சேனாவரையம் - 150)

(எ.கா) சாத்தி ⟹ சாத்தீ

பூண்டு ⟹ பூண்டே

தந்தை ⟹ தந்தாய்

சாத்தன் ⟹ சாத்தா

கூந்தல் ⟹ கூந்தால்

அண்மை விளியாகவும் வரும்.

4.0. அஃறிணைப் பெயர் விளியேற்றல்:-

மெய்யீறும் உயிரீறுமாகிய அஃறிணைப் பெயரெல்லாம் விளிகொள்ளும் காலம் தோன்றின் 'ஏகாரம்' பெற்றே வரும்.

(எ.கா) மரம் ⟹ மரமே / அணில் ⟹ அணிலே

புறனடை:-

4.1. மூவகைப் பெயரிலும் சேய்மை விளி:-

இருதிணையிடத்தும் விளியேற்குமெனச் சொல்லப்பட்ட எல்லாப் பெயரும் விளி ஏற்கும் இடத்துத் தூரத்திடத்து ஒலிக்கும் போது தத்தம் ஒலியளவில் ஒலித்தன.

(எ.கா) தம்பீஇ / சாத்தாஅ என வரும்

4.2. 'அம்ம' எனும் இடைச் சொல் விளி:-

'அம்ம' எனும் அசைச் சொல்லினது நீட்டம் விளி கொள்ளும் பெயரொடு தோன்றாது. இடைச் சொல்லொடு தோன்றினும் விளியாகக் கொள்வர்.

(எ.கா) அம்மா, சாத்தா

4.3. உயர்திணைப் பெயருள் விளி ஏலாதவை:-

த, ந, நு எனும் உயிர் மெய்யையும் 'எ' எனும் உயிரையும் முதலில் உடையதாய் ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்றன. ரள எனும் மூன்று புள்ளியை இறுதியிலுடைய சொல்லும் பிறவும் விளியோடு புணர்வதில்லை.

(எ.கா) தமன், தமர், தமள் / நமன். நமர், நமள் / நுமன், நுமர், நுமல் / எமன், எமர் / எமள் எனவும், தம்மான், தம்மார், தம்மால் எனவும் வரும்.

--------------------

சிறுவினாக்கள்

1. விளியின் இயல்பு யாது?
2. அ.்.றிணைப் பெயர் எவ்வாறு விளியேற்கும்?
3. உயர்திணைப் பெயருள் விளி ஏலாதவை எவை?
4. அளபெடைப் பெயர் எவ்வாறு விளியேற்கும்?
5. விரவுப் பெயர் விளியேற்றலை எழுதுக.

பெரு வினாக்கள்

6. பெயர்களின் விளியேற்றலை விளிமரபு எவ்வாறு காட்டுகிறது? விளிமரபு கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

## குறிப்பு

## 5. பெயரியல்

## இயல் - 5

1.0. பெயரியல்:- விளக்கம்

பெயர்ச் சொற்களின் இலக்கணம் உணர்த்துவதால் இவ்வியல் பெயரியல் ஆயிற்று. பெயரியலில் மொத்தம் 43 நூற்பாக்கள் அமைந்துள்ளன. முதல் ஐந்து நூற்பாக்களில் சொல்லின் பொது இலக்கணம் உணர்த்திப் பின்னர் பெயர்ச் சொல்லின் இலக்கணமும் வகையும் விரித்துரைக்கப்படுகிறது.

பெயரை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் என மூவகைப் படுத்தி அம்முறையிலேயே கூறப்படுகிறது. இவ்வியலின் இறுதியில் இறைச்சி என்பது பற்றி விளக்கப்படுகிறது.

1.1. சொற்களின் இயல்பு

1.1.0. சொற்கள் பொருள் உணர்த்தல்:-

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் உரிச்சொல் ஆகிய எல்லாச் சொற்களும் பொருள் உணர்த்துபவை ஆகும். பொருள் உணர்த்தாச் சொற்கள் எவையுமில்லை.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

- (சொல், பெயரியல் - 155)

முயற்கோடு என்பவை போன்று மெய்ப்பொருளை உணர்த்தாது பொய்ப் பொருளை உணர்த்துமாயினும் அவையும் பொருளுணர்த்துவனவே என்கிறார் சேனாவரையர்.

1.1.1. சொல்லும் பொருளும்:-

சொல்லினுடைய பொருளை அறிதலும் சொல்லின் இயல்பறிதலும் சொல்லினால் புலப்படுவது ஆகும் என்பர் அறிஞர்.

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்

சொல்லி னாகும் என்மனார் புலவர்"

(சொல், பெயரியல் - 156)

(எ.கா) சாத்தன் வந்தான்

1.1.2. குறிப்பும் வெளிப்படையும்:-

சொல்லைக் கொண்டே பொருளை அறிதலும், சொல்லால் மட்டுமின்றி சொல்லுடன் கூடிய குறிப்பினால் பொருளை அறிதலும் எனப் பொருள் உணரும் நிலை இரண்டு வகைப்படும் என்பர் அறிஞர்.

"தெரியுவேறு நிலையலுங் குறிப்பால் தோன்றலும்

இருபாற்றென்ப பொருண்மை நிலையே"

- (சொல், பெயரியல் - 157)

(எ.கா) அவன், இவன், உவன் - பொருள் தெளிவாக உணர்த்தின.

அவர் ஒருவர் வந்தார் – ஒருவர் ஆணா பெண்ணா என்பது குறிப்பால் பெறப்படும்.

1.1.3. சொற்களின் பாகுபாடு:-

பெயர்ச் சொல், வினைச் சொல் எனச் சொல் இரண்டு என்பர் அறிஞர்.

"சொல்லெனப் படுப பெயரே வினையென
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே"

- (சொல், பெயரியல் - 158)

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும்.

"இடைச் சொல் கிளவியும் உரிச் சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றுமென்ப"

- (சொல், பெயரியல் - 159)

1.2. பெயர்ச் சொல்லின் இலக்கணம்:-

பெயர்ச் சொல் தோன்றுமிடத்தைப் பொறுத்து, உயர் திணையிடத்தில் வருபவையும் அஃறிணையிடத்தில் வருபவையும் விரிவுத் திணையிடத்தில் வருபவையும் என மூவகைப்படும்.

"அவற்றுள்
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோர் அன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே"

- (சொல், பெயரியல் - 160)

இருதிணையாகப் பிரிந்த ஐந்து பால் சொற்களுக்கும் பெயரிடத்து உரிய பொருள் உரியனவாம்.

(எ.கா) அவன், பெண் மகன், அவள், மக்கள் என்பவை போல் வரும்.

1.2.1. உயர்திணைப் பெயர்கள்:-

"அவ்வழி
அவன் இவன் உவனென வருஉம் பெயரும்
அவள் இவள் உவளென வருஉம் பெயரும்
அவர் இவர் உவரென வருஉம் பெயரும்
யான் யாம் நாமென வருஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னும்
ஆவயின் மூன்றோடு அப்பதினைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே"

- (சொல், பெயரியல் - 162)

யான் என்பது ஒருவன் ஒருத்தி என்னும் பகுதியை உணர்த்தாதாயினும் அத்திணையில் ஒருமையை உணர்த்துவதால் பாலறி வந்த பெயராம் என்பர் சேனாவரையர்.

உயர்திணைப் பெயர்களாக மேலும் பதினைந்து தொடர்களைத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

ஆண்மை அடுத்த மகன் என் கிளவி ⟹ ஆண் மகன்

பெண்மை அடுத்த மகள் என் கிளவி ⟹ பெண் மகள்
பெண்மை அடுத்த இகர இறுதி ⟹ பெண்டாட்டி
வளர்ந்து வரும் இகரம் ஐகாரம் ⟹ நம்பி. நங்கை
முறைமை சுட்டா மகனும் மகளும் ⟹ ஆடூஉ, மகடூஉ
சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் ⟹ அவ்வாளன்
அவை முதலாகிய பெண்டு என் கிளவி ⟹ அப்பெண்டு
ஒப்பொடு வரூஉம் கிளவி ⟹ பொன்னன்னான் பொன்னன்னாள்

என உயர்திணைப் பெயர்கள் அமைந்து வரும்.

1.2.2. அஃறிணைப் பெயர்:-

அது இது உதுவென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவை இவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை யென்னும் பெயரும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே''

- (சொல், பெயரியல் - 167)

உயர்திணைப் பெயர் கூறி, அஃறிணைப் பெயரை அடுத்ததாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

1.2.3. அஃறிணைக்குரிய 'கள்' விகுதி :-

''கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே''

- (சொல். பெயரியில் 169)

'கள்' என்னும் விகுதியுடன் சேர்வதற்குரிய தன்மையை உடைய இயற்பெயர்கள். பலவறி சொல்லாக அமைந்து நிற்கும்.

(எ.கா) குதிரை என்னும் இயற்பெயர் 'கள்' உடன் சேர்ந்து 'குதிரைகள்' என்று ஆகும். அஃறிணையில் பன்மையும் ஒருமையும் ஆகிய பால் தோன்றுமாறு வருகின்ற எல்லாப் பெயர்களும் அஃறிணைக்கு உரியனவாகும்.

1.2.4. விரவுப் பெயர் :-

இருதிணைக்கும் பொதுவாக வருகின்ற சொற்கள் பலவுள்ளன. உயர்திணைக்கண் செல்லுமிடத்து உயர்திணைப் பெயராயும் அஃறிணைக்கண் செல்லுமிடத்து அஃறிணைப் பெயராயும் வேறுபடுவன விரவுப் பெயர்களாகும். இவற்றை நோக்கினால் தத்தம் வினையோடு சேர்ந்து திணையை அறிவிக்காது என்பர்.

''இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே''

- (சொல். பெயரியல் 172)

(எ.கா)　　சாத்தன் வந்தான்

சாத்தன் வந்தது

நிகழ்காலம் பற்றி இன்ன பால் எனச் சுட்டாத 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினையால், உயர்திணை ஒருமைப் பெயர் தோன்றுவதுமுண்டு. அது மரபு தழுவிய வினையோடு வரும் என்பர்.

"நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை யொருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான"

- (சொல். பெயரியல் 173)

பால்வரை கிளவி என்பது 'செய்யும்' என்னும் முற்றுச் சொல்லைக் குறிக்கும்.

(எ.கா)　　சாத்தன் யாழ் இசைக்கும்

சாத்தி சாந்தரைக்கும்

அ∴றிணைக்கின்றி உயர்திணை ஒருமையை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

1.2.5. விரவுப் பெயரின் தொகை வகை:-

விரவுப் பெயர் பால் தெரியுமாறு உணர்த்தி, தம்மையும் உணர்த்தும் என்பர்.

"இயற்பெயர் சினைப் பெயர் சினை முதற் பெயரே
முறைப் பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே"

- (சொல். பெயரியல் 174)

இயற்பெயர் முதலாக நீ என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பெயர்களும் அவை போன்ற பிறவும் விரவுப் பெயர்களாகும். விரவுப் பெயர் என்பது பொதுப் பெயராகும்.

1.2.5.1. இயற்பெயர்:-

இயற்பெயரானது, 1. பெண்மை இயற்பெயர், 2. ஆண்மை இயற்பெயர் 3. பன்மை இயற்பெயர், 4. ஒருமை இயற்பெயர் என நான்கு வகைப்படும்.

1.2.5.2. சினைப்பெயர்:-

சினைப் பெயரானது, 1. பெண்மைச் சினைப் பெயர், 2. ஆண்மைச் சினைப் பெயர், 3. பன்மைச் சினைப் பெயர், 4. ஒருமைச் சினைப் பெயர் என நான்கு வகைப்படும்

1.2.5.3. சினை முதற்பெயர்:-

"பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே

ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று

அந்நான்கு என்ப சினைமுதற் பெயரே''

- (சொல், பெயரியல் - 178)

சினை முதற் பெயரானது, மேற்சொன்னவாறு நான்கு வகைப்படும்.

1.2.5.4. முறைப் பெயர் :-

முறைப் பெயரானது,

1. ஆண்மை முறைப் பெயர், 2. பெண்மை முறைப் பெயர் என இரண்டு வகைப்படும்.

1.2.6. தாம், தான், எல்லாம் :-

தாம் என்னும் பெயர் இருதிணையிடத்திலும் பன்மைப் பாலுக்கு உரியதாகும்.

(எ.கா) தாம் வந்தார் – தாம் வந்தன

'தான்' என்னும் பெயர் இருதிணையிடத்திலும் ஒருமைப் பாலுக்கு உரியதாகும்.

(எ.கா) தான் வந்தான்

தான் வந்தாள்

எல்லாம் என்னும் பெயர் இரு திணையிடத்திலும் பன்மைப் பொருளை உணர்த்தும்.

(எ.கா) எல்லாம் வந்தார்

எல்லாம் வந்தன

'எல்லாம்' என்னும் சொல் உயர்திணையிடத்தில் வரும் பொழுது தன்மைப் பன்மைக்கு வருதலன்றி முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் வராது என்பர்.

1.2.7. நீயிர் நீ :-

நீயிர், நீ என்னும் இரண்டு சொற்களும் திணையை முறையாக அறிவிக்காது. இருதிணையையும் ஒருங்கே உணர்த்தும் பொருளை உடையன.

''நீயிர், நீயென வரூஉங் கிளவி

பால்தெரி பிலவே யுடன்மொழிப் பொருள''

- (சொல், பெயரியல் - 188)

(எ.கா) நீயிர் வந்தார் – நீ வந்தாய் என இரு திணைக்கும் பொதுவாய் நிற்கும்.

'நீ' என்னும் பெயர் ஒருமைக்குரியதாகும். ஒருமையென்பது ஒருவன் - ஒருத்தி, ஒன்று என்பனவற்றிற்கெல்லாம் பொதுவாகிய ஒருமை.

(எ.கா) நீ வந்தாய்

'நீயிர்' என்னும் பெயர் பன்மைக்குரியதாகும். பன்மையென்பது பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவானதாகும்.

(எ.கா) நீயிர் வந்தீர்

1.2.8. ஒருவர் என்னும் சொல் :-

ஒருவர் என்னும் பெயர்ச் சொல், உயர்திணை ஆண், பெண்ணைக் குறிக்கும். ஒருவன் ஒருத்தி என்னும் இரு பாலுக்கும் பொதுவாய் வரும்.

“ஒருவர் என்னும் பெயர் நிலைக் கிளவி

இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை’

- (சொல், பெயரியல் - 191)

(எ.கா) ஒருவர் வந்தார்.

ஒருவர் என்னும் பெயரியல்பு ஒருமைப் பெயராக வருமாயினும் பன்மைச் சொல்லாகவே ஏற்கப் பெறும்.

1.12.9. பால் திரிந்த பெயரின் வினை முடிபு:-

“மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி

மகடூஉ வியற்கை தொழில்வயி னான”

- (சொல், பெயரியல் - 194)

பெண்மைப் பொருளிடத்துப் பால் திரிந்து வருகின்ற பெண்மகன் என்னும் பெயர் வினை கொள்ளுமிடத்துப் பெண்மைக்குரிய வினையினை ஏற்கும்.

(எ.கா) பெண்மகன் வந்தாள்

1.2.10. பெயரீறு செய்யுளுள் திரிதல் :-

செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயர்களும் பலவுள்ளன.

‘கழனி நல்லூர் மகிழ்நர்க் கென்னிழை

நெகிழப் பருவரல் செப்பா தோயே’

- (நற்றிணை – 70)

என வரும் அடிகளின் இறுதிச் சீர் ஆகாரம் ஓகாரமாய் திரிந்ததைக் காணலாம்.

1.2.11. உயர்திணை ஈறு அமைந்த விரவுப் பெயர்கள் :-

செய்யுளுள் கருப் பொருள் மேல் சொல்லப்படும் இருதிணைகளுக்குமுரிய பெயர் உயர்திணையை உணர்த்தாது.

அந்தந்த நிலத்தின் அ∴றிணைப் பொருளாய் வழங்கப்பட்டு வருவதே காரணமாகும்.

“இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்

இயற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா

நிலத்துவழி மருங்கின் தோன்றலான”

- (சொல், பெயரியல் - 196)

(எ.கா) “கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு

வதுவை யயர்ந்து வன்பறழ்க் குமரி”

இவ்வடிகளில் கடுவன், மூலன், குமரி என்பவை உயர்திணையைச் சுட்டாது.

கருப்பொருளை உணர்த்தும் விரவுப் பெயர் உயர்திணையைச் சுட்டாது, அ∴றிணையைச் சுட்டுவது அத்திணைக்குரிய பெயர் வழங்காத இடத்தில் ஆகும்.

(எ.கா) “செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளை”

இவ்வடியில் காளை என்பது உயர்திணையை உணர்த்தும்.

---------------

சிறுவினாக்கள்

1. பெயர்ச் சொல்லின் இலக்கணம் யாது?
2. ‘ஒருவர்’ என்னும் சொல் வரும் விதம் யாது?
3. சொற்களின் பாகுபாடு எவ்வாறு அமையும்?
4. ‘கள்’ விகுதி அஃறிணையில் அமையும் விதம் யாது?
5. முறைப் பெயரின் வகை யாது?

பெரு வினாக்கள்

6. உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் அமையும் விதத்தை எழுதுக. விரவுப் பெயரின் இலக்கணத்தை விளக்குக.

## குறிப்பு

## 6. வினையியல்

### இயல் : 6

1.0. வினையியல்:- விளக்கம்

வினைச் சொல்லின் இலக்கணத்தை உணர்த்துவதால் இவ்வியல் வினையியல் என அழைக்கப்படுகிறது. வினையென்பது, பல பொருள் ஒரு சொல்லாய்த் தொழிற்பண்பையும் அதன் காரியமாகிய வினை நிகழ்ச்சியையும் உணர்த்தும். வினை நிகழ்ச்சியை உணர்த்தும் சொல்லை வினைச்சொல் என்று கூறுவது மரபு. வினைச்சொல் வேற்றுமையுருபை ஏற்காது. வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காலம் காட்டி நிற்கும்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூன்றாகும். தொழில் முற்றுப்பெற்ற நிலை இறந்தகாலம், தொழில் தொடங்கி முடிவு பெறாது தொடர்ந்து நிகழும் நிலை நிகழ்காலம், தொழிலே தொடங்கப் பெறாத நிலை எதிர்காலம். இம்முக்காலங்களுள் ஒன்றை வெளிப்படையாகக் காட்டுவனவற்றை வினை என்றும், குறிப்பாக உணர்த்துவனவற்றைக் குறிப்பு என்றும் கூறுவர் தொல்காப்பியர். இதுவே பிற்காலத்தில் தெரிநிலை வினை, குறிப்பு வினை என வழங்கப்பட்டது.

வினைச் சொற்கள் முற்று, வினையெச்சம், பெயரெச்சம் என மூவகையதாகும். பால் உணர்த்தும் ஈறுகளாகிய விகுதிகளோடு கூடி நிற்பன வினைமுற்றுகளாகும்.

இவ்வியலில் உள்ள நூற்பாக்கள் ஐம்பத்தொன்று எனச் சேனாவரையர் கூறுகிறார்.

1.1. வினைச்சொல்லின் பொது இயல்பு:-

வினை என்பது வேற்றுமை உருபுகளோடு பொருந்தாது. காலத்தோடு புலப்பட்டு நிற்கும்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

(சொல், வினையியல் - 198)

(எ.கா.)

உண்டான், கரியன் என்பன வேற்றுமையை ஏற்காமல் காலத்தோடு கூடி நிற்பதைக் காணலாம்.

1.2. காலம்:-

இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூன்றாகும்.

"காலந்தாமே மூன்றென மொழிப"

(சொல், வினையல் - 199)

முக்காலங்களும் வினைச்சொற்கள் தோன்றுமிடத்தில் குறிப்பு வினையுடனும் மெய்ந் நிலையுடையனவாகும்.

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே"

(சொல், வினையியல் - 200)

(எ.கா)

உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என வரும்.

1.3. வினைச் சொற்களின் வகை:-

குறிப்புப் பொருட்கண்ணும் வினைப் பொருட்கண்ணும் தோன்றிக் காலத்துடன் வரும் எல்லா வினைச் சொற்களும் தோன்றுமிடத்து, உயர் திணைக்குரியனவாயும், அ..ஃறிணைக்குரியனவாயும், இரண்டு திணைக்கும் ஒத்த உரிமையுடையனவாயும் என மூன்று பகுதியாகும்.

''குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும், அ.ஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே''

- (சொல், வினையியல் - 201)

(எ.கா)

உண்டான், கரியன், சென்றது, செய்யது, வந்தனை, வெளியை என வரும்.

2.0. உயர்திணை வினைகள்:-

2.1. தன்மைப் பன்மை வினைமுற்று:-

அம், ஆம், எம், ஏம் என்னும் விகுதிகள் கும், டும், தும், றும் என்னும் நான்கு விகுதிகளுடன் எட்டாக நின்று தன்மைப் பன்மையை உணர்த்தும்.

''அவைதாம்
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூங் கடதற வென்னும்
அந்நாற் கிளவியோ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே''

-(சொல், வினையியல் - 202)

(எ.கா)

உண்ணா நின்றனம், உண்கின்றனம்;
உண்ணா நின்றாம், உண்கின்றாம்
உண்ணா நின்றனெம், உண்கின்றானம்;
உண்ணா நின்றேம், உண்கின்றேம்
உண்ணா நின்றனேம், உண்கின்றனேம்

இவை போன்று விகுதியில் 'அன்' பெற்று இறந்த காலத்தில் நிற்கும்.

2.2. தன்மை ஒருமை வினைமுற்று:-

கு, டு, து, று என்னும் நான்கு ஈற்றெழுத்துச் சொற்களுடன் என், ஏன், அல் என்னும் மூன்றும் கூடி வருகின்ற ஏழும் தன்மை ஒருமை வினைமுற்றுச் சொற்களாம்.

''கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு

என் ஏன் அல் என வரூஉம் ஏழும்

தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லாகும்.

-(சொல். வினையியல் - 203)

(எ.கா) உண்கு, உண்டு, வருது, சேறு எனவும் உண்டனென், உண்ணாநின்றனென், உன்குவென் உண்டேன், உண்ணா நின்றேன், உண்டல் எனவும் வரும்.

2.3. செய்கு என்னும் வாய்பாட்டு வினை:-

தன்மை ஒருமைச் சொற்கள் ஏழனுள் 'செய்கு' என்னும் சொல் வினையுடன் முடிந்தாலும் தன் இயல்பிலிருந்து திரியாது.

"அவற்றுள்

செய்கென் கிளவி வினையொடு முடியினும்

அவ்வியல் திரியாது என்மனார் புலவர்"

-(சொல், வினையியல் - 204)

(எ.கா)

'காண்கு வந்தேன்' என அமைந்து வரும்

2.4. படர்க்கை ஒருமை வினைமுற்று:-

அன், ஆன், அள், ஆள், என்னும் ஈற்றையுடைய நான்கு சொற்களும் உயர்திணை ஒருமை உணர்த்தும் படர்க்கைச் சொற்களாகும். இந்நான்கு ஈறுகளும் மூன்று காலங்களையும் காட்டி நிற்கும்.

"அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்

ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே"

-(சொல், வினையியல் - 205)

(எ.கா)

உண்டான், உண்ணாநின்றனன், உண்பன்;

உண்டான், உண்ணாநின்றான், உண்டான்;

உண்டனள், உண்ணாநின்றனள், உண்பள்;

உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள்

ஆகியவையாகும்.

2.5. படர்க்கைப் பன்மை வினைமுற்று:-

அர், ஆர், ப என்னும் ஈற்றையுடைய மூன்று சொற்களும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொற்களாகும்.

"அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்

பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே"

- (சொல், வினையியல் - 206)

(எ.கா)

உண்டனர், உண்ணா நின்றனர், உண்பர்.

உண்டார், உண்ணா நின்றார். உண்பார்

உண்ப என வரும்

2.6. உயர்திணைக்குரிய வினைமுற்றுக்கள்:-

பன்மையும், ஒருமையுமாகிய பால் தெரியுமாறு வந்த இருபத்து மூன்று ஈற்று வினைச் சொற்களும் உயர்திணையையுடையன.

"பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்று தலை யிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே"

- (சொல், வினையியல் - 208)

(எ.கா)

"யானும் என் எ∴கமும் சாறும்"

'யார்' என்னும் வினாப் பொருள் தரும் சொல் உயர்திணையிடத்து மூன்று பாலுக்கும் உரித்தாகும்.

அவன் யார்?
அவள் யார்?
அவர் யார்?
என நிற்கும்.

2.7. குறிப்பு வினைமுற்று:-

ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருட்கண்ணும் ஏழாம் வேற்றுமை நிலைப் பொருட்கண்ணும் ஒப்புப் பொருட் கண்ணும், பண்புப் பொருட் கண்ணும் அப்பொருள் பகுதி பற்றி வரும் சொல்லிடத்தில் காலம் குறிப்பால் தோன்றும்.

(எ.கா)

கச்சினன், கழலினன், இல்லத்தன், புறத்தன், பொன்னன்னன், புலி போல்வன், கரியன், செய்யன் எனவும் வரும்.

"அதுச் சொல் வேற்றுமை யுடைமை யானுங்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானுமென்று
அப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்"

(சொல், வினையியல் - 213)

அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் பொருள் பற்றி வருவனவும் குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும். எல்லாச் சொல்லும் காலத்தைக் குறிப்பால் உணர்த்தும்.

(எ.கா) அல்லன், அல்லள், அல்லர்
இவன். இவள், இவர்
உளன், உளள், உளர்
வல்லன், வல்லள், வல்லர்
என வரும்.

2.8. குறிப்பு வினைமுற்றின் ஈறு:-

பன்மை ஒருமையாய் பாலை அறிவித்து வரும் வினைச் சொல் உயர்திணையிடத்துக் கூறிய தெரிநிலை வினையுடன் பொருந்தி நிற்கும்.

"பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்

காலக் கிளவி உயர்திணை மருங்கின்

மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே''

- (சொல், வினையியல் - 215)

தன்மையும் படர்க்கையும் உணர்த்தும் வினையீற்றுள் குறிப்பு வினைக்கு ஏற்பன:

அம், ஆம் : எம், ஏம் : என், ஏன் என்னும் தன்மை ஈறு ஆறும் அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்னும் படர்க்கை ஈறு ஆறும் எனப் பன்னிரண்டாகும்.

(எ.கா)

கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென்,

கரியேன் எனவும்

கரியன் கரியான், கரியள், கரியாள்,

கரியர், கரியார் என வரும்.

3.0. அ∴றிணை வினை :-

3.1. பன்மை வினைமுற்று:-

அகரம், ஆகாரம், வகர உயிர் மெய் இம்மூன்றும் அ∴றிணைப் பன்மைப் படர்க்கையாகும்.

''அ ஆ வ என வரூஉம் இறுதி

அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை''

- (சொல், வினையியல் - 216)

(எ.கா) உண்டன உண்ட, வந்தன வந்த, சென்றன சென்ற எனவும்

போயின போயன போய - என அமையும்

3.2. ஒருமை வினைமுற்று :-

ஒன்றனை உணர்த்தும் படர்க்கை வினையாவது, தறட என்னுமிவற்றின் மேல் ஏறிய குற்றியலுகரத்தை ஈற்றிலேயுடைய சொல்லாகும்.

''ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த

குன்றிய லுகரத் திறுதி யாகும்''

- (சொல், வினையியல் - 217)

(எ.கா)

வந்தது, கூயிற்று, குண்டுகட்டு என வரும்

அ∴றிணைப் பன்மை வினை முற்றுக்கள்:-

பன்மை ஒருமையாகிய, பால் தெரிய வந்த மேற்கூறப்பட்ட ஆறு ஈற்றுச் சொற்களும் அ∴றிணையாகும்.

'எவன்' என்னும் வினாச் சொல் மேற் கூறப்பட்ட அ∴றிணை இரண்டு பாலுக்கும் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர்.

''அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்

ஒக்கும் என்ப எவனென் வினாவே''

- (சொல், வினையியல் - 219).

(எ.கா) அ∴தெவன், அவையெவன் என வரும்.

3.3. குறிப்பு வினைமுற்று:-

இன்று, இல, உடைய, அன்று உடைத்து, அல்ல, கரிது என்னும் இவையும் இவை போல் வருவனவும் வினைக் குறிப்புச் சொற்களாகும்.

"இன்றில உடைய என்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
பண்பு கொள் கிளவியும் உளவென் கிளவியும்
பண்பின் ஆகிய சினை முதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்"

- (சொல், வினையியல் - 220)

(எ.கா) இன்று இல, கோடுடைத்து, கோடுடைய அதுவன்று, அவையல்ல என வரும்.

4.0. விரவு வினை :-

பன்மையும் ஒருமையும் ஆகிய பால் விளக்கிக் குறிப்புப் பொருள் பற்றி வரும் வினைச் சொல் மேற்கூறப்பட்ட அ.்.றிணை வினையோடு ஒக்கும்.

"பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபின் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி அ.்.றிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே"

- (சொல், வினையியல் - 221)

முன்னிலை, வியங்கோள், வினையெச்சம், இன்மை செப்பல், வேறு, செய்ம்மன, செய்யும், செய்த என்னும் எட்டுச் சொற்களும் பொதுத் தன்மையில் பிரிந்து ஒரு காலத்து உயர்திணை உணர்த்தியும், ஒரு காலத்து அ.்.றிணை உணர்த்தியும் வேறுபடுகின்ற தொழிலும் இரு திணைக்கும் பொருந்தி நிற்கும் இயல்பின

4.1. முன்னிலை ஒருமை வினைமுற்று:-

"அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இஐ ஆயென வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்"

- (சொல், வினையியல் - 123)

(எ.கா) உரைத்தி, உண்டி, தின்றி எனவும்
உண்டனை, உண்ணா நின்றனை, உண்மை
எனவும் வரும்.

4.2. முன்னிலைப் பன்மை வினைமுற்று:-

"இர் ஈர் மின்னென வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர்"

- (சொல், வினையியல் - 224)

இர், ஈர், மின் என்னும் ஈற்றையுடைய மூன்று சொற்களும் பல்லோர் கண்ணும் சொல்லுதற்கண் ஒத்து நிற்கும்.

(எ.கா) உண்டனிர், உண்ணா நின்றனிர்,
உண்குவிர் எனவும்
உண்டீர் உண்ணா நின்றீர், உண்குவீர்
உண்மின், தின்மின் எனவும் வரும்.

4.3. வியங்கோள் வினை:-

வியங்கோள் வினை, தன்மை, முன்னிலை ஆகிய இரண்டிடத்தும் பெரும்பாலும் வராது. சிறுபான்மை வரும்.

"அவற்றுள்
முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடும்
முன்ன தாகும் வியங்கோட் கிளவி"

- (சொல், வினையியல் - 126)

4.4. செய்யும் என்னும் வினை:-

பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையுமாகிய மூன்றும் நிகழ்காலத்து வரும் செய்யும் என்னும் சொல்லோடு பொருந்தாது.

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளா"

- (சொல், வினையியல் - 227)

4.5. வினையெச்ச வாய்பாடுகள்:-

பொதுவகையால் எய்தியவற்றுள், வியங்கோள் கிளவிக்கும், செய்யும் என் கிளவிக்கும் வினையெச்சத்தினது பாகுபாடு உணர்த்தப்படுகிறது.

"செய்து செய்யுச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச்
- செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி"

- (சொல், வினையியல் - 228)

செய்து என்பது முதலாக செயற்கென ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதும் வினையெச்சமாகும்.

(எ.கா) உண்டு, வந்து, சென்று என வரும்.

பின்னும், முன்னும், காலும், சடையும், வழியும் இடத்தும் என்னும் ஈற்றாய் வருவனவும் வினையெச்சம் ஆகும்.

"பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே"

- (சொல், வினையியல் - 229)

(எ.கா) நீயிர் பொய் கூறிய பின் மெய் கூறுவார்
யார்? என வரும்.

மேற்சொல்லப்பட்ட பதினைந்து வினையெச்சத்துள் முதற் கண் நின்ற செய்து, செய்யூ., செய்பு என்னும் மூன்று வாய்பாடுகளும் தன் வினை முதல் வினையால் முடியும்.

"அவற்றுள்

முதல் நிலை மூன்றும் வினைமுதல் முடிபின"

- (சொல், வினையியல் - 230)

(எ.கா) உண்டு வந்தான்

உண்ணூ வந்தான்

உண்குபு வந்தான்

கற்று வல்லனாயினான் என வரும்

4.6. பிற வாய்பாடுகள் :-

செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்று எச்சங்கள் நீங்கலாக ஏனை எச்சங்கள் வினைமுதல் வினையினாலும், அவ்விடத்து வந்து பொருந்தும் பிறவினையினாலும் வரையறையின்றி முடிந்து நிற்கும்.

"ஏனை எச்சம் வினை முத லானும்

ஆன்வந் தியைபும் வினைநிலை யானும்

தாமியல் மருங்கின் முடியும் என்ப"

- (சொல், வினையியல் - 232)

(எ.கா) மழை பெய்தெனப் புகழ் பெற்றது,

மழை பெய்தென மரம் தழைத்தது.

4.7. வினையெச்சங்கள் அடுக்கி முடிதல் :-

பல வினை யெச்சங்கள் தாம் முற்றுப் பெறாமல் தொடர்ந்துவரினும் ஈற்றிலுள்ளது முடிய, அனைத்தும் பொருள் முடிவு பெறுவனவாகும்.

"பன்முறை யானும் வினை எஞ்சு கிளவி

சொன்முறை முடியாது அடுக்குந வரினும்

முன்னது முடிய முடியுமன் பொருளே"

- (சொல், வினையியல் - 233)

(எ.கா) உண்டு தின்றோடிப் பாடி வந்தான்

செய்யும், செய்த என்னும் சொற்கள் தொழில் முதனிலை எட்டனுள் இன்னதற்கு இது பயனாக என்னும் இரண்டைத் தவிர்த்து ஏனை ஆறு பொருள்களுக்கும் ஒத்த உரிமையவாகும்.

"நிலனும் பொருளும் காலமும் கருவியும்

வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட

அவ்வறு பொருட்குமோ ரன்ன உரிமைய

செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே"

- (சொல் - வினையியல் - 234)

(எ.கா) வாழுமில், கற்குநூல், துயிலுங்காலம் வளையுங்கோல், ஓதும் பார்ப்பான் எனச் செய்யும் என்னும் ஆறு பொருள் காலவெழுத்துப் பெறாமல் வந்தது.

4.8. செய்யும் என்னும் வாய்பாடு:-

“அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற் கண் வரைந்த மூவீற்றும் உரித்தே”

- (சொல், வினையியல் - 235)

நிலம் முதலாகிய பொருளொடு வரும்போது செய்யும் என்னும் சொல், விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை என்னும் மூவகைக்கும் உரித்தாகும்.

4.9. பெயரெச்சமும் வினையெச்சமும் :-

பெயரெச்சமும் வினையெச்சமும் செய்தற் பொருளேயன்றி செய்யாப் பொருளைப் பற்றி மறுத்துச் சொன்னாலும், அவ்வெச்சப் பொருள் உணர்த்தும் தம் தன்மையில் மாறுபடாது.

(எ.கா) உண்ணாச் சோறு
உண்ணாது வந்தாள்

“பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள் நிலை திரியா”

- (சொல், வினையியல் - 236)

4.1.0. ஈறு கெடுதல்:-

செய்யும் என்னும் பெயரெச்சத்து இறுதி உகரம் தான் ஏறி நின்ற ‘ய’கரமெய்யுடனும் கெட்டு விடும் என்பர் புலவர்.

“அவற்றுள்
செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடனறிதல் என்மனார் புலவர்”

- (சொல், வினையியல் - 238)

(எ.கா)

வாவும் புரவி, போகும் புழை என்பன ஈற்றுமிசை உகரம் மெய்யௌடுங்கெட வாம்புரவி, போம்புழை என நின்றன.

4.11. இயைதல்:-

இறந்த காலச் சொல் எதிர்காலச் சொல்லோடு இயைதலைக் குறிக்கும்.

இறந்த காலத்தில் வருதற்குரிய ‘செய்து’ என்னும் எச்சம் எதிர்கால வினையுடன் சேர்ந்து நிற்கும் இடமும் உண்டு.

“செய்தே னெச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம்”

- (சொல், வினையியல் - 1)

(எ.கா)

நீயுண்டு வழுவாய், உழுது வருவாய் எனச் சிதையாமல் எதிர்காலத்து வந்துள்ளன எனலாம்.

4.2. சிறப்புப் பொருளில் காலம் மயங்குதல்:-

சிறப்புடையதாக வினைகள் நாட்டி, அதற்குரிய கருத்தா, அச்செயல் முறை இல்லாத நிலையில் வாழ்ந்த காலம், வாழ்விழந்த காலம் எனக் கூறும் போது பிந்தியதை நிகழ்காலத்தில் கூற வேண்டும்.

‘‘மிக்கதன் மருங்கின் வினைச் சொல் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே’’

- (சொல், வினையியல் - 242)

(எ.கா) ஒருவன் தவம் செய்யின் சுவர்க்கம் புகும்.

4.13. வற்புறுத்தற் பொருளில் வரும் வினா:-

துணிந்து திட்பம் எய்துதற்கு வரும் வினாவினைச் சொல் வினை நிகழ்வை உணர்த்தாது, எதிர் மறுத்து உணர்த்துதற்கும் உரியவையாகும்.

‘‘வன்புற வரூஉம் வினாவிடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு
முடைத்தே’’

(சொல், வினையியல் 244)

(எ.கா) களியானாக, களித்தானாக என வரும்.

எதிர்காலத்துக்குரிய வினைச் சொல் பொருண்மை இயற்கையாதலும், தெளியப்படுதலும் செல்லுமிடத்து இறந்த காலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் விளங்கும்.

‘‘வாராக் காலத்து வினைச் சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் இறப்பத் தோன்றும்
இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை’’

- (சொல், வினையியல் - 245)

(எ.கா) பொருளை இழவா முன்னர் இயற்கையின்றிப் பொருள் இழந்தான், எனலும் மழை பொய்யாமுன் அதற்குரிய தெளிவான ‘மழை பெய்யும்’ எனக் கூறலுமாகும்.

4.14. செயப்படு பொருள் வினைமுதல் போல் வரல்:-

செயப்படு பொருளைச் செய்த வினைமுதல் போல் தொழிற்படச் சொல்லல் மரபாகும்.

‘‘செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன்
மரபே’’

- (சொல், வினையியல் )

(எ.கா) திண்ணை மெழுகிற்று என வரும்.

இறந்த காலமும், எதிர் காலம் எனும் இரண்டு காலமும் மயங்கித் தோன்றும் மயங்கு மொழிப் பொருளாயும் வரும்.

“இறப்பே எதிர்வே ஆயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்றும் மயங்கு மொழிக்
கிளவி

- (சொல், வினையியல் - 247)

இறப்பு எதிர்வு மட்டுமின்றி நிகழ்காலமும் மயங்கும்.

“ஏனைக் காலமும் மயங்குதல்
வரையார்’

- (சொல், தொல்காப்பியம் – 248)

(எ.கா) மூன்று காலமும் தம்முள் மயங்கும். இருப்பினும் ஏற்புழியல்லாது மயங்காது.

வருவினை – வந்தான்

பிறவுமன்ன - என்று கூறுவர், சேனாவரையர்.

**குறிப்பு**

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

## குறிப்பு

## 7. இடையியல்

## இயல் 7

1.0. இடையியல்:- விளக்கம்

இடைச் சொற்கள் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும். மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பாலும் இடையில் நிற்றலால் இடைச் சொற்களாயிற்று என்பார் சேனாவரையர். இடைச் சொல்லாவது பெயரும் வினையும் போலத் தனித்தனியே பொருளுணர உச்சரிக்கப்படாது பெயர் வினைகளைச் சார்ந்து உணர்த்தும் என்பர்.

1.1. இடைச் சொல்லின் இயல்பு:-

இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றையே வெளிப்படுத்துவன: தனியாக வரும் தன்மை இல்லை.

“இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்

நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே”

-(சொல், இடையியல் - 249)

(எ.கா)

‘அதுகொ றோழி காம நோயே’ (குறுந் - 5)

‘வருகதில் லம்மவெஞ் சேரிசேர’ (அகம் - 276)

பெயரும் வினையும் சார்ந்து அப்பொருளை வெளிப்படுத்தும்.

1.2. இடைச்சொற்களின் பாகுபாடு:-

இடைச்சொற்கள் என்பவை, இரண்டு சொற்கள் சேருமிடத்து அப்பொருள் விளங்க வருவனவும், வினைச்சொல்லை முடிக்குமிடத்துக் காலப்பொருளாய் வருவனவும், செயப்படுபொருள் முதலாகிய வேற்றுமைப் பொருட்கள் உருபாய் வருவனவும், தத்தம் குறிப்பால் பொருள் உணர்த்துவனவும், ஒலி நிறைத்தலே பொருளாக வருவனவும், ஒப்புமை தோன்றாத வழி, தான் அப்பொருள் தருதலும், என ஏழு வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

“அவை தாம்

புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதவுநவும்

வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்

வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்

அசைநிலைக் கிளவி யாகி வருநவும்

இசை நிறைக் கிளவி யாகி வருநவும்

தத்தங் குறிப்பிற் பொருள் செய் குநவுமென்று

அப்பண் பினவே நுவலுங் காலை”

-(சொல், இடையியல் - 250)

1.3. இடைச்சொல் நிற்குமிடமும் வேறுபாடும்:-

மேற்சொல்லப்பட்ட இடைச்சொல். இடையில் வருதலேயன்றி தம்மால் சாரப்படும் சொல்லுக்கு முன்னும் பின்னும் வருதலும், தம்மீது வேறுபட்டு வருதலும், பிறிதோர் இடைச்சொல் ஓரிடைச்சொல் முன் வருதலுமாகிய அத்தன்மையவெல்லாம் உரியனவாகும்.

"அவைதாம்

முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்

தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்

அன்னவை யெல்லாம் உரிய வென்ப"

- (சொல், இடையியல் - 251)

(எ.கா)

'அதுமன்' எனவும் 'கேண்மியா' எனவும் வரும். 'உடனுயிர் போகுகதில்ல' (குறுந்-5) என ஈறு திரிந்து வந்தது.

2.0. சிறப்பிலக்கணம்:-

2.1. 'மன்' எனும் இடைச் சொல்லின் பொருள்:-

கழிவு குறித்து நிற்பதும், ஆக்கம் குறித்து நிற்பதும், ஒழியிசைப் பொருண்மை குறித்து நிற்பதுமென 'மன்' என்னும் இடைச் சொல் மூன்றாகும்.

"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று

அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே"

-(சொல், இடையியல் - 252)

(எ.கா) சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே"

- புறம்

என்னும் அடியில் 'மன்' என்னும் சொல் 'இனி அது கழிந்தது' என்னும் பொருளைத் தருகிறது.

"பண்டு காடும னின்று கயல்பிறழும் வயலாயிற்று"

இவ்வடியில் 'மன்' எனும் சொல் ஆக்கத்தைக் குறிக்கிறது.

"கூறியதோர் வாண்மன்"

இவ்வடியில் ஒழிந்த சொற்பொருண்மையக் குறித்து வருகிறது.

2.2. 'தில்' என்னும் சொல்:-

விழைவு குறித்து நிற்பதும், காலம் குறித்து நிற்பதும் ஆண்டொழிந்து நின்ற சொற்பொருளை நோக்கி நிற்பதும் எனத் 'தில்' என்னும் சொல் மூன்றாகும்.

"விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று

அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே"

-(சொல், இடையியல் - 253)

(எ.கா)

"வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி

யரிவையைப்

பெறுகதில் லம்மே யானே"

- (குறுந் - 14)

- இவ்வடிகள் விழைவின் கண் வந்தது.

"பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே"

- இவ்வடி காலங் குறித்து நின்றது.

“வருகதில் லம்ம வெஞ் சேரி சேர”

- இவ்வடி ஒழியிசைப் பொருளைத் தருகிறது.

2.3. கொன் என்னும் சொல்:-

அச்சப் பொருளைத் தருவதும், பயமின்மைப் பொருளைத் தருவதும், காலப்பொருளைத் தருவதும், பெருமைப் பொருளைத் தருவதும் ‘கொன்’ என்னும் சொல்லாகும். இது நான்கு வகைப்படும்.

“அச்சம் பயமிலி காலம் பெருமையென்று

அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே”

-(சொல், இடையியல் - 254)

(எ.கா) “கொன்முனை யிரவூர் போலச்

சிலவாகுக நீதுஞ்சு நாளே”

- இவ்வடிகள் அச்சத்தைக் காட்டுகிறது.

“கொன்னே கழிந்தன்றிளமை”

- இவ்வடி பயமின்மையைக் குறிக்கிறது.

“கொன்வரல் வாடை நினதென…..”

- இவ்வடி காலம் எனும் பொருள் தருகிறது.

“கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே”

இவ்வடி நான்கு பொருளும் பட வந்தது.

2.4. ‘உம்’ என்னும் சொல்:-

எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் ஆகிய எட்டும் ‘உம்மை’ச் சொல்லாகும்.

“எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை

முற்றே எண்ணே தெரிநிலை யாக்கமென்று

அப்பால் எட்டே உம்மைச் சொல்லே”

-(சொல், இடையியல் - 255)

(எ.கா) ‘சாத்தனும் வந்தான்’ என்பதிலுள்ள எச்சம் கொற்றனும் வந்தான் எனும் எச்சம் குறித்து நிற்கிறது.

“குறவரு மருளுங் குன்றத்துப் படினே”

இவ்வடியில் மயக்கம் கொள்ளாமல் குன்றக் குறவர்கள் சிறந்தவர்கள். எனவே இது சிறப்பும்மையாயிற்று.

2.5. ‘ஓ’ என்னும் இடைச்சொல்:-

ஓகார இடைச் சொல்லானது பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு என்னும் ஆறு பொருள்களுடன் கூடி வரும்.

“பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை

தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ

இருமூன்று என்ப ஓகா ரம்மே”

-(சொல், இடையியல் - )

(எ.கா) “யானோ தேறேன்” – (பிறராயின் நம்பக்கூடும்)

இது பிரிநிலையை உணர்த்துகிறது.

"அவன் சென்றானோ"

இது வினாப் பொருள் தருகிறது.

"யானோ கள்வன்"

இது எதிர்மறை யாகும்

"காதலோ இது" (இது காமம், ஏமாற்று எனல்)

இது ஒழியிசை என்பர் அறிஞர்.

2.6. ஏகார இடைச்சொல்:-

ஏகார இடைச்சொல் தேற்றம் (தெளிவு) வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என்னும் ஐந்து பொருள்களில் வரும்.

"தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே"

-(சொல், இடையியல் - )

(எ.கா) 'நன்மை செய்தால் நன்மையே விளையும்' – தேற்றம்

'இது நீயோ செய்தாய்' – வினா

'சிறந்த மாணவி பிரியா' - பிரிநிலை

'நிலனே நீரே தீயே வளியே வானோ' – எண்ணுதல்

'ஈற்றசை இவ்வைந் தேகாரம்மே' –

- இறுதியில் வந்துள்ள 'ஏ' ஈற்றசையாகும்.

2.7. 'என' என்னும் இடைச்சொல்:-

'என' என்னும் இடைச்சொல் வினை, குறிப்பு, இசை, பண், எண், பெயர் என்னும் ஆறு சொற்களையும் சார்ந்து அவற்றின் பொருளைச் சிறப்பிக்கும் கருத்துடையதாகும்.

"வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரொடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே என என் கிளவி"

-(சொல், இடையியல் - )

(எ.கா)

'கொள்ளெனக் கொடுத்தான்' - வினை

'பொள்ளென ஆங்கே புறம்வேரார்' – குறிப்பு

'சரேலெனப் பாய்ந்தான்' - இசை

'சிவப்பெனத் தெரிந்தது' – பண்பு

'நிலனென நீரென - எண்

'அழுக்காறு என ஒரு பாவி' – பெயர்

2.8. 'என்று' என்னும் சொல்:-

'என்று' என்னும் சொல் 'என' என்ற இடைச்சொல்லைப் போலவே நின்று பொருளைச் சிறப்பிக்கும். அதாவது வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் என்ற ஆறு சொற்களைச் சார்ந்து நின்று பொருளுணர்த்தும்.

"என்று என் கிளவியும் அதனோ ரற்றே"

-(சொல், இடையியல் - )

(எ.கா) 'என்று சொன்னான்' – வினை

'விண்ணென்று தெறித்தது' – கடுமைக் குறிப்பு

'ஓவென்று கதறினான்' - இசை (ஒலி)

'வெம்மையென்று தவிர்த்தான்'- பண்பு

'ஆண் என்று பெண் என்று' - எண்

'கபிலர் என்று ஒரு புலவர்' - பெயர்

2.9. 'தில்' எனும் சொல்லுக்குச் சிறப்பு விதி:-

விழைவை உணர்த்துகின்ற 'தில்லை' என்னும் சொல் தன்மை இடத்தில் மட்டுமே வரும். ஏனைய காலம், ஒழியிசை இரண்டும் எல்லா இடத்திலும் வருமென்பதாகும்.

"விழைவின் தில்லை தன்னிடத்து இயலும்"

-(சொல், இடையியல் - )

(எ.கா) 'பெறுகதில்' – யான் பெற விழைகிறேன்.

2.10. ஏ, ஓ இடைச்சொற்களுக்குச் சிறப்பு விதி:-

தேற்றப் பொருள் 'ஏ'யும் சிறப்புப் பொருள் 'ஓ'வும் அளபெடை எடுத்த ஓசையினையுடையதாய் அவ்வப் பொருள்களை உணர்த்தும் என்பர்.

"தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்

அளபின் எடுத்த இசைய என்ப"

-(சொல், இடையியல் - )

(எ.கா.)

'வாய்மையே வெல்லும்'

'இதுவன்றோஒ காட்சி'

ஆகியவையாகும்.

2.11. 'மற்றும்' இடைச்சொல்லின் பொருள்:-

'மற்று' என்னும் இடைச்சொல் வினைமாற்று, அசைநிலை என்ற அவ்விரண்டு கூறுகளில் வருமென்பர் புலவர்.

"மற்று என் கிளவி வினைமாற்று அசைநிலை

அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்"

-(சொல், இடையியல் - )

(எ.கா)

வினைமாற்று ⟶ 'மற்றறிவாம் நல்வினை'-(இப்போது செய்வது நடக்கட்டும் பிறகு நல்வினை செய்வோம்)

அசைநிலை ⟶ 'அதுமற் றவலம் கொள்ளாது'-(மற்று பொருளின்றி அசைநிலையாய் நின்றது)

2.12. 'எற்று' என்னும் இடைச்சொல்:-

'எற்று' என்னும் இடைச்சொல்லானது ஒன்று கழிந்து போனதை உணர்த்தும்.

"எற்று என் கிளவி இறந்த பொருட்டே"

-(சொல், இடையியல் -)

(எ.கா)

"எற்றே என் அழகு' – என அழகு கெட்டுப் போனதை உணர்த்துவர்

'இறந்த பொருட்டு' என ஆசிரியர் குறிப்பிட்டது 'கழிந்தது' 'போய்விட்டது' என்னும் பொருளிலாகும்.

'மற்றையது' எனும் சொல்லின் பொருள்:-

'மற்றையது' என்னும் இடைச்சொல் முன்பு சுட்டியது ஒழிய, அதன் இனமான பிறிதொன்றைக் குறிக்கும்.

"மற்றையது என்னும் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே"

-(சொல், இடையியல் - )

(எ.கா.)

"மற்றையது எங்கே"- (மற்றது ஒழிய பிறிதொன்றை வினவுவது)

"மற்றையது ஒன்றும் மறவென்றான்" – கம்பர்

2.13. 'மன்ற' என்னும் சொல்:-

'மன்ற' என்னும் இடைச்சொல் தெளிவு – உறுதியைக் காட்டும்.

"மன்ற என் கிளவி தேற்றம் செய்யும்"

-(சொல், இடையியல் - )

(எ.கா.)

'நீ மடவை மன்ற' – (நீ நிச்சயமாக முட்டாளே)

2.14. 'தஞ்சம்' எனும் சொல்:-

'தஞ்சம்' என்ற இடைச்சொல் தெளிவுப் பொருளை உணர்த்துவதாகும்.

(எண்ணம் ⟶ எளிமை)

"தஞ்சக் கிளவி எண்மைப் "பொருட்டே"

-(சொல், இடையியல் - )

(எ.கா)

"முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்" –

↓

(அரசைக் கெடுப்பது எளிது)

2.15. 'அந்தில்' எனும்' சொல்:-

'அந்தில்' என்னும் இடைச்சொல் 'ஆங்க' என்னும் பொருளிலும், அசைநிலைச் சொல்லாகவும் இரண்டு முறைமைகளில் அமையும்.

"அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று
ஆயிரண்டாகும் இயற்கைத் தென்ப"

-(சொல், இடையியல் -)

(எ.கா.) (ஆங்க – ஆங்கு, அங்கு)

"வருமே' – சேயிழை யந்திற் கொழுநற் காணிய

(குறுந் - 293)

இவ்வடியானது இடக்குறிப்பைக் காட்டுகிறது.

2.16. 'கொல்' என்னும் சொல்:-

'கொல்' என்னும் இடைச்சொல் ஐயப்பொருளையே உணர்த்துவதாக அமையும்.

"கொல்லே ஐயம்"

-(சொல், இடையியல் - )

(எ.கா)

'வருவர்கொல் வாழி தோழி?'

இது ஐயப்பட்டு வினவுதலாகும்.

2.17. 'எல்' எனும் சொல்:-

'எல்' என்னும் இடைச்சொல் விளக்கம் என்னும் பொருளைத் தரும்.

"எல்லே இலக்கம்"

-(சொல், இடையியல் -)

(எ.கா)

இலங்குதல் - விளங்குதல் எனும் பொருள் தரும்.

'எல்வளை மகளிர்' – (ஒளிவீசும் வளையணிந்த மகளிர்)

2.18. 'ஆர்' எனும் சொல்:-

'ஆர்' என்னும் இடைச்சொல் அசைநிலையாகும் இடங்களும் உண்டு.

"அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல்"

-(சொல், இடையியல் - )

(எ.கா)

"பெயரினாகிய தொகையுமார் உளவே"

இவ்வடியில் வந்துள்ள 'ஆர்' என்பது அசைநிலையாக அமைந்துள்ளது.

2.19. முன்னிலை அசைச்சொற்கள்:-

மியா, இக, மோ, மதி, இகும், (இ) சின் என்னும் ஆறும் முன்னிலை அசைச் சொற்களாகும்.

"மியா இக மோ மதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்"

-(சொல், இடையியல் -)

முன் நிற்போரை ஏவுவதற்கும் அழைப்பதற்கும் இவ்வாறும் பயன்படும்

(எ.கா)

கேண்மியா, கண்டிக

மொழிமோ, உரைமதி

கண்டிகும், பூண்டிசின்

என வரும்.

2.20. 'அம்ம' எனும் சொல்:-

'அம்ம' என்னும் அசைச்சொல் படர்க்கையோரைத் தன்முகமாக்கித் தான் சொல்வதைக் கேட்கச் செய்யும்.

"அம்ம கேட் பிக்கும்"

-(சொல், இடையியல் - )

(எ.கா)

'அம்ம வாழி தோழி'

முன் உள்ள தோழியை தன் முகமாக அழைத்துக் கூறியது இது.

2.21. 'ஆங்க' எனும் சொல்:-

'ஆங்க' என்னும் சொல் உரையாடலிடையே உரையசை போல் பொருளின்றி வரும்.

"ஆங்க உரையசை'

-(சொல், இடையியல் - )

(எ. கா)

'ஆங்க குயிலும் மயிலும் காட்டி'

இவ்வடியில் பயின்று வந்துள்ள 'ஆங்க' எனும் சொல் பொருளில்லாமல் நிற்பதால் அசைநிலை ஆயிற்று.

2.22. ஒப்பில் போலி அசைநிலையாதல்:-

ஒப்புமை உணர்த்தாது வரும் 'போலும்' என்னும் சொல் 'ஆங்க' என்னும் இடைச்சொல்லைப் போல உரையசையாய் வரும்.

"ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்"

-(சொல், இடையியல் -)

(எ.கா)

"இங்கு யாரோ வருகிறார்கள் போலும்"

இவ்வடி உவமிப்பதற்காக வந்ததல்ல.

எனவே இது ஒப்பில் போலியாகும்.

2.23. அசைநிலைச் சொற்கள்:-

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என வரும் ஏழு சொற்களும் அசைநிலையாய் இடம் பெறும் இடைச்சொற்களாகும்.

"யா கா

பிறபிறக்கு அரோபோ மாது என வரூஉம்

ஆஏழ் சொல்லும் அசைநிலைக் கிளவி"

-(சொல், இடையியல் - )

(எ.கா)

'இவளிவட்காண்டிகா'

'நசைபிறக் கொழிய'

'இருங்குயில் ஆலுமரோ'

என்பன போன்று செய்யுளுள் அசையை நிரப்பிப் பொருள் தராமல் நிற்கும்.

2.24. பிரிவில் அசை நிலைகள்:-

ஆக, ஆகல், என்பது என்னும் மூன்றும் பிரிவில் அசைநிலைகளாக இடம்பெறும்.

'ஆக' 'ஆகல்' 'என்பது' என்னும்

ஆவயின் மூன்றும் பிரிநிலை அசைநிலை''

-(சொல், இடையியல் - )

(எ.கா.)

'கானம்' பாடினே மாக'

(பாட என்பதே பொருள்)

'அருளாய் ஆகலோ கொடிதே

(அருளாமை கொடிதென்பது பொருள்)

'நீ போனாய் என்பது தெரியும்'

(போனது தெரியும்)

பொருளைச் சார்ந்து பிரிக்க முடியாது. நிற்றலால் பிரிவில் அசை நிலை எனப்பட்டன.

2.25. 'ஔ' எனும்' இடைச்சொல்:-

ஒரு மொழியின் இறுதியில் வராது எனச் சொல்லப்பட்ட இரண்டு மாத்திரை அளவில் ஒலிக்கும் 'ஔ' என்னும் உயிரானது முதலில் கூறியவாறு பிரிவில் அசைநிலையாக வரும்போதும் அளபெடையாக வருமிடத்தும், அளபெடை வராதவிடத்தும் சொல்லானது குறிப்பினால் ஏற்படும் ஓசை அழுத்தங்களுக்கேற்ப பொருள் வேறுபடும்.

''ஈரளிபு இசைக்கும் இறுதிஇல் உயிரே

ஆயியல் நிலையும் காலத் தானும்

அளபெடை இன்றித் தான்வரு காலையும்

உளவென மொழிப பொருள்வேறு படுதல்

குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்''

- (சொல், இடையியல் -)

(எ.கா)

ஔஔ, ஔஉ, ஔ

இவை முன்பு களிப்பு, சிறப்பு, வியப்பு, வெறுப்பு, முதலிய பொருள்களை உணர்த்துகின்றன. இன்று ஆகா, ஓகோ, ஊகூம் என்ற வடிவங்களுக்கு நிகராக இவை அன்று வழங்கி இருக்கக் கூடும்.

2.26. குறிப்புப் பொருள் தருவன:-

'நன்று' ஈற்றில் இணையும் 'ஏ'யும்

'அன்று' ஈற்றில் இணையும் 'ஏ'யும்

'அந்து' ஈற்றில் இணையும் 'ஓ'வும்

'அன்' ஈற்றில் இணையும் 'ஓ'வும்

இவை போல்வன பிறவும் குறிப்பாகப் பொருளை உணர்த்தும் என்பர்.

“நன்றீற்று ஏயும் அன்றீற்று ஏயும்

அந்தீற்று ஓவும் அன்னீற்று ஓவும்

அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்

-(சொல், இடையியல் -)

(எ.கா)

‘மதுவை விழைதல் நன்றே’

இவ்வடியில் ‘தீது’ என்ற குறிப்புப்படவும் அமைந்துள்ளது.

“அந்தோ மழை வந்ததே”

இரக்கக்குறிப்பு இடம்பெற்றுள்ளது. ஐயோ, அச்சோ, அம்மா, ஆஆ. ஓஓ, அச்சச்சோ, அம்மம்மா என இன்று வழக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

2.27. எச்ச உம்மை:-

எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும் தத்தமக்குள் ஒருங்கே இயைந்து வரும். இவை இரண்டும் ஒரே தொடரின் உடன் நிற்காது.

“எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்

தத்தம்முள் மயங்கும்: உடனிலை இலவே”

-(சொல், இடையியல் -)

(எ.கா)

‘கண்ணனும் வந்தான்’

‘மணிவண்ணனும் வருவான்’

என்பன எச்சவும்மைகள்.

‘கண்ணன் வருவதும் உண்டு’

வாராதிருப்பதும் உண்டு’

என்பன எதிர்மறை உம்மைகள். இவையிரண்டும் ஒரு தொடரில் சேர்ந்து வராது.

2.28. முற்றும்மைத் தொகைச் சொல்:-

முற்றும்மையைப் பெற்றுவரும் தொகைச் சொல்லில் எச்சப் பொருள் கொள்வதற்கும் இடமுண்டு.

“முற்றிய உம்மிய தொகைச்சொல் மருங்கின்

எச்சக் கிளவி உரித்து மாகும்”

-(சொல், இடையியல் -)

(எ.கா)

‘பத்தும் கொடாதே’

இதில் சில குறையக் கொடு என முற்றும்மையில் எச்சப்பொருளும் நிற்கும்.

2.29. ஈற்றசை ‘ஏ’:-

செய்யுளின் இறுதியில் ஈற்றசையாக நின்று ஒலிக்கும் ‘ஏ’ ஒரு மாத்திரை அளபாதலும் உண்டு.

“ஈற்றுநின்று இசைக்கும் ஏ என் இறுதி

கூற்றுவாயின் ஓரளபு ஆகலும் உரித்தே”

- (சொல், இடையியல் - )

(எ.கா)

''கடல்போல் தோன்றல் காடிறந் தோரே'

'காடிறந்தேரே' எனக் குறுகியும் வரும்

2.30. எண்ணிடைச் சொற்கள்:-

உம், என என்னும் எண்ணிடைச் சொற்கள் தத்தமது இறுதியில் தொகைச் சொல் பெறும் கட்டாயமில்லை. பெறாதும் வரலாம்.

"உம்மை எண்ணும் என என் எண்ணும்

தம்வயின் தொகுதி கடப்பா டிலவே"

-(சொல், இடையியல் - )

(எ.கா.)

'இயல் இசை நாடகம் என்ற மூன்று தமிழும்'

இதில் மூன்று என்பது தொகைச்சொல்

'இயலும் இசையும் நாடகமும் கற்றான்'

தொகைச்சொல் பெறாது வந்தது.

2.31. 'ஏ' எனும் எண்ணிடைச் சொல்:-

'ஏ' கார இடைச்சொல் சொல்தோறும் வராமல் இடையிட்டு வரினும், எண்ணுதற் பொருளுடையதாகும் என்பர் புலவர்.

"எண்ணே கார இடையிட்டுக் கொளினும்

எண்ணுக் குறித் தியலும் என்மனார் புலவர்"

-(சொல், இடையியல் -)

(எ.கா)

'மலைநிலம் பூவே துலாக்கோல்

அனையர் ஆசிரியர்'

சொல்தோறும் ஏகாரம் வராமல் ஒரு சொல்லில் மட்டுமே வந்தாலும் அனைத்துச் சொல்லிலும் பயின்று வந்ததாகவே பொருள் கொள்ளப்படும்.

2.32. எனா, என்றா ஆகியவை:-

எனவும் என்பதில் உம்மை தொக்கு, எனா என வரும் சொல்லும் 'ஆ' ஈறுபெற்ற என்று என்னும் சொல்லும் எண்ணுகின்ற பொருளில் வரும்.

"உம்மை தொக்க எனா என் கிளவியும்

ஆஈறாகிய என்று என் கிளவியும்

ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன"

-(சொல், இடையியல் -)

(எ.கா)

'தேரினர் எனா களிற்றினர் எனா'

என எண்ணப்படும்

'ஒப்பும் உருபும் வெறுப்பும் என்றா

கற்பும் ஏரும் எழிலும் என்றா'

எனவும் எண்ணப்படும்.

2.33. எண்ணும்மையில் வேற்றுமை உருபு:-

எண்ணும்மையில் வேற்றுமை உருபு மறைந்து வருதல் உண்டு. உம்மை பெற்ற எண் எண்ணும்மையாகும். இரண்டாம் வேற்றுமை உருபும் ஏழாம் வேற்றுமை உருபும் அவ்வாறு தொக்கு வருவன என்பர்.

"உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார்'

(எ.கா)

"யாழும் குழலும் முழவும் இசைத்தனர்"

யாழையும் என இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்து 'உம்' பெறும். அவ்வுருபு தொக்கு முடிந்தது.

"வீட்டிலும் நாட்டிலும் காணப்படாதது"

வீட்டின்கண்ணும் என வர வேண்டிய 'கண்'ணுருபு தொக்கு நின்றது.

2.34. வினை சார்ந்த எண்ணிடைச் சொல்:-

எண்ணிடைச் சொற்கள் பெயரொடு வருதலேயன்றி வினையோடு வந்தாலும் எண்ணுத் தன்மையில் மாற்றம் பெறுவதில்லை. அவை வருமிடத்தை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா

நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே"

-(சொல், இடையியல் -)

(எ.கா)

'கண்டும் கேட்டும் வாழ்ந்தான்'

இது வினையெச்ச வினையில் வந்தது

2.35. என்று, என, ஒடு எனும் சொற்கள்:-

என்று, என, ஒடு என்பனன எண்ணிக்கைப்படுத்திச் சொல்ல வரும்போது சில இடங்களில் பிரிந்து ஏனைய இடங்களில் பொருந்தி வரும்.

"என்றும் எனவும் ஒடுவும் தோன்றி

ஒன்றுவழி உடைய எண்ணினும் பிரிந்தே"

-(சொல், இடையியல் -)

(எ.கா.)

'பொருள் கருவிகாலம் வினை இடனொடு ஐந்தும்'

இதில் ஒடு என்பது ஓரிடத்தில் மட்டும் வந்துள்ளது. எனினும் பிரிந்துசென்று அனைத்துச் சொற்களிலும் தோன்றிப் பொருளுணர்த்தும்.

'பொருளொடு கருவியொடு வினையொடு'... என வரும்.

2.36. இடைச்சொற்களுக்குப் புறனடை:-

இடைச்சொற்கள் வினைச்சொல்லோடும் பெயர்ச் சொல்லோடும் இயைந்து, தோன்றித் திரிந்து வேறுபட்டு வழங்குமெனில் அவற்றையும் அறிந்துகொளல் வேண்டும் என்பர்.

"அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென

மெய்பெறக் கிளந்த இயல வாயினும்

வினையொடும் பெயரொடும் நினையத்தோன்றாத
திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே''
-(சொல், இடையியல் -)

(எ.கா.)

'அதுமன் கொண்க தேரே'
இதில் மன் அசைநிலையாய் வந்தது
'தேவரே தின்னினும் வேம்பு'
இதில் ஏகாரம் சிறப்பைக் குறித்து வந்தது
'இன்று மழை பெய்யும் போலும்'
இதில் போலும் ஐயப்பொருள் தந்தது

2.37. மேலும் உள்ள இடைச்சொற்கள்:-

மேற்சொன்ன சொற்கள் தவிர மேலும் உள்ள இடைச்சொற்களுக்கு இலக்கண முறைப்படி அறிந்து கொள்ள வேண்டும் என்பர்.

''கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே''
-(சொல், இடையியல் -)

(எ.கா)

தெய்ய, மாலி, ஓரும், அத்தை, தொறு என வரும் இடைச்சொற்களும் இவைபோன்ற பலவும் உள்ளன.

சிறு வினாக்கள்

1. இடைச் சொல் நிற்குமிடமும் வேறுபாடும் யாது?
2. கொன் என்னும் சொல்லை விளக்கி அதன் வகைகளை எழுதுக.
3. 'ஓ' என்னும் இடைச் சொல் எவ்வெப் பொருள்களுடன் கூடி வரும்?
4. முன்னிலை அசைச் சொற்கள் யாவை?
5. எண்ணிடைச் சொற்கள் - குறிப்பு வரைக.

பெருவினாக்கள்

6. எண்ணிடைச் சொற்கள் குறித்து இடையியல் வழி ஆய்க.

இடையியல் கூறும் இடைச் சொற்களின் பொருளை விளக்கி எழுதுக.

**குறிப்பு**

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

………………………………………………………………………………….

## குறிப்பு

…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...
…………………………………………………………………………………...

## 8. உரியியல்

### இயல் - 8

1.0 உரியியல்:- விளக்கம்

உரிச் சொற்களை விளக்கும் இயல் உரியியல் ஆகும். பெயர், வினை, இடை மூன்றும் இன்றிச் சொற்கள் சிலதெளிவான பொருளுடன் விளங்குகின்றன. ஆனால் அவை முடிந்த பொருளுடையன அல்ல. ஆயினும் அவை தனிச் சொற்களாகக் கருதப்படுகின்றன. தனிச்சிறப்போடும் தனி உரிமையோடும் விளங்குவதால் இவற்றை உரிச்சொற்கள் என்பர்.

இசை, குறிப்பு, பண்பு, என்னும் பொருள்களை உடையதாய், பெயர் வினைகளைப் போன்றும் அவற்றிற்கு முதனிலையாகியும் வருவன உரிச்சொற்களாகும். இசை செவியால் உணரப்படுவது. பண்பு, ஐம்பொறிகளால் உணரப்படும் குணம். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்குத் தாமே உரியவாதலால் உரிச்சொல்லாயின. மேலும் இவை பெரும்பான்மையும் செய்யுளுக்கு உரியவாய் வருவதால் உரிச்சொல்லாயிற்று என்பர் சேனாவரையர்.

இவ்வியலில் 100 நூற்பாக்கள் உள்ளன என்பார் சேனாவரையர்.

1.1. உரிச்சொல்லின் இயல்பு:-

இசை, குறிப்பு, பண்பு, என்னும் பொருள்மேல் தோன்றி பெயரிலும் வினையிலும் உருபு தடுமாறி ஒருசொல் பல பொருள்களுக்கு உரித்தாய் வரினும் பலசொல் ஒரு பொருளுக்கு உரித்தாய் வரினும் கேட்கின்றவனால் நன்கு அறியப்படாத சொல்லை நன்கு அறியப்பட்ட சொல்லோடு பெயரும் வினையுமாகி ஒரு சொல்லாக நின்றாலும் வெவ்வேறு பொருளையே உணர்த்தும்.

"உரிச்சொல் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்"

-(சொல், உரியியல் - 297)

வெளிப்படையாகத் தோன்றும் உரிச்சொற்களைச் சிறப்பாக எடுத்துக் கூறுவதனால் பயன்யாதும் இல்லை. எனவே இவை இங்கு கூறப்படாது. வெளிப்படையாக வராத உரிச்சொற்களையே இங்கு சிறப்பித்துச் சொல்வர்.

1.1.1. உறு, தவ, நனி:-

வெளிப்படையாக வராத உரிச்சொற்கள் உறு. துவ, நனி என்னும் மூன்றும் ஆகும். இவை மிகுதி என்னும் குறிப்புப் பொருளை உணர்த்துகின்றது.

"அவை தாம்
உறு தவ நனியென வரூஉ மூன்றும
மிகுதி செய்யும் பொருள் என்ப"

-(சொல், உரியியல் - 299)

(எ.கா)

“உறுபுனல் தந்துல கூட்டி..”

“ஈயாது வீயு முயிர்தவப் பலவே”

“வந்துநனி வருந்தினை வாழியென் நெஞ்சே”

இவ்வடிகளில் பயின்று வந்துள்ள உறு, தவ, நனி என்னும் மூன்று சொற்களும் மிகுதி என்னும் குறிப்புப் பொருளை உணர்த்துகின்றது.

1.1.2. உரு, புரை:-

‘உரு’ என்னும் உரிச்சொல் அச்சம் என்னும் பொருளையும் ‘புரை’ என்னும் உரிச்சொல் உயர்வு என்னும் குறிப்புப்பொருளையும் உணர்த்தும்.

“உருவுட் காகும் புரையுயர்பு ஆகும்”

-(சொல், உரியியல் - 300)

(எ.கா)

“உருகெழு கடவுள்”

“புரைய மன்ற புரையோர் கேண்மை”

என அமைந்து வரும்

1.1.3. குரு, கெழு :-

குரு, கெழு என்று சொல்லக் கூடிய இரண்டு உரிச்சொற்களும் நிறம் என்னும் பண்பை உணர்த்தும்.

(எ.கா)

“குருமணித் தாலி”

“செங்கேழ் மென்கொடி

என வரும்.

1.1.4. செல்லல், இன்னல் :-

செல்லல், இன்னல் என்னும் உரிச்சொற்கள் இரண்டும் இன்னாமை என்னும் குறிப்புப் பொருளை உணர்த்தும்

“செல்லல் இன்னல் இன்னா மையே”

-(சொல், உரியியல் - 302)

(எ.கா)

“மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்”

“வெயில்புறந் தருவம் இன்ன லியக்கத்து”

செல்லல், இன்னல் என்று இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள சொற்கள் இன்னாமைப் பொருளையே உணர்த்தும்.

1.1.5. மல்லல் :-

‘மல்லல்’ என்னும் உரிச்சொல்லானது வளன் என்றும் குறிப்புப் பொருளை உணர்த்தும்.

“மல்லல் வளனே”

-(சொல், உரியியல் - 303)

(எ.கா)

"மல்லன்மா ஞாலம்"

என அமைந்து வரும்

1.1.6. 'ஏ' என்னும் சொல்:-

'ஏ' என்னும் உரிச்சொல் பெருக்கம் என்னும் குறிப்புப் பொருளை உணர்த்துவதாகும்.

"ஏபெற் றாகும்"

-(சொல், உரியியல் - 304)

(எ.கா)

"ஏகன் அடுக்கம்"

எனப் பெருக்கத்தை உணர்த்தும்.

1.1.7. உகப்பு, உவப்பு :-

உகப்பு என்னும் சொல் 'உயர்தல்' என்னும் பொருளினையும் உவப்பு என்னும் சொல் உவப்பு என்னும் பொருளினையும் காட்டி நிற்கும்.

(எ.கா)

'விசும்புகந் தாடாது"

"உவந்த வந்தார் நெஞ்சமோடு ஆய்தல் (விளை இய)

என அமைந்து வரும்.

1.1.8. பயப்பு, பசப்பு :-

பயப்பு என்னும் சொல் பயன் என்னும் பொருளைக் குறிப்பதாகும்.

(எ.கா.)

"பயவாக் களரனையர் கல்லாதவர்"

இங்கு பசப்பு என்னும் சொல்லானது நிறவேறுபாடு என்னும் பொருளினை உணர்த்தும்.

1.1.9. இயைபு :-

இயைபு என்னும் சொல் புணர்ச்சிக் குறிப்பினை உணர்த்தும்.

"இயைபே புணர்ச்சி இயைந்து ஒழுகும்" (308)

(சொல், உரியியல் - 308)

(எ.கா)

'இயைந்து ஒழுகும்' - இவ்வடியில் வரும் இயைந்து என்னும் சொல் புணர்ச்சிக் குறிப்பை உணர்த்துகிறது.

1.1.10. இசைப்பு :-

இசைப்பு என்னும் உரிச்சொல் இசைப் பொருண்மையினை உணர்த்துவதாகும்.

"இசைப்பு இசையாகும்"

-(சொல், உரியியல் - 309)

(எ.கா)

"யாழிசையூப் புக்கும்"

இவ்வடி இசைத் தன்மையைக் கூறவதாக அமைந்துள்ளது.

1.1.11. அலமரல், தெருமரல் :-

அலமரல், தெருமரல் ஆகிய இருசொற்களும் சுழற்சி என்னும் குறிப்புப் பொருளைத் தருவனவாகும்.

'அலமரல், தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி''

-(சொல், உரியியல் - 310)

(எ.கா)

'அலமர லாயம்'

'தெருமர லுள்ளமோ டன்னை துஞ்சாள்'

இவ்வடிகளில் பயின்று வந்துள்ள அலமரல், தெருமரல் எனும் சொற்கள் நிலையில்லா சுழலும் ஆயத்தையும், அலைபாயும் அன்னையின் நெஞ்சத்தையும் குறிக்கிறது.

1.1.12. மழ, குழ :-

மழ, குழ என்னும் உரிச்சொற்கள் இளமையாகிய குறிப்புப் பொருளை உணர்த்தி நிற்கும்.

''மழவும் குழவும் இளமைப் பொருள்''

-(சொல், உரியியல் - 311)

(எ.கா.)

'மழ களிறு'

'குழக்கன்று'

இளமையான ஆண்யானை எனவும் இளைய கன்று எனவும் பொருள் அமையும்.

1.1.13. கூர்ப்பு கழிவு :-

கூர்ப்பு, கழிவு ஆகிய சொற்கள் இரண்டும் சிறப்பு என்னும் குறிப்புப் பொருளினை உணர்த்துவதாகும்.

''கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்''

-(சொல், உரியியல் - 314)

(எ.கா)

'துனிகூர் எவ்வமொடு'

'கழி கண்ணோட்டம்'

இவ்வடிகளில் பயின்றுள்ள கூர்கழி என்னும் சொற்கள் சிறப்புப் பொருளை உணர்த்துகின்றது.

1.1.14. அதிர்வு, விதிர்ப்பு:-

அதிர்வு, விதிர்ப்பு என்னும் இரண்டு உரிச்சொற்களும் நடுக்கமாகிய குறிப்புப் பொருளை அறிவிப்பனவாகும்.

''அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்''

-(சொல், உரியியல் - 316)

(எ.கா)'

'அதிர வருவதோர் நோய்'

'விதிர்ப்புற வறியா ஏமக்காப்பினை'

இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள அதிர, விதிர்ப்பு என்னும் சொற்கள் நடுங்குவதைப் பொருளாகக் காட்டுகிறது.

1.1.15. தீர்தல், தீர்த்தல் :-

தீர்தல், தீர்த்தல் என்னும் சொற்கள் விடுதலாகிய குறிப்புப் பொருளை உணர்த்தும்.

''தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்''

-(சொல், உரியியல் - 318)

(எ.கா)

''துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை''

என அமைந்து வரும்.

1.1.16. தட, கய. நளி :-

தடவும் கயவும் நளியுமாகிய சொற்கள் பெருமையாக, பண்புப் பொருளை உணர்த்தி நிற்பதாகும்.

''தடவும் கயவும் நளியும் பெருமை''

-(சொல், உரியியல் -320)

(எ.கா)

''வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்''

''கயவாய்ப் பெருங்கை யானை''

''நளிமலை நாடன்''

'தட' என்னும் சொல் பெருமை என்னும் பொருள் மட்டுமின்றி வளைவு என்னும் பொருளையும் தரும்.

''தட மருப்பு எருமை''

'கய' என்னும் சொல் 'மேன்மை' என்ற குறிப்புப் பொருளையும் கொடுக்கும்.

''கயந்தலை மடப்பிடி''

நளி என்னும் சொல் 'செறிவு' என்னும் பொருளையும் உணர்த்தும்.

''நளியிருள்'' – செறிந்த இருள் என்பது பொருளாகும்.

1.1.17. பழுது :-

பழுது என்னும் சொல் 'பயனில்லாமை' என்னும் பொருளைக் கொடுக்கும்.

''பழுது பயன் இன்றே''

-(சொல், உரியியல் - 324)

(எ.கா.) 'பழுதுகழி வாழ்நாள்'

இவ்வடியில் இடம்பெற்றுள்ள பழுது என்னும் சொல் பயனின்றி வாழ்நாள் கழிகிறது என்பதை உணர்த்துகின்றது.

1.1.18. சாயல் :-

சாயல் என்னும் உரிச் சொல் மென்மை என்னும் பொருளைக் கொடுக்கும்.

''சாயல் மென்மை''

-(சொல், உரியியல் - 325)

(எ.கா)

‘சாயன் மார்பு’

மென்மையான நெஞ்சம் என்னும் பொருளில் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

1.1.19. முழுது :-

முழுது என்னும் சொல் ‘எஞ்சாமை’ என்னும் குறிப்புப் பொருளைக் கொடுக்கும்.

“முழுதென் கிளவி எஞ்சாய் பொருட்டே”

-(சொல், உரியியல் - 326)

(எ.கா.)

‘மண்முழு தாண்ட’

இதிலுள்ள முழுது என்னும் சொல் ஒரு பகுதியும் எஞ்சாமல் முழுவதுமாக ஆட்சி செய்ததைக் குறிக்கிறது.

1.1.20. வம்பு, மாதர் :-

வம்பு என்னும் சொல் நிலையில்லாமை என்னும் பொருளையும் மாதர் என்னும் சொல் காதல் என்னும் பொருளையும் காட்டி நிற்கும்.

(எ.கா.)

‘வம்பு மாரி’

‘மாதர் நோக்கு’

நிலையின்மையையும் காதலையும்ம இவ்வடிகளில் வந்துள்ள வம்பு, மாதர் எனும் சொற்கள் குறிக்கிறது.

1.1.21. நம்பு, மேவு :-

நம்பு, மேவு ஆகிய சொற்கள் விருப்பம் என்னும் குறிப்புப் பொருளைத் தரும்.

(எ.கா)

‘நயந்து நாம்விட்ட நன்மொழி நம்பி,’

‘பேரிசை நவிரம், மே ஏ உறையும்’..

1.1.22. புலம்பு :-

புலம்பு என்னும் உரிச்சொல் தனிமை என்னும் பொருளைக் குறிக்கும்.

(எ.கா)

‘புலம்பிற் கோத்த புலம்பு மணித்தாலி’

1.1.23. வெம்மை :-

வெம்மை என்னும் சொல் விருப்பம் என்னும் பொருளை உணர்த்தும்.

(எ.கா) ‘வெங்காமம் மிக்கு’

இதில் விருப்பத்தையுடைய காதல் என்னும் பொருளில் அமைந்துள்ளது.

1.1.24. பொற்பு :-

பொற்பு என்னும் உரிச்சொல் அழகு என்னும் பொருளைப் பற்றி வரும்.

(எ.கா)

‘பெருவரை யடுக்கம் பொற்ப’

என அமையும்’

1.1.25. வறிது, ஏற்றம் :-

வறிது என்னும் சொல் சிறிது என்ற பொருளையும் ஏற்றம் என்னும் சொல் நினைவு, துணிவு ஆகிய பொருள்களையும் உணர்த்தி நிற்கும்.

(எ.கா.)

'வறிது வடக்கு இறைஞ்சிய'

'கானலஞ் செல்வன் கொடுமை ஏற்றி'

என்று பொருள் தரும்'

1.1.26. படர், பையுள், சிறுமை:-

படர் என்னும் சொல் நினைத்தல் செல்லுதல் என்னும் குறிப்புப் பொருள்களையும் பையுள், சிறுமை ஆகிய சொற்கள் நோய் என்னும் குறிப்புப் பொருளையும் காட்டும்.

(எ.கா)

'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி'

இதில் படர் எனும் சொல் நினைத்தல் பொருள் தருகிறது.

'கறவை கன்று வயிற்படர'

இதில் வந்துள்ள படர என்னும் சொல் செல்லுதல் என்னும் பொருளைத் தருகிறது.

'பையுண் மாலை: சிறுமை யுறப செய்பறி யலரே'

இவ்வடியில் பயின்று வந்துள்ள பையுண், சிறுமை ஆகிய இரண்டு சொற்களும் நோய் (துன்பம்) என்னும் பொருளை உணர்த்துகின்றது.

1.1.27. எய்யாமை, நன்று:-

எய்யாமை என்னும் சொல் அறிவின்மை என்னும் குறிப்புப் பொருளையும், நன்று என்னும் சொல் பெரிது என்ற குறிப்புப் பொருளையும் காட்டும்.

(எ.கா)

'எய்யா மையலை நீயும் வருந்துதி'

'நன்று. மரிது துற்றனையாற் பெரும'

அறிவின்மையாகிய மயக்கம் என்னும் பொருளை எய்யாமை என்ற சொல் தருகிறது. பெரியது என்னும் பொருளை நன்று என்ற சொல் குறிக்கிறது.

1.1.28. தெவ்வு, தெவு:-

தெவ்வு என்னும் சொல் பகை என்ற பொருளையும், தெவு என்னும் சொல் கொள்ளுதல் என்ற பொருளையும் தருகிறது.

(எ.கா)

'தெவ்வுப் புலம் போகி'

'நீர்த்தெவு நிறைத் தொழுவர்'

பகை நாடு என்னும் பொருளை தெவ்வு என்ற சொல் காட்டுகிறது. பெற்றுக் கொள்ளுதல் என்னும் பொருளை தெவு என்ற சொல் உணர்த்துகிறது.

1.1.29. விறப்பு, உறப்பு, வெறுப்பு:-

விறப்பு, உறப்பு, வெறுப்பு என்ற மூன்று சொற்களும் செறிவு என்னும் பொருளை உணர்த்தி நிற்கும்.

(எ.கா)

'விறந்த காப்போ டுன்னின்று வலியுறுத்தும்'

'உறந்த விஞ்சி'

'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்'

என அமைந்து வரும்.

மேற் சொன்ன மூன்றனுள் 'விறப்பு' என்னும் சொல் 'வெருவுதல்' என்ற பொருளையும் உணர்த்துவதாகும்.

(எ.கா) 'அவலெறி யுலக்கைப் பாடுவிறந்தியல' என்று அமையும்.

1.1.30. கம்பலை முதலான சொற்கள்:-

கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் ஆகிய நான்கு சொற்களும் அரவமாகிய இசைப் பொருளை உணர்த்தி நிற்கும்.

"கம்பலை சும்மை கலியே அழுங்கல்

என்றிவை நான்கும் அரவப் பொருள"

- (சொல், உரியியல் - 349)

(எ.கா)

'கம்பலை மூதூர்'

'ஒரு பொருஞ் சுமையொடு'

'கலிகொளாய மலிபுதொகு பெடுத்த'

'உயவுபுணர்ந் தன்றிவ் வழுங்கலூரே'

மேற்கூறிய அழுங்கல் என்னும் சொல் அரவப் பொருள் மட்டுமின்றி இரக்கம், கேடு என்னும் பொருள்களையும் குறிப்பாக உணர்த்தும்.

1.1.31. துவைத்தல் முதலான சொற்கள்:-

துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் என்னும் சொற்கள் இசைப் பொருளை உணர்த்துவன என்பர் அறிஞர்.

"துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்

இசைப் பொருட் கிளவி என்மனார் புலவர்"

- (சொல், உரியியல் - 358)

(எ.கா)

'வரிவளை துவைப்ப'

'ஆமா நல்லேறு சிலைப்ப'

'கடிமரந்தடியு மோசை தன்னூர்

நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப

'ஏறிரங்கிருளிலை'

இரங்கல் என்ற சொல்லிற்கு இசைப் பொருள் மட்டுமின்றி கழிவு என்னும் பொருளையும் குறிப்பாக உணர்த்தும்.

(எ.கா)

'செய்திரங் காவினை' - என வரும்

1.1.32. இலம்பாடு, ஒற்கம்:-

இலம்பாடு, ஒற்கம் என்னும் இரண்டு சொற்களும் வறுமையாகிய பொருளைத் தந்து நிற்கும்.

“இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை”

- (சொல், உரியியல் - 360)

(எ.கா)

“இலம்படு புலவ ரேற்றகை நிறைய”

“ஒக்கலொற்கஞ் சொலிய”

இவ்வடிகளில் வறுமையைக் காட்டுகின்ற இலம்படு ஒற்கம் எனும் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

1.1.33. கடி என்னும் சொல்:-

கடி என்னும் உரிச்சொல் வரைவு, கூர்மை, காப்பு, புதமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், தேற்றம் என்ற பத்துப் பொருள்களை உணர்த்தும்.

“கடியென் கிளவி

வரைவே கூர்மை காப்பே புதமை

விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே

அச்ச முன்தேற்று ஆயீ ரைந்தும்

மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்மே”

- (சொல், உரியியல் - 383)

(எ.கா)

‘கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு’ - இது வரைவுப் பொருள்

‘கடிமுனைப் பகழி’ - இது கூர்மைப் பொருள்

‘கடி கா’ - இது காப்புப் பொருளைத் தருகிறது

‘கடி மலர்’ - இது புதுமைப் பொருள் தருகிறது

‘கடுமான்’ - இது விரைவுப் பொருள் தருகிறது.

‘கடும்பகல்’ - இது விளக்கம் எனும் பொருளைக் குறிக்கிறது

‘கடுங்கா லொற்றலின்’ - இது மிகுதிப் பொருளைக் காட்டும்

‘கடு நட்பு’ - இது சிறப்புப் பொருளை உணர்த்தும்

‘கடியையா னெடுந்தகை செருவத்தானே’ - இது அச்சப் பொருளைத் தரும்.

‘கொடுஞ்சுழிப் புகார்த் தெய்வ நோக்கிக்

கடுஞ்சூடருகுவ நினக்கே’

- இது முன்தேற்றுப் பொருளை உணர்த்தி நிற்கிறது.

‘கடி’ என்னும் சொல் மேற்கூறப்பட்ட பத்துப் பொருள்கள் மட்டுமின்றி சிறுபான்மை ஐயம், கரிப்பு என்ற பொருள்களையும் உணர்த்தும்.

1.1.34. சொல்லும் பொருளும்:-

ஒரு சொல் இந்தப் பொருளுக்கு உரியது என இதுவரை கூறப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும், அவற்றைச் சார்ந்து வரும் சொற்களையும் ஆராய்ந்து பொருத்தமான சொற்களால் பொருளுணர்த்த வேண்டும்.

''மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்

முன்னும் பின்னும் வருபவை நாடி

ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்

தத்த மரபில் தோன்றுமன் பொருளே''

-(சொல், உரியியல் - 389)

முன்னும் பின்னும் வருகின்ற சொற்களை ஆராயும் போது உரிச்சொல்லுக்குக் கூறிய பொருளேயன்றிப் பிறபொருள் தோன்றுமாயினும் அவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

''கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல

வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே''

(எ.கா)

'கடிநாறும் பூந்துணர்'

இவ்வடியில் இடம் பெற்றுள்ள கடி என்னும் சொல்லை ஆய்ந்தால் முன்னும் பின்னும் வருவதை வைத்து, மணப்பொருள் தருவதை உணரலாம்.

1.1.35. எழுத்துப் பிரிந்திசையா:-

எழுத்துக்கள் முதலும் இறுதியுமாக வெவ்வேறாகப் பிரிந்து வெவ்வேறு பொருள்ம உணர்த்துதல் உரிச் சொல்லோடு பொருந்தாது.

''எழுத்துப்பிரிந் திசைத்தால் இவணியல்பு இன்றே''

-(சொல், சேனா – 395)

1.1.36. புறனடை:-

இதுவரையிலும் சொல்லப்பட்ட உரிச்சொற்கள் மட்டுமல்லாமல் அவை போன்ற பிறவும், பலவகையாகப் பரந்துபட்டு வருகின்ற உரிச்சொற்களெல்லாம் பொருளுடன் சேர்ந்து இசை, குறிப்புப் பண்பு பற்றி உணர்த்தும். அதை வரையறுத்து உணர்ந்து கொள்ளும் தன்மை இல்லாததால் ஆசிரியர் கூறிய வழியிலேயே முறைப்பட அறிந்து கொள்ளவேண்டும் என்பர் சான்றோர்.

****

சிறு வினாக்கள்

1. உறு, தவ, நனி எனும் உரிச் சொற்கள் உணர்த்தும் பொருள் யாது?
2. பழுது எனும் உரிச் சொல்லை விளக்குக.
3. வறுமைப் பொருளை தரும் உரிச்சொற்ள் யாவை?
4. கூடி என்னும் சொல் எவ்வெப் பொருள்களை உணர்த்தும்?
5. உரிச்சொல் குறித்துச் சேனாவரையர் கூறுவன யாவை?

பெருவினாக்கள்

6. நிறம், இசை, இளமை ஆகியவற்றை உணர்த்தும் உரிச் சொற்களைச் சான்றுடன் எழுதுக.
7. உரியியல் கூறும் செய்திகளை விளக்குக.

**குறிப்பு**

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

**குறிப்பு**

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

……………………………………………………………………………………...

## 9. எச்சவியல்

## இயல் - 9

## சொல்லதிகாரம் - எச்சவியல்

1.0. எச்சவியல் - ஒரு விளக்கம்

எழுத்தினாலாவது சொல். தனி எழுத்தாயினும் எழுத்துக்கள் தொடா்ந்து நின்றாயினும் பிறிதொரு பொருள் தருமேல் அவை சொல் எனப்படும். இத்தகு சொல்லுக்கு இலக்கணம் கூறவந்த தொல்காப்பியா், ஏனைய அதிகாரங்களைப் போன்றே ஒன்பது இயல்களைக் கொண்டு அமைத்துள்ளாா். சொல்லதிகாரத்தில் உள்ள முதல் எட்டு இயல்களில் கூறாது விட்ட செய்திகளைக் கூறுமுகத்தான் எச்சவியல் எனும் இறுதி இயலை அமைத்துள்ளாா்.

சொல்லதிகாரத்தின் கண் அமைந்த முதல் எட்டு இயல்களுக்குப் பொதுவான செய்திகளையும் நிரல்படுத்தியுள்ளாா்.

1.1. சொற்களின் வகைகள்

இலக்கியத்தில் எடுத்தாளப்படும் சொற்கள்:-

தமிழ் இலக்கியங்களுள் பயன்படுத்தப்படும் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று நான்காகப் பகுக்கலாம்.

அவற்றுள் இயற்சொல் என்பது, செந்தமிழ் நாட்டின்கண் பேசப்படும் வழக்காற்றுடன் பொருந்தி, கேட்டோா்க்குப் பொருள் தெளிவாகி விளங்கும் சொற்களாகும். சான்றாக, நிலம், நீா், மலை, சோறு போன்றவற்றைக் கூறலாம்.

திரிசொல் என்பது ஒருபொருள் தரும் பல சொற்களாகியும் பலபொருள் குறித்த ஒருசொல்லாகியும் இருவகைப் படுவனவாகும். இவை புலவா்களால் பெரிதும் ஆளப்படுவனவாகும். அடுக்கல், பிறங்கல், ஓங்கல், விண்டு, குன்று, வரை எனவரும் பலசொற்கள் மலை என ஒரு பொருள் தரும். அரங்கம் எனும் ஒரு சொல், ஆடுமிடம், இல்லில், ஒருபக்கம் என வேறுபட்ட பொருளில் வரும். ஆக திரிந்து வேறுபடும் சொல்லே திரிசொல்லாகும்.

செந்தமிழ் வழங்கும் தேயத்தைச் சோ்ந்த பன்னிருவகைப்பட்ட நிலப்பிரிவுகளிலும் வாழ்வோரால் வழங்கப்படுவனவாய், அவ்வந் நிலத்தாா் ஆளும் பொருட்குறிப்பின் வழி பொருளுணா்த்துவன திசைச்சொற்களெனப்படும். சான்றாக, தென்பாண்டி நாட்டாா் பசுவைப் 'பெற்றம் என்றனா். குட்ட நாட்டாா் தாயைத் 'தள்ளை' என்றனா். குடநாட்டாா் தந்தையை 'அச்சன்' என்றனா்.

வடசொல் என்பது வழமொழிச் சொற்களில் உள்ள வடமொழிக்கே உரிய ஓசையுடைய ஒலிகளை நீக்கி விட்டுத்தமிழ் எழுத்தால் அமைந்த சொல்லாக்கித் தமிழில் எடுத்தாளப்படுவது 'வடசொல்' எனப்படும். தமிழில் வந்து வேறுபாடு அறியாது கலக்கும் அனைத்துப் பிறமொழிச் சொற்களுக்கும் இது பொருந்தும்.

கமலம், திலகம், அலுமினியம், பதில் போல்வன பொது எழுத்துக்களால் ஆனவை. மோகம், வச்சிரம், அரி, அரன் என்பன வடவெழுத்து நீங்கித் தமிழ் வடிவில் அமைவன.

இங்ஙனம் வடமொழிச் சொற்கள் பல திரிபுகள் மாற்றங்கட்கு உட்பட்டுத் தமிழ் வடிவப்பட்டு வரினும் பொருத்தமுடையவற்றை நீக்க மாட்டாா்கள்.

மேற்கூறிய நால்வகைச் சொற்களையும் செய்யுளுள் ஆளும்போது மெல்லொற்றை வல்லொற்றாக்க வேண்டிய வழி வல்லொற்றாக்கலும், வல்லொற்றை மெல்லொற்றாக்க வேண்டிய வழி மெல்லொற்றலாக்கலும் ஒரு சொல்லின் ஒன்றிரண்டு எழுத்து விரிக்க வேண்டிய வழி விரித்தலும், தொகுக்க வேண்டிய இடத்துத் தொகுத்தலும், குற்றெழுத்தை நீட்ட வேண்டிய வழி

நீட்டுதலும், நெட்டெழுத்தைக் குறுக்க வேண்டியவழி குறுக்குதல் எனவரும் ஆறுவிகாரங்களும் செய்யுளை ஓசை இன்பம் பயக்க நூல் யாக்க வல்லார் வலிமையினை அடிப்படையாக் கொண்டது என்று புலவர் கூறுவர்.

சான்று,

முத்தை வருஉம் காலம் (தொல் 164)

- முந்தை, முத்தை ஆனது (வலித்தல் விகாரம்)

குற்றியலுகரத்து இறுதியாகும் (தொல் 491) – மெலித்தல் விகாரம்

தண்ணந் துணைவன் (குறு 9) தண் என்பது தண்ணம் என விரித்தல் விகாரம் ஆனது.

1.2. பொருள்கோள்:-

1.2.1 பொருள்கோள் வகைகள்:-

செய்யுளுள் பொருள் கொள்ளும் முறைகள் நான்கும், அவை நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்பனவாகும்.

1.2.2 நிரனிறைப் பொருள்கோள்:-

பெயர்ச்சொல்லிலும் வினைச்சொல்லிலும் ஆராய்ந்து அமைக்குமாறு தோன்றும். அவற்றை முடிக்கும் சொற்களை வேறாக வரிசைப்பட நிறுத்தி, முடிக்கப்படும் சொற்களை வேறாக வரிசைப்பட நிறுத்தி, அவை தம்முள் நிரலே இயைந்து பொருள் கொள்ளுமாறு செய்வதாகும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனம் அது (குறள் 45)

இப்பாடல் நிரல்நிறைப் பொருள்கோளுக்குச் சான்றாகும்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனையவர் (410)

இப்பாடல் எதிர்நிரல் நிறைப்பொருள்கோளுக்குச் சான்றாகும்.

1.2.3 சுண்ணப் பொருள்கோள்:-

சுண்ணம் - பொடி: பொடி போலச்சொற்கள் சிதறிக்கிடக்கக், கொண்டு கூட்டிக் கொள்வது சுண்ணப்பொருள்கோளாகும். இயல்பான அளவடியால் அமைந்த ஈரடியாய் எண்சீர் உடையவற்றில், பொருத்திப் பார்த்துப் பொருள்கொள்ளும் வழியறிந்து அதற்கு ஏற்றாற்போல் சொற்களைத் துணித்து இயற்றுவது சுண்ணப் பொருள்கோளாகும்.

நீர்வார் கண்ணேம் தொழுது நிற் பழிச்சி

சேறும் வாழியோ பெரும் பெயர் பறம்பே (புறம் 113)

இப்பாடல் வரியை பெரும்பெயர்ப் பறம்பே! தொழுது நிற் பழிச்சி நீர்வார் கண்ணேம் சேறும்! வாழியோ! எனக்கூட்ட வேண்டும்.

1.2.4 அடிமறிப்பொருள்கோள்:-

சீர்களை நிலைமாற்றாமல் அடிகள் நிற்குமிடத்தை மாற்றி அமைத்து அவற்றை இயைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைப்பது அடிமறிப் பொருள்கோளாகும். இங்கு, பொருள் கொள்ளுமிடத்து ஒரு செய்யுளுள் ஈற்றடிக்கண் உள்ள இறுதிச்சீர், ஈற்றயலே சென்று பொருந்திப் பொருள் கொள்ளுமாறு புனைவதும் உண்டு.

1.2.5 மொழிமாற்றுப் பொருள்கோள்:-

சொற்கள் நிற்குமிடங்களைப் பலவாறு மாற்றியமைத்து, பொருள் கொள்ளுமிடத்து, முன்னும் பின்னுமாய்க்கூட்டிப் பொருள் எதிர்வந்து பொருந்துமாறு, கொள்ளுமிடமறிந்து கொள்வதாகும்.

கொளா அல் - கொள்க

சுண்ணம் இரண்டடிக்குள் வரும், இதற்கு வரையறை இல்லை. கூறாது விட்ட பலவகையான பொருள்கோள்கள் இதனுள் அடங்கும்.

1.3. தொகைச் சொல் வகைகள்:-

தொகைச் சொல்வகை - பிரிக்கப்படாதன:-

த, ந, ங, எ எழுத்துக்களை முதலாகவும் ன, ள, ர, எனும் மூன்று எழுத்துக்களை ஈறாகவும் உடைய உறவுப்பெயர்களும், பிற உறவுப் பெயர்களும் இருசொற்கள் இணைந்த தொகைச் சொற்களாயினும் தனித்தனியே பிரிக்கப்பட மாட்டாது.

'தம்பின்' என்பதே தம்பி ஆயிற்று,

'நின் தந்தை' என்பதே நுந்தை ஆயிற்று

என்றாலும் இது பிரித்துணரப்படுவதில்லை.

1.3.1 தொகைச்சொற்களில் ஒரு சொல்லடுக்குகள்:-

தனிச்சொல் அல்லாமல் சொற்கள் அடுக்கி வருவன தொகைச் சொல்லாகும். ஒரே சொல் அடுக்கிவரும் தொகைகள் இசைநிறை, அசைநிலை, பொருளொடு புணர்தல் என மூன்று வகைகளாக அமையும்.

1.3.2. தொகைச்சொல் வகைகள்:-

தொக்கிவருதல் மறைந்து வருதல் தொகை எனப்படும். தொகைச்சொல் ஆறு வகைப்படும். வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பனவாம்.

1.3.3. வேற்றுமைத்தொகை:-

வேற்றுமை உருபுகள் மறைந்து வரும் வகையில் வழங்கப்படுவன வேற்றுமைத்தொகை ஆகும்.

இவற்றை,

'வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல'

எனும் நூற்பாவால் தொல்காப்பியர் சுட்டுவார்.

சான்று,

| | | |
|---|---|---|
| பந்தடித்தான் | - | பந்தை அடித்தான் |
| முள்வேலி | - | முள்ளாலான வேலி |
| முருகன் தம்பி | - | முருகனுக்குத் தம்பி |
| மலையருவி | - | மலையிலிருந்து வரும் அருவி |
| யானைத் தந்தம் | - | யானையது தந்தம் |
| காட்டுயானை | - | காட்டின்கண் வாழும் யானை. |

1.3.4 உவமத்தொகை:-

உவம உருபு மறைந்து வருமாறு தொடர் அமைவது உவமைத்தொகை ஆகும்.

சான்று : அன்னநடை, முத்துப்பல்,

1.3.5. வினைத்தொகை:-

காலம் காட்டும் வினை உருபு மறைந்து வருமாறு அமைவது வினைத் தொகை எனலாம்.

சான்று: கடிநாய், கொல்களிறு, பாய்புலி,

1.3.6. பண்புத் தொகை:-

வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் அவையும் அவைபோல்வன பிறவும், தாம் அடைமொழியாய்ச் சார்ந்ததன் குணத்தை வெளிப்படுத்தி 'இன்னது இது' என்ற வாய்பாட்டால் கூறும் இயல்புடன் வரும் எத்தன்மைப்பட்ட சொற்களும் பண்புத் தொகை ஆகும்.

பசுந்தமிழ் - பசுமை உடையதாகிய தமிழ்

செந்தாமரை - செம்மை நிறத்ததாகிய தாமரை.

சிறப்புப் பெயர் முன்னும், பொதுப் பெயர் பின்னுமாக வருவது இருபெயரொட்டும் பண்புத்தொகை ஆகும்.

சுருங்கக் கூறின் பண்பை விளக்கும் 'மை' விகுதி மறைந்து வருவது பண்புத் தொகையாகும்.

| | | |
|---|---|---|
| சான்று : | பனைமரம் | தமிழ்மொழி |
| | தென்னமைரம் | பேருந்துநிலையம் |

1.3.7. உம்மைத் தொகை:-

இரண்டு சொற்களை அடுக்கிக் கூறும்போது, 'உம்' எனும் இடைச்சொல் மறைந்து வருமாறு கூறுதல் உம்மைத்தொகை எனலாம்.

உம்மைத்தொகை இரண்டு பெயர்கள், பல பெயர்கள், முகத்தலளவைப் பெயர்கள், எண்பற்றியபெயர்கள் என்று ஆறுவகைச் சொற்களைக்கருதி அமைவதாகும்.

சான்று : காய்கறி, அறம் பொருளின்பம் எனவரும்.

1.3.8. அன்மொழித்தொகை:-

பண்புத்தொகை. உம்மைத் தொகை, வேற்றுமைத் தொகை ஆகிய பெயர்களின் இறுதியில் முன்னுள்ள தொகைகளுக்குரியவை அல்லாத மொழிகள் தொக்க வருவதே அன்மொழித் தொகையாகும்.

சான்று : நெடுந்தகை ராமன்

1.3.9. தொகைச்சொற்களில் பொருள் சிறந்த நிற்குமிடம்:-

பொருள் அழுத்தமுற அமையுமிடம் நான்காகும். அவை :தொக்கு நிற்கும் இரு சொற்களில் முன் மொழியிலோ, பின் மொழியிலோ, அல்லது அவ்விரு மொழிகள் அல்லாத ஒரு மொழியிலோ பொருள் நிலை பெற்று நிற்கும்.

'வேங்கைப்பூச் சூடினாள்' எனில் 'பூ'வையே சூடியமையால் அதன்கண் பொருள் சிறந்து நிற்கின்றது.

'முல்லைப்பூச் சூடினாள்' எனில் சூடப்பட்டது பூவேயாதலின் பின் மொழியில் பொருள் சிறந்து நிற்கிறது.

1.3.10. தொகைச் சொல் ஒருசொல் நீர்மையவாதல்:-

முன்பு கூறிய அறுவகைத் தொகைத்தொடர்களும் ஒரு சொல் நீர்மைத்தாம் நடையினையுடையன.

பைந்தமிழ் - பசுமையினதாகிய தமிழ்

பொற்றொடி - பொன்னாலாகிய தொடி

இவ்வாறு விரிக்கலாம் எனினும் இவை ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று வினைமுடிவு ஏற்றலில் முதலியன அமைதலின் 'ஒரு சொல் நடைய' எனப்பட்டன.

1.3.11. புறநடைகள்:-

உம்மைத் தொகைக்கு ஒரு புறநடை:

உம்மைத் தொகைகள் உயர்திணைக்கண் அமையுமாயின் அவற்றின் ஈறு பலர்பாலுக்குரிய நடையினதாகும்.

கபிலன் + பரணன் = கபிலபரணன் என ஆகாமல்

கபில பரனர் எனப் பன்மை ஈறு பெற்று வருவதை அறியலாம்.

வினைச் சொற்களில் சில சொல் மரபுகள்:

இயங்காத மரபுடையவற்றை இயங்குவன போல் கூறுதலும், பேசாத தன்மையுடையவற்றைப் பேசுவனபோல் கூறுதலும் அவை போலக் கூறப்படுவன அனைத்தும் அவ்வவற்றிற்குரிய இயல்பின்படி ''இவை இன்ன பொருளின' என்று உணரப்படும் குறிப்பினை உடையன.

'மழை மழை என்கின்றது பயிர்' இச்சாலை எங்கே போகிறது? வயிறுசோறு கேட்கின்றது

இவ்வாறு வருவனயாவும் குறிப்பால் கருத்தை உணரவைத்தலால் ''குறிப்புரை'' ஆகும் என்று தொல்காப்பியர் கூறுவர்.

இசைநிறை அடுக்கிற்கு ஒரு புறனடை:

இசைநிறை அடுக்கிற்கு மேல்எல்லை (உயர்ந்தபட்சம்) நான்காகும். இரண்டு, மூன்று, நான்கு வரை அமையுமென்பதாம்.

சான்று,

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினில் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்.
எனவரும்.

விரைவுப் பொருளில் மூன்றடுக்கு:-

விரைவுப் பொருளில் வரும் ஒரு சொல்லுக்கு மூன்றுமுறை வரை வரலாம். அதுவே மேல் எல்லையாகும்.

பாம்பு பாம்பு, தீ தீ தீ. வா வா, வாவாவா என வரும்

அசை நிலை அடுக்கிற்குப் புறனடை:

கண்டீர், கேட்டீர், சென்றது, போயிற்று, என்று வரும் அனைத்தும் வினாக்குறிப்போடு பொருந்தி நிற்குமிடத்து அசைச் சொற்களாய் நிற்கும் என்பர். பார்த்தீரா? பார்த்தீரா? இக்கொடுமையை, கேட்டை நின்றை, காத்தை, கண்டை என்ற அவை அனைத்தும் முன்னிலை வினைப்பொருளை உணர்த்தாவிடத்து முன் சூத்திரத்தில் கூறியவாறு அசைச்சொல் இயல்பினவாகும். இன்று பார்பார் - பார்த்தாயா, பார்த்தாயா என்ற பேச்சிடையே சொல்வது போலவே, முன்பு கேட்டை, நின்றை முதலியன வழங்கியிருக்க வேண்டும்.

1.4. வினை முற்றின் வகை:-

வினைமுற்றில் பொருள் முற்றுப்பெறும் தன்மை:

முற்றுச்சொல் இலக்கணம் ஈண்டுத்தொகுத்துக் கூறப்படுகிறது. வினைச்சொல்லுக்குச் சிறப்புரிமையுடைய இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்ற மூன்று காலங்களையும் காட்டும். தன்மை, முன்னிலை, படற்கை எனும் மூவிடங்களும் பொருந்தி வரும். உயர்தினை, அஃறிணை, விரவுத்திணை மூன்றிலும் தெரிநிலை குறிப்பு என இரண்டடியாகப் பொருந்திய ஆறு வகையின வாய்ப் பொருள் முற்றுப் பெற்றியலும் முற்றுவினை அமையும்.

முற்கூறியவாறன்றி வேறு எவ்வகையானேனும் பொருள் முற்றி வருகின்ற வினைச்சொற்களெல்லாம் முற்றுச் சொல் வகைக்குள் அடங்கும். அவ்வயின் முற்றுச்சொல் வகை யார், எவன், இல்லை என்பன போல்வனவும் முற்றுச் சொற்களேயாம்.

1.4.1. முற்றுவினை பெயர்கொண்டு முடிதல்:-

முற்றுவினைகள், தத்தமக்குரிய வாய்பாடுகளால் அடுக்கி வரினும், அடுக்காது தனித்து வரினும் எல்லாவற்றானும்ம பெர்ச்சொல்லைக் கொண்டு முடியும் இயல்பினவாம்.

அருளினன் முருகன் : முருகன் அருளினன்.

போற்றினன் வாழ்த்தினன் வணங்கினன் அடியான்

1.5. எச்சச் சொற்களின் வகை:- எச்சப் பொருள் தரும் சொல் வகை

எச்சப்பொருள் தரும் சொற்கள் பிரிநிலைஎச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசைஎச்சம், எதிர்மறைஎச்சம், இசையெச்சம், எனவென் எச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம். இசையெச்சம் எனத் தமிழில் எச்சப் பொருள் தரும் சொற்கள் பத்து வகைப்படும்.

1.5.1 பிரிநிலை எச்சம் முடிக்கப்படும் முறைமை:-

பிரிநிலை எச்சம் என்பது பிரிக்கப்பட்ட பொருளையே முடிக்கும் சொல்லாக உடையது.

அவனே கள்வன்

யாரும் இல்லை, தானே கள்வன்!

இத்தொடரில் ஏகாரத்தால் பிரிக்கப்பட்டவனே முடிக்கும் சொல்லாய் நிற்றல் காண்க.

1.5.2. வினையெச்சம் முடிக்கப்படும் முறைமை:-

வினையெச்சத்திற்குத் தெரிநிலைவினையும் குறிப்புவினையுமே ஆராய்ந்து முடிக்கும் சொல்லாகும். குறிப்புவினையுடன் முடியும்போது இடையே ஆக்கச்சொல் கொடுத்துக் கூறுதல் வேண்டும்.

சான்றாக

பார்த்து மகிழ்ந்தான், படித்துத் தேறினான்

பயின்று வலியன் ஆயினான்

முயன்று செல்வன் ஆயினான்

என்பனவற்றைக் கூறலாம்.

1.5.3 பெயரெச்சம் முடிக்கப்படும் முறைமை:-

‘‘பெயரெச்ச கிளவி பெயரொடு முடியுமே’’

என்ற நூற்பாவில், பெயரெச்சம் பெயர்கொண்டு முடியும் எனத் தொல்காப்பியர் தெளிவு படுத்தியுள்ளார்.

சான்றாக:

கற்ற கல்வி

நல்ல பையன்

தேடிய செல்வம்

1.5.4. ஒழியிசை எச்சம் முடியுமாறு:-

ஒழியிசை - ஒழிந்ததை (விட்டதை) அதாவது சொல்லாது ஒழிந்ததைச் (விட்டதைச்) சொல்வது ஒழியிசை ஆகும். எடுத்துக்காட்டு,

பண்டு நல்லனவன் - இன்று நல்லனல்லன் என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

கூரியதோர் வாள்மன் - 'மன்' இடைச்சொல் இப்பபோது அக்கூர்மை மழுங்கிப் போனதைக் குறிக்கும். இது குறிப்பாக நிற்கும் எச்சப் பொருளைக் கொண்டு முடிகிறது.

1.5.5. எதிர்மறை எச்சம் முடிக்கப்படுதல்:-

எதிர்மறை எச்சம் எதிர்மறைப் பொருளை உணர்த்துதற்குரிய சொல்லைக் கொண்டு முடியும்

சான்று

நானோ திருடினேன் - 'ஓ'காரம்

திருடவில்லை என்பதை உணர்த்திற்று

யானோ செய்தேன் - யான் செய்யவில்லை என்பதை உணர்த்தலின் எதிர்மறை எச்சம்

1.5.6. உம்மை எச்சம் முடியும் விதமும் காலமயக்கமும்:-

உம்மை எச்சம் தழுவியதும் அதனால் தழுவப்பட்டதுமான இரண்டு முடிவு வகையானும், தனக்குரிய வினையே மற்றொன்றுக்கும் பொருந்திய முடிவாகும்.

கணவனும் வந்திருந்தான் என்றால்

மனைவியும் வந்திருந்தாள் எனத் தழுவப் பட்டதற்கும்

அதே வினை முடிபே வரும்.

கணவனும் வந்தான் மனைவியும் விருந்துண்டாள்

எனப் பிறிதொரு வினை ஒட்டாது.

1.5.7. உம்மை எச்சத்தில் கால மயக்கம்:-

உம்மை எச்சம் சொல் வந்து அதற்கு முன்னதாக உம்மை இல்லாத செஞ்சொல் வரின், நிகழ்காலமும் எதிர்காலமும் மயங்குதலையும் இறந்தகாலமும் எதிர்காலமும் மயங்குதலையும் நீக்கமாட்டார்கள்.

சான்று

பழம் உண்கிறான், பாலும் பருகுவான் -

நிகழ்வும் எதிர்வும் மயங்கின

பழம் உண்டான், இனிப்பாலும் பருகுவான் - .இறப்பும் எதிர்வும் மயங்கின.

1.5.8. என என்னும் எச்சம் முடியுமாறு:-

என என்னும் எச்சம் வினைச் சொல்லைக் கொண்டு முடியும்.

சான்று : நன்பன் எனச் சொன்னான்

1.5.9 இறுதி மூன்று எச்சங்கள்:-

இறுதியில் எஞ்சி நிற்கும் சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் மூன்றும் தமக்கு வேறாய் நின்று மேல்வந்து முடிக்கும் படியான, எச்சப் பொருள் தரும் சொல்லை உடையன அல்ல என்பர்.

அம்மூன்று எச்சங்களும் தம் குறிப்பின் வழிஎஞ்சி நிற்கும் பொருளைத் தருவனவாகும். திருமணம் முடிவு செய்ய முயலும் போது, ''சாதகம் பொருந்தவில்லை'' என்றால் ''வேண்டாம்'' என்று பொருள் கொள்ளலாம். 'சீர் போதாது' என்ற குறிப்பும் இருக்கலாம்.

''நீ பெரிய ஆளப்பா'' என்றால் கூறுவோன் குறிப்பினால் ''மட்டமானவன்'' என்பது பெறப்படுகிறது. இது குறிப்பெச்சம்.

1.5.9 சொல்லெச்சம் பற்றிய ஒரு குறிப்பு:-

சொல்லெச்சம் என்பது முன்னதாகவோ, பின்னதாகவோ, ஒரு சொல் அளவு எஞ்சி நிற்பதல்லது, கூடுதலாக எஞ்சி நில்லாது.

உணவு ஆயத்தமாக உள்ளது. ''உண்ண வருக'' என்பது சொல்லெச்சம். ''உணவு உண்ண வரலாம்'' – என்றால் ஆயத்தமாக உள்ளது என இதுவும் சொல்லெச்சம்.∴ இவ்வெச்சங்கள் மூன்றும், முன்பு செய்யுளில் பயின்று வழங்கியவையாகும்.

1.6. சில சொல் மரபு வகைகள்:-

1.6.1 இடக்கரடக்கல்:

பல்வேறு மாக்கள் குழுமிய அவையின் நடுவே வெளிப்படச் கூற இயலாதனவற்றை, மறைத்துக் கூறுதல் வேண்டும். (இன்று ஒன்றுக்கு, இரண்டுக்கு என்பன அவ்வாறு பயன்படுகின்றன)

வழக்கின்கண் நெடுங்காலம் பொருந்தி வழங்கி வந்தவற்றை அவ்வாறு மறைக்க வேண்டியதில்லை. பல் துலக்குதலை முன்பு '' வாய் பூசுதல்'' (வாயைச் சுத்தம் செய்தல்) என்றனர். இன்று பல் விளக்குதல் வழக்கில் வந்துவிட்டது.

1.6.2. தமிழ் சொற்களுள் பொருள் உணர்த்தும் மரபுகள்:-

ஈ, தா, கொடு ஆகிய மூன்று வினைச் சொற்களும், ஒருவன் மற்றவனிடம் இரத்தற்கண் கூறும் சொல்லாதற்குரியன.

அவற்றுள் 'ஈ' எனும் முதனிலையை உடைய ஈதற் சொல் நிலையில் தாழ்ந்தவன் கூற்றாகும்.

சான்று : மன்னன் இரவலருக்குப் பரிசு ஈந்தான்.

'தா' எனும் முதனிலையையுடைய சொல், தம்முள் சமமானவர் இரந்து கேட்கும் கூற்றாகும்.

சான்று : எனக்குப் புத்தகம் தா

கொடு எனும் முதனிலையுடைய சொல் உயர்ந்த நிலையினர் தம்மைவிடத் தாழ்ந்த நிலையினரிடம் கேட்பதாகும்.

சான்று : மக்கள் அரசுக்கு வரி கொடுக்க வேண்டும்

'எனக்குக்கொடு' அவனுக்குக் கொடு

கொடு என்று கூறுதல் படர்க்கை இடத்திற்குரியதாயினும் தன்னைப் பிற னொருவன் போலக் கருதும் கருத்துள்ளவிடத்துத் தன்மையிடத்தும் வரும்.

1.6.3.இலக்கணம் வரையறுக்கப்படாத சொல்வகைகள்:-

இலக்கணக் கட்டுப்பாடு இல்லாத சொற்கள் தொகுத்துரைக்கப்படுகின்றன. 1. சில பெயர்ச்சொற்களாகி வருவனவும் 2. சில திசைச் சொற்களாகி இலக்கண வரையறையும் படாதனவும் 3. பழமொழிகள் போல் தொன்று தொட்டு வழங்கி வருவனவும் 4. உலக வழக்கில் பொருள் மயக்கமுற்று அமைவனவும் 5. மந்திரச் சொற்களாய்ப் பொருள் உணர்த்தி வருவன ஆகிய அனைத்தும் இலக்கணக் கட்டுப்பாடு அற்றவையாகும். அவற்றின் வரையறைகள் முன்பே உள்ள விதிகளை மீறியவையாய் விளங்கும் என்பதாம்.

1.6.4. செய்யாய் எனும் சொல்:-

செய்யாய் என்னும் முன்னிலை வினைமுற்றுச் சொல் ''ஆய்'' எனும் இறுதி கெட செய் என்னும் சொல்லாய் நிற்கும். எடுத்துக்காட்டாக, உண்ணாய், போவாய் என்பன உண், போ என ஈறு கெட்ட நின்றன.

1.6.5. ஈ, ஏ எனும் முன்னிலை வினை ஈறுகள்:-

முன்னிலை வினைச் சொற்களின் முன் 'ஈ' மற்றும் 'ஏ' ஆகியன ஈறாகப் பொருந்திவரும். அந்நிலையில் தமக்கேற்ற மெய்களின் மேல் அவை ஏறிவரும்.

சான்று : சென்றீ பெரும (அகம் 46)

அட்டிலோவை தொட்டனை நின்றமே (நறு – 300)

1.6.6 புதிய சொற்கள்:-

கால வேறுபாட்டிற்கு ஏற்றவாறு தோன்றி வழங்கும் சொற்களை, இவை பழமையான சொற்களை இவை பழமையான சொற்களல்ல என்று கூறி நீக்குதல் கூடாது என்பதனைத் தொல்காப்பியர்

''கடசொல் இல்லை காலத்துப்படினே''

எனும் நூற்பாவால் சுட்டுவார்.

சான்று : சம்பு, சள்ளை, சட்டி, சமள்ப்பு என இவை வரும்.

1.6.7. செய்யுள் விகாரம்:-

சில சொற்கள் செய்யுளில் முதல் இடை கடைக் குறைகளாய்க் குறைக்கப்பட்டு வழங்கும். அந்நிலையில் மரபறிந்து அங்ஙனம் குறைத்தற்குரிய இடமும் அளவும் பார்த்துக் குறைக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| மரை | - | தாமரை (முதற்குறை) |
| உளம் | - | உள்ளம் (இடைக் குறை) |
| நீலநிறம் | - | நீல்நிறம் (கடைக் குறை) |

அங்ஙனம் குறைக்கப்பட்டனவெனினும் அவை முழுப் பெயர் போலவே பொருளுணர்த்தும் தன்மையினவாம். பெயர்ச் சொற்களே இவ்வாறு முதல், இடை, கடைக்குறைகளாக வரும் என்பதை அறியலாம்.

1.6.8. இடைச்சொல் மரபு:-

இடைச் சொற்கள் என்பன எல்லாம் பெயர்வினைகளை அடுத்து நின்று அவற்றின் பொருளை வேறுபடுத்துவனவாகும்.

1.6.9 உரிச் சொல் மரபு:-

உரிச் சொற்களிலும் அவ்விடைச் சொற்கள்போலப் பெயர் வினைகளின் பொருளை வேறுபடுத்துவதற்கு உரியவை உரியவையாம். உரிச் சொற்களில் எய்யாமை, ஆய்தல், பண்ணை என இவ்வாறு தனித்த நின்று பொருள் தருவனவும் உள.

1.6.10. வினை எச்சங்கள்:-

வினையெச்சமும் வேறுபாடுஉடைய பல இலக்கணத்தை உடைய.

ஞாயிறு பட வந்தான் என்பதை ஞாயிறு பட்டு வந்தான் என்பர், (செய எனும் வாய்பாட்டைச் செய்து எனும் வாய்பாடாக மாற்றிக் கூறவது).

''கொய்குலம் சென்றுழி' – கொய்யக் சென்றுழி என வரும்.

தொடர் மொழிகளாய் உரைக்குமிடத்தேதான், முடிக்கும் சொல்லுடன் பொருந்தி நிற்பதைக் கொண்டு மேற்கூறிய வினைச் சொல் வேறுபாடுகள் அறியப்படும்.

1.6.11 குறிப்பால் உணர்வன:-

'இப்பொருள் இத்தன்மை உடையது' என்று சொல்லுமிடத்துச் சொல்லாலன்றி சொல்கின்றவனின் குறிப்பினால் பொருள் அறியப்படும் சொற்களும் உள்ளன.

எ.கா : 'செஞ்செவி' எனுமிடத்துப் பொன் முதலிய உயர்பொருள் அணிகள் தொடுத்து விளங்கும் செவி எனும் பொருள் காட்டுவது காண்க.

1.6.12. ஒரு பொருட் பன்மொழிகள்:-

ஒரே பொருளைத் தரும் இருசொற்கள் பிரிவின்றி இணைந்து நின்றே வழங்கும்.

சான்றாக ஓங்குயர் , மீமிசை நிலந்தோங்கு பெருமலை -

இதில் நிலத்துல் ஓங்குதல் இரண்டும் ஒரே பொருளாய் வந்து பிரியாது நின்றன காண்க.

ஒருமை குறித்த பெயர்ச்சொற்கள் பண்மையைக் குறிக்கும் இடங்களும் உள.

சான்றாக

பாரத மக்கள் தம் தாய்நோக நடவார். இங்கு தாயர் என்றே கொள்ளப்படுதல் காண்க.

1.6.13. ஆற்றுப்படை இலக்கியத்தில் வரும் வினைமுடிவு:-

முன்னிலையில் விளியாக வரும் ஒருமைச் சொல் வினை கொண்டு முடியுமிடத்தில், பன்மை வினை கொண்ட முடிதலும் நீக்கப்படுதல் இல்லை. ஆற்றுப்படைச் செய்யுளில் இவ்வாறு வருவதைப் போற்றி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆற்றுப்படுத்தப்படுபவர் ஒரு குழுவாக வருதலால், தலைவனை ஒருமையில் அழைத்து ''நீங்கள் சென்று பயன் பெறுங்கள்'' எனப் பன்மையில் முடிக்கும் மரபு தோன்றி நிலை பெறலாயிற்று. சிறுபாணாற்றுப் படையுள், ''முதவாய் இரவல்!' என விளித்து, ''இனி நீயிரும் செல்குவிராயின்....வயின்வயின் பெறுகுவிர்'' என முடிப்பது கருத்தத் தக்கது.

1.7 சொல்லதிகாரத்திற்குப் புறனடை:-

செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்று கூறப்பட்ட இருவகை வழக்கிலும் இதுகாறும் பொருண்மை பெறக் கிளக்கப்பட்ட விளக்கம் யாவும் மனம் கொள்வீராக! இவைமுற்றுப் பெற்றனவல்ல. பல்வேறு வகைப்பட்ட மொழிசெய்கைகளை உணர்த்தும் இலக்கண நூலுக்குரிய நெறிமுறை பிழையாமல் சொல்லிலக்கணத்தை வரையறைப்படுத்தி அறிய, வகை தொகைப் படுத்திக் காட்டுவீர்களாக என்று தொல்காப்பியர் சொல்லதிகாரத்திற்குப் புறனடை தருகிறார்.

சிறுவினாக்கள்

1. எச்சவியலின் விளக்கத்தை எழுதுக.
2. அடிமறிப் பொருள்கோள் என்றால் என்ன?
3. வேற்றுமைத் தொகை என்றால் என்ன?
4. அன்மொழித் தொகை - குறிப்பு வரைக.
5. இடகரடக்கல் என்றால் என்ன?

பெருவினாக்கள்

6. பொருள் கோளின் வகைகளைச் சான்றுடன் எழுதுக. தொகைச் சொல்லின் வகைகளை விளக்குக.

**குறிப்பு**

…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…
…………………………………………………………………………………….…

## இயல் 10

## சேனாவரையர் உரைத் திறன்

1.1. தொல்காப்பிய உரையாசிரியர்கள்:-

எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றதிகாரங்களைக் கொண்ட தொல்காப்பியம், ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

“ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் ப.்.தென்ப

பாயிரத்தொல் காப்பியங்கற் பார்”

என்பது தொல்காப்பிய நூற்பா அளவினைக் கூறுவதொரு வெண்பா. ஆனால் உரையாசிரியர்கள் அமைப்புப்படி 1595 முதல் 1611 நூற்பா வரை பல்வேறு எண்ணிக்கையுடையவாய் அமைந்துள்ளன. இக்கணக்கீடும் தொல்காப்பியர் சொல்லியதோ, பனம்பாரனார் குறித்ததோ அன்று. உரையாசிரியர்களின் காலத்தவரோ அவர்களின் காலத்திற்கு முன்னே இருந்த மூலநூற்பா எல்லையில் கணக்கிட்டறிந்த ஒருவரோ கூறியதாகலாம். தொல்காப்பிய நூல் முழுமைக்கும் உரைகண்டவர் இளம்பூரணர். இவருக்கும் காலத்தால் பிற்பட்ட உரையாசிரியர்கள் சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் முதலானோர். இவர்களில் சேனாவரையர் சொல்லதிகாரத்துக்கு மட்டுமே உரை வரைந்துள்ளார். அவ்வுரை இன்றும் போற்றத்தக்கதாய் அமைந்துள்ளது. சேனாவரையரின் உரைச் சிறப்பை இனிக் காண்போம்.

1.2. சேனாவரையர் - பெயர்க் காரணம்:-

சேனாவரையர் என்பது பட்டப்பெயர், எட்டி, காவிதி என்னும் பட்டங்கள் போல் படைத்தலைவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட பட்டப்பெயர் அது. அதனால் சேனாவரையரின் முன்னோருள் ஒருவர் அப்பட்டப்பெயர் பெற்று விளங்கி அது குடிப்பெயராகப் பின்னர் விளங்கியிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

1.2.1. ஊரும் காலமும்:-

தூத்துக்குடி திருச்செந்தூர்ப் பெருவழியில் ஆற்றூர் என்றோர் ஊர் உள்ளது. அவ்வூர் பொருநையாற்றின் கரையில் அமைந்துள்ளது. அவ்வூரில் உள்ள சோமநாதர் கோயிலில் மாறவர்மன் குலசேகரனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுள்ளது. அதில் ஆற்றூர்ச் சேனாவரையர் தம் முன்னோரிடமிருந்து தமக்குக் கிடைத்த நிலங்களைச் சோம நாதர் கோயிலுக்கு வழங்கிய செய்த உள்ளது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1276 என்பர். அதனால் சேனாவரையர் 13ஆம் நூற்றாண்டினர் என்பது தெளிவாம்.

சேனாவரையர், உரையாசிரியர் இளம்பூரணர் உரையைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். நேமிநாதம் இயற்றிய குணவீரபண்டிதர், நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் ஆகியோர் கொள்கைகளை மறுத்துரைக்கும் இடங்களும் இவர் நூலில் உள்ளன. ஆதலால் அவர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவர் இவர் என்பது உறுதியாகும்.

1.2.2. சமயம்:-

ஆற்றூர்ச் சோமநாதர் ஆலயத்திற்குச் சேனாவரையர் நிலம் வழங்கியுள்ளதால், அவர் சைவ சமய நெறி சார்ந்தவராக இருக்கலாம் எனத் தமிழிலக்கிய வரலாறுகள் கூறும். மேலும் பிறர் உரைகளின் தொடக்கத்தில் இறைவணக்கப் பாடல்கள் இல்லாதிருக்கவும் இவருரை முகப்பில் பிள்ளையார், சிவபெருமான், கலைமகள், அகத்தியர் ஆகியோரைப் பற்றிய வாழ்த்துப்

பாடல்கள் அமைந்துள்ளமையும் இவர் சிவநெறி சார்ந்தவர் என்பதை உணர்த்துகின்றன. இளம்பூரணர் தொல்-பொருள் ஐம்பதாம் நூற்பாவில் மேற்கோள் காட்டும், "தன்தோள் நான்கின்" என்னும் மூத்த பிள்ளையார் பாடலை இவர் தம் உரை நூன் முகப்புப்பாடலாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1.2.3. நூலாசிரியரைச் சிறப்பித்தல்:-

நூலாசிரியரானத் தொல்காப்பியத்தின் நூற்பா இலக்கிய நயத்துடன் விளங்குவதைச் சேனாவரையர் தம் உரையில் பலவிடங்களில் சுட்டிக் காட்டுவார்.

- "செய்யுளின்பம் நோக்கி அளபெழுந்து நின்றது (சொல் : 210)
- "செய்யுளின்பம் நோக்கி வினையொடும் பெயரொடும் என்றார்" (சொ 210)
- "தாம் என்பது கட்டுரைச் சுவைபட நின்றது" (சொ: 398) என்பன சில சான்றுகளாகும்.
- "அகத்திய முதலாயின எல்லா இலக்கணமும் கூறலிற் பல்வேறு செய்தியின் நூலென்றார்" என்று சொல்லதிகார இறுதி நூற்பா விளக்கத்தில் சேனாவரையர் வரையும் உரை, தொல்காப்பியரின் புலமைப்பரப்பை நோக்கிக் கூறியதாகும்.

1.2.4. பிறர் உரை மறுத்தல்:-

சேனாவரையர் மூலநூல் ஆசிரியரான தொல்காப்பியரை எங்கும் போற்றியே உரை எழுதுவார். அவர் வடநூற் கருத்தைத் தழுவியே நூல் செய்தார் என்பது சேனாவரையர் கருத்தாகும். தொல்காப்பியர் காலத்திலிருந்து ஆயிரம் அண்டுகளுக்குப் பின் தான் உரையாசிரியர்கள் உரை எழுதினர். தொல்காப்பிய முதல் உரைகாரரான இளம் பூரணருக்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின்தான் சேனாவரையர் உரை வெளிவந்தது. இவ்வாறான இடைவெளிகளில் பல மாறுதல்கள் இலக்கியங்களிலும், சமூகத்திலும் நிகழ வாய்ப்புண்டு. அதனால் இளம்பூரணர் கருத்தைப் பல இடங்களில் சேனாவரையர் மறுத்தெழுதுகிறார்.

இளம்பூரணரை 52 இடங்களில் சேனாவரையர் சுட்டிக் காட்டுகிறார். 'அவர்க்கு அது கருத்தன்று என்க' என்னும் வாய்ப்பாட்டால் 18 இடங்களிலும், 'உரையாசிரியர் கருத்து இதுவேயாம்' என ஓரிடத்தும், உரையாசிரியர் பிறா மதம் உணர்த்திய கூறினார்' என மூன்றிடத்தும், 'மறுக்க' என ஓரிடத்தும், 'ஆண்டு அடங்காது' என ஓரிடத்தும், என 52 இடங்களில் கூறுவார்.

1.2.5. உரைமரபு:-

இலக்கண உரையாசிரியர்களின் உரைப் போக்கைப் பொதுவகையில் நோக்கினால், அவர்கள் "பயிற்றாசிரியர்களாக" இருந்தவர்கள் என்பது புலனாகும். சொல்லிலக்கண உரை கூற வந்த சேனாவரையர் உரையில் 'வினா', 'விடை' கூறும் பகுதிகள் மிகவுண்மை தெளிவிக்கும்.

நூற்பாக்களுக்கு உரை விளக்கம் கூறுகையில், "இச்சூத்திரம் என்ன நுதலிற்றோ?" எனின் "இன்னது நுதலிற்று" என றூற்பாக்கள் தோறும் சொல்லிச் செல்லுதல் இயம்பூரணர் உரை மரபு. சேனாவரையர் இம்மரபைக் கொண்டவரல்லர். அது கூறாக்காலும் நூற்பாக்களுக்குப் பொருள் கொள்ளத் தடையொன்றின்மை கண்டு அவர் விலக்கியிருத்தல் கூடும். அவர்தம் உரைச் செறிவு அவ்வாறு எண்ணத்தோன்றுகிறது.

ஒ ஓ என வழங்கும் ஒலிக்குறிப்பை அறிவோம். "ஓ ஒ அப்படியா செய்தி", " ஒ ஓ வென்று கத்தியும் கேட்கவில்லை. இப்படிப்பட்ட இன்றைய வழக்காறுகள் யாவும் சேனாவரையர் காலத்திலும் இருந்தமை அவருடைய உரையால் அறிய வருகின்றது. இத்தகு வழக்காறுகள் தொல்காப்பியர் காலத்தில் "ஔ ஔ" என்று இருந்து பின் மாறிவிட்டமையை அவர் சுட்டுகிறார்.

ஔகாரத்தைச் சுட்டும் அவர், "இதனை இக்காலத்து ஓகாரமாக வழங்கும்" என்கிறார் (281).

ஏ என்னும் உரிச்சொல் "பெற்று" என்னும் பொருளில் வரும் என்கிறார் தொல்காப்பியர் (304), அதனை விளக்கும் சேனாவரையர் "பெற்று –பெருக்கம், ஈது அக்காலத்துப் பயின்றது போலும்" என்கிறார். இத்தகு குறிப்புகள் மொழி வரலாற்றை அறிய உதவும் கருவிகளாகும்.

'பெண்' என்னும் சொல் 'பெண்டு' என்று வழங்கும். "பெண்டாட்டி" என்றும் வழங்கும். இவ்வழக்குச் சேனாவரையரால் பெரிதும் ஆளப்படுகின்றது. (24,25, 162, 163) பொத்தகம் என்பது பழவடிவம் ஆகும். அதனைப் "புத்தகம்" என்பது பின் வழக்கு. சாத்தன் புத்தகம், சாத்தனது புத்தகம் என வழங்குகிறார் சேனாவரையர் (413)

எவ்வகையானும் அறியாப்பொருள் வினாவப்படாமையின் ஈண்டு அறியாப் பொருள் என்றது, பொது வகையான் அறியாப்பட்டுச் சிறப்பு வகையால் அறியப்படாத பொருட்களே யாகும். (31)

"வினை என்பது அறத் தெய்வம். சொல் என்பது நாமகளாகிய தெய்வம் என்று இவர் கூறியது ஆழ்ந்த கருத்தாகும்.

"உலக வழக்கு நடை இத்தகையது" என்பதை அருமையாக் குறிக்கிறார் சேனாவரையர்" (416).

உலகவழக்காவது சூத்திர யாப்புப்போலே மிகைச் சொற்படாமைச் சொல்லப்படுவதொன்றன்றி, மேற்றொட்டுங் கேட்டார்க்குப் பொருள் இனிது விளங்க வழங்கப்பட்டு வருவது.

உலகவழக்கை விளக்கும் பொழுதே, சூத்திர யாப்பு இத்தகையதெனவும் சொல்லி இரு வழக்கையும் விளக்கும் அருமையது இது.

இரண்டன் வேறுபாடுகளை விளக்கிக் காட்டலிலும் விழிப்போடு இருக்கிறார் சேனாவரையர்.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் சேனாவரையரை மிக மிகப் போற்றியவர் சிவஞானமுனிவர்.

"வடநூற் கடலை நிலைகண் டுணர்ந்த சேனாவரையர்" எனப்பாராட்டும் முனிவர், "எழுத்ததிகாரத்திற்கு உரை செய்தாராயின் இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர்" என்றும் தொடர்ந்து எழுதுகிறார் (தொல்காப்பிய சூத்திர விருத்தி).

மொழி என்பதாம் 'பாஷை'யைப் பாடை என வழங்குகிறார் சேனாவரையர் (397). அவர் வடமொழி என்பதனை வடபாடை என்றே கையாளுகிறார் (401).

தமிழ்ச் சொல் வடபாடைக்கட் செல்லாது என்னும் கொள்கையை இவர் (401) "குமரி வடமொழிச்சிதைவு என்றும் (196) நீர் ஆரியச்சிதைவு" என்றும் (398) கூறுவது வியப்பாகாது. செய்யுட்குரிய இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும்நான்வகைச் சொற்களுள் "திசைச் சொல்லுள் ஏனைச் சொல்லும் உளவேனும் செய்யுட்குறித்தாய் வருவது பெயர்ச்

சொல்லேயாகும். வடசொற்களுள்ளும் பெயரல்லது செய்யுட்குரியவையாகா. இவ்வாறாதல் சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டுகொள்க'' என்னும் செய்தி சங்க நூற்பரப்பை முழுமை கண்டு கூறிய முடிவுரையதாம்.

ஞாபகம், அநுவாதம், யோகவிபாகம், நேயம், காரகம், தாது இன்னவற்றை ஆங்காங்குரைத்து விளக்குகிறார். பதினைந்து இடங்களுக்கு மேல் சேனாவரையரின் வடமொழிப் புலமை அறியும் வண்ணம் உரை விளக்கம் அமைந்துள்ளது.

1.2.6. மேற்கோள்கள்:-

தொல்காப்பியம் எனும் இலக்கண நூலுக்கு உரை எழுதிய சேனாவரையர், பல இடங்களில் தாம் மேற்கோள் காட்டுகின்ற இலக்கியப் பகுதிகளில் உள்ள பொருத்தமான இலக்கணப்பகுதியையும் ஒப்பிட்டு விளக்கி எழுதியுள்ளார். ''ஊன் சுவை கறிசோறு உண்டு வருந்து தொழில் அல்லது'' என்ற புறப்பாட்டைச் சுட்டி ''உண்டு என்பது ஒன்றற்கே உரிய வினை ஆதலின் வழுவாம். பிற எனின், உண்டல் என்பது உண்பன மற்றும் தின்பன எனப்பகுத்துக் கூறும் வழிச் சிறப்பு வினையாம். பசிப்பிணி தீர நுகரப்படும் பொருள் அனைத்தும் உணவு எனப்படும் ஆதலின், பொது வினையுமாம். அதனால் அது அன்று. கறியொழித்து ஏனையவற்றிற்கெல்லாம் உண்டல் தொழில் உரித்தாகலின் பன்மை பற்றிக் கூறினார் எனினும் அமையும் என்று விளக்கம் காண்க. இவ்வாறு இவர் மேற்கோளாகக் குறள், குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தியுள்ளதை அறிய இயலுகிறது.

சகர முதன் மொழி தொல்காப்பியத்தில் இல்லை. ஆதலின் உரையாசிரியரான சேனாவரையர், சம்பு, சள்ளை, சட்டி சமழ்ப்பு என்பன பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாகும் என்று காட்டுகிறார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் மக்களின் நாகரிகத்தையும் வாழ்க்கை முறைகளையும் நோக்கங்களையும் ஆராய்கின்றவர்களுக்கு, சேனாவரையரும் பேராசிரியர் போல அளவில்லாத செய்திகளை உணர்த்துபவராவார்.

சேனாவரையரின் உரையுள் பத்துப்பாட்டு முழுமையும் மேற்கோளாக வருவதை அறிய இயலுகிறது. எட்டுத் தொகை நூல்களுள் பரிபாடலைப் பெயர் குறிப்பிடுகிறார். எஞ்சியுள்ள ஏழையும் எடுத்தாள்கிறார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்று காணும்போது திருக்குறள், நாலடியார், களவழி நாற்பது, ஆசாரக்கோவை, ஐந்திணை எழுபது என்ற ஐந்து நூல்களையும் இவர் குறிப்பிடுவதை அறிகிறோம். இவற்றுள் திருக்குறளும் களவழிநாற்பதும் காலத்தால் முந்தியவையாகும். ஏனையன பிந்தியவையாகும். ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரம் ஒன்று மட்டுமே இங்கு வந்துள்ளது. இறந்துபோன பண்டைய நூல்களுள் இவர் உரையில் பயில்வன இந்திர காளியமும், காக்கை பாடினியமும், ''ஏவலிளையர்'' என்ற பழைய மேற்கோள் பாடலைக்கொண்ட தமிழ் நெறி விளக்கமும் குறிப்பிடத்தகுந்த இலக்கண நூற்களாகும். இவ்வாறு இலக்கணத்திற்கு (தொல்காப்பியத்திற்கு) உரை எழுத முற்படுகையில் இலக்கண நூல்களை மட்டுமல்லாது பல்வேறு இலக்கிய நூல்களையும் சேனாவரையர் மேற்கோளாகக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதிகப்படியான நூல்களை இவர் பயன்படுத்தியுள்ளமை இவரது பல நூற் புலமையை நமக்குப் புலப்படுத்துகிறது.

1.2.7. இலக்கியச் செய்திகள்:-

சேனாவரையரின் உரையை உற்று நோக்கும்போது, அவர் பயன்படுத்திய பல இலக்கியச் செய்திகளை அறியலாம்.

தமிழ் உரைத்த அகத்திய மாமுனிவரின் மாணாக்கர் பன்னிருவர் பற்றியும், தெய்வப் புலவன் திருவள்ளுவன், சாத்தனார், கபிலரால் செய்யப்பட்ட கபிலம், பரணர், நக்கீரர், சீத்தலைச் சாத்தனார், மாமூலன், பெருந்தலைச் சாத்தர், ஆசிரியர் பேரூர் கீழான், செயிற்றியன் என இவர் குறிப்பிடுவது செயிற்றியம் எனும் நூலாசிரியரான செயிற்றியனார் என்றவாறு பல்வேறுபட்ட தமிழ் இலக்கியப்படைப்பாளிகளைப் பற்றியும் அவர்களின் தமிழ்க் கொடையையும் சேனாவரையர் மதிப்பிட்டுள்ளார்.

சாத்தன் கையெழுதுமாறு வல்லன் என்ற தொடரை இவர் கூறுகிறார். இதே நூற்றாண்டில் நஞ்சீயர் கையெழுத்து அழகாய் எழுதுவதற்கு ஒருமாணாக்கரைத் தேடினார் என்றும் வைணவ வரலாறு கூறுகிறது. அந்தக்காலத்தில் புலவர்கள் திருத்தமான கையெழுத்தை விரும்பினார்கள் என்ற மரபு நிலையை அறியமுடிகிறது.

சேனாவரையர் தருக்கம் வல்லவர், அவருடைய உரையில் தருக்க வாதம் அமைந்துள்ளதைக் காணலாம். வாத விவாதங்களுக்கு இடனாகும் தருக்கவியல் அமைப்பில் வல்லவரான சிவஞான சுவாமிகளுக்கு இவரிடம் மிகுந்த ஈடுபாடு உண்டு. சிவஞான முனிவரிடம் உள்ள கண்டன நயத்தை, எதையும் கண்டனம் தெரிவிக்கும் முறையை அவர் பின்பற்றவில்லை. சேனாவரையர் உரை எழுதும்போது பிறர் கருத்தைத் தெளிவாக எடுத்துக்கூறி, அவர் கருத்தினால் ஏற்படும் பிழையைச் சுட்டிக்காட்டி, அதன்பின்பு தமது கருத்தினை உரைப்பார். சில சூழ்நிலைகளில் வேறுபாடங்கள் உள என்பதையும் குறிப்பார். சிலவிடங்களில் இருவகை உரைகளையும் குறிப்பிடுவார்.

இலக்கணப்பகுதிகள் அனைத்தையும் ஓரே பொது நோக்காகக் கருதிச் சொல்லதிகாரத்தின் ஒவ்வோர் இயலுக்கும் உரை எழுதுகிறார். உரையில் அலங்கார நடை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

****

சிறுவினாக்கள்

1. தொல்காப்பிய உரையாசிரியர்கள் யாவர்?
2. சேனாவரையரின் பெயர்க் காரணத்தைத் தருக
3. நூலாசிரியரைச் சேனாவரையர் சிறப்பிக்கும் விதம் யாது?
4. சேனாவரையரின் ஊரும் காலமும் பற்றி எழுதுக
5. சேனாவரையர் சமயம் எது?

பெருவினாக்கள்

6. சேனாவரையர் பிறர் உரை மறுத்தல், மேற்கோள் காட்டல், இலக்கியச் செய்திகள் ஆகியவற்றை தம் உரையில் எவ்வாறு அமைத்துக் காட்டுகிறார்?

சேனாவரையரின் உரைமரபினை விவரி.

## குறிப்பு

## குறிப்பு